வெளியீடு 9-5-2006 Issued 9-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஜனவரி 21, 2006—தொகுதி 89—எண் 1

Saturday, the 21st January, 2006—Volume 89—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

923
21.9.06

**21–1–2006**

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-47 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்விக் கட்டணம் | 48-49 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| சீர்காழி தொகுதி, மகேந்திரபள்ளி முதல் காட்டூர் வரை கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்துதல் | 49-51 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 51 |
| (ஆ) மனுக்கள் குழு | 51 |
| (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 51-52 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 52 |

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு, 2006 — 53

(இ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 53-54

(ஈ) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 54-55

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 55-56

(ஊ) தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு, 2006 — 56-57

6. அறிவிப்பு—

தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆஇ) — 55

7. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—

*திரு. ப. அரசன் — 57-74

*திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் — 75-84

முனைவர் இரா.கு. தமிழரசன் — 84-101

*திருமதி தி. மைதிலி — 101-107

திரு. கே.எஸ். விஜயகுமார் — 107-115

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 116-120




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227005
சென்னை-600 008
நூலகம்



10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

3. **Minister for Finance** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies.

4. **Minister for Law and Information Technology** .. **The Hon. Thiru D. Jayakumar:**

   Law, Courts and Information Technology.

5. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**

   Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non- conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 17-1-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் நிலை குழு அலுவலர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (பொறுப்பு) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., பி.ஜி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப் ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி இரா. ரேவதி, எம்.ஏ. | - செயலாளரின் தனிச் செயலாளர் (சார்புச் செயலாளர் நிலை) |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி. |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |

| | | |
|---|---|---|
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | செங்கல்பட்டு |
| 21. | ஆறுமுகம், திரு. த. | திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | திருவாடனை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | ஏற்காடு (ஆ.வா.) |
| 41. | இன்பத்தமிழன், திரு. | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | |
|---|---|---|
| 42. | ஈஸ்வரன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. வெ. | செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஆர்.டி. | தேனி |
| 50. | கணேசன், திரு. ஐ. | எடப்பாடி |
| 51. | கணேசன், திரு. வி. | மங்களூர் (செ.வ.) |
| 52. | கண்ணன், திரு. ஏ.எஸ். | பொன்னேரி (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. க.ரா. | சத்தியமங்கலம் |
| 54. | கந்தசாமி, திரு. கா. | குன்னூர் (செ.வ.) |
| 55. | கருணாகரன், திரு. கே.சி. | சிங்காநல்லூர் |
| 56. | கருணாநிதி, திரு. மு. | சேப்பாக்கம் |
| 57. | கருப்பசாமி, திரு. சொ. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. | கருப்பணன், திரு. கே.சி. | பவானி |
| 59. | கலாவதி, திருமதி கு. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 60. | கனகதாரா, செல்வி சி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 61. | கனிதா சம்பத், திருமதி எஸ். | திருப்போரூர் (செ.வ.) |
| 62. | காசாம்பு பூமாலை, திருமதி | சங்கராபுரம் |
| 63. | காமராஜ், திரு. மே.ப. | தாரமங்கலம் |
| 64. | கார்த்தி, திரு. மு. | சேலம்-2 |
| 65. | காளிமுத்து, டாக்டர் கா. | திருமங்கலம் |

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
68. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
69. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
70. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
71. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
72. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
73. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
74. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
75. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
76. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
77. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
78. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
79. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
80. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
81. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
82. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
83. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
84. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
85. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
86. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
87. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
88. சாமி, திரு. ஆர். - மேலூர்
89. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்



90. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
91. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
92. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
93. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
94. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
95. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
96. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
97. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
98. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
99. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
100. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
101. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
102. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
104. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
105. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
106. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
107. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
108. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
109. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
110. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
112. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
115. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
116. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
117. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
118. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
119. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
120. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
121. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
122. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
123. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
124. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
125. துரைமுருகன், திரு. .. காட்பாடி
126. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
127. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
128. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
129. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
130. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
131. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
132. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
133. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
134. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
135. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு



136. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
137. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
138. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
139. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
140. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
141. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
142. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
143. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
145. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
150. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
151. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
152. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
153. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
155. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
156. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்

157. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
158. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
159. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
161. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
162. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
163. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)
167. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
168. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
170. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
171. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
172. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
173. மணி, திரு. டி. - விளவங்கோடு
174. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
175. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
176. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
177. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
178. மில்லர், திரு. அ. - கூடலூர்
179. முரளிதரன், திரு. கே.வி. - தளி



180. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
181. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
182. மைதிலி, திருமதி தி. - காஞ்சிபுரம்
183. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
184. மோகன், திரு. ப. - சின்னசேலம்
185. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
186. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
187. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
188. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
189. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
190. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
191. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
192. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
193. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
194. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
195. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
196. ராஜா, திரு. எச். - காரைக்குடி
197. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
198. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
199. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
200. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்... திரு. மா.ப. - பேரூர்
201. ரோகிணி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
202. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

203. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
204. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
206. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
213. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
214. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
215. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
216. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
217. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
220. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
221. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
222. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
225. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி



226. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. (வெற்றிடம்) .. அந்தியூர் (செ.வ.)
233. (வெற்றிடம்) .. வந்தவாசி (செ.வ.)
234. (வெற்றிடம்) .. தாராபுரம் (செ.வ.)
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 8, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜனவரி 21, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

ஒன்றன்மேல், ஒன்றாக அடுக்கிப் பல துன்பங்கள் வந்தபோதிலும், அவற்றைக் கண்டு மனங்கலங்காதவரை, அடைந்த துன்பம், தானே துன்பப்பட்டு மறைந்தொழியும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 61, திரு. ஆர். சாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**61—**

### மகளிர் கல்லூரி

*** 72831—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் நிதியைப் பயன்படுத்தி இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மூலமாக மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 21

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலைச் சுற்றி பல கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருவதாலும், திருக்கோயில்மூலம் இரண்டு பள்ளிகள் செயல்பட்டு வரும் நிலையிலும், கல்லூரி தொடங்கிட அடிப்படை கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், நிர்வாகச் செலவினங்கள் போன்றவற்றிற்கு சுமார் ரூ.8 கோடி செலவிட திருக்கோயிலில் தேவையான நிதி வசதியில்லை என்பதாலும் புதியதாக மகளிர் கல்லூரி ஒன்று திருக்கோயில் நிதியைப் பயன்படுத்தித் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள்மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியிலுள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நிதியிலிருந்து மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்ற கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். மேலூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. மேலூர் தொகுதியில் அதிகமான மாணவ, மாணவியர்கள் படித்து, தேர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, மேலூர் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் 12 ஆம் வகுப்பு தேர்வில் மட்டும் ஆண்டுக்கு ஆயிரம் பேர்களுக்கு மேல் தேர்ச்சி அடைகிறார்கள். ஆனால், மேலூர் தொகுதியில் ஒரேயொரு கலைக் கல்லூரிதான் இருக்கிறது. அதிலே, ஆண்டுக்கு 350 பேர் மட்டும்தான் மொத்தத்தில் புதிய விண்ணப்பங்கள்மூலம் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால், மேலூர் தொகுதியில் மட்டும், மேலூரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 256 பேரும், மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 449 பேரும், கொட்டாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 88 பேரும், கருங்காலக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 106 பேரும், வெள்ளலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 117 பேரும், திருவாதவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 73 பேரும், ஏ. வெள்ளாளப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 84 பேரும் தேர்வு எழுதுகிறார்கள். அப்படி தேர்வு எழுதி வெற்றிபெற்று வருகின்ற நேரத்திலே, மேலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் 350 பேர்தான் தேர்வு செய்யப்படுகிறார்கள். மீதியுள்ள மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாணவிகளுக்கு தனியாக ஒரு கலைக் கல்லூரியை ஆரம்பித்தால், ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள் படிப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும். புரட்சித் தலைவி

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 0 9



2006 ஜனவரி 21]

அம்மாவினுடைய இந்த ஆட்சிக் காலத்தில், இதுவரை நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து எந்த அரசும், எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத சாதனையை நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் எல்லா துறைகளிலும் செய்து சாதனை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பேர்பட்ட இந்த நல்ல அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், பழநி ஆண்டவர் திருக்கோயில் ஒரு கல்லூரியை நடத்தி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது; அதேபோல் மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் இருக்கிற நம்முடைய கள்ளழகர் திருக்கோயில், நல்ல இயற்கைச்சூழல் வாய்ந்த, கொடைக்கானல், ஊட்டி போன்ற தோற்றம் உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது; அங்கே ஒரு மகளிர் கல்லூரியை ஆரம்பித்தால், நிச்சயம் ஏழையெளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே இருக்கும். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு அனைத்துத் துறைகளையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; வழிநடத்தி, இன்றைக்கு முன்னோடியாக கொண்டுபோய் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கல்வித் துறைக்கும் முதலமைச்சர் அம்மா அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து, இன்றைக்கு இந்தியாவிலேயே கல்வித் துறையை முதலிடத்திற்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, நல்லாட்சி, மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டுபோய், மேலூர் தொகுதியில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலின் நிதியைப் பயன்படுத்தி, மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(3)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயிலாகும். பசலி 1411-ன்படி திருக்கோயில் வருமானம் ரூபாய் 2 கோடியே 94 இலட்சம் ஆகும். திருக்கோயில் நிதியிலிருந்து நிர்வாகத்திற்கு சுமார் 76 இலட்சமும், பூசை வகைக்கு சுமார் 13 இலட்சத்து 50 ஆயிரமும் செலவிடப்படுகிறது. 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் இத்திருக்கோயில் முதலீட்டுத் தொகையில் உள்ளது. இதன்மூலம் பெறும் வட்டி திருக்கோயில் வருமானங்களில் முக்கிய வருமானம் ஆகும்.

[2006 ஜனவரி 21

முற்பகல் 10–05

மேற்படி திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் அருள்மிகு சுந்தரராஜர் ஆரம்பப் பள்ளி மற்றும் அருள்மிகு சுந்தரராஜர் உயர்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு கல்வி நிறுவனங்கள் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன. அழகர்கோயிலிலிருந்து மதுரை 21 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அழகர்கோயிலுக்கு அருகே சுமார் 2 கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ள நாயக்கன்பட்டி மற்றும் கிடாரிப்பட்டி ஆகிய இடங்களில் இருபாலரும் படிக்கும் SACS M.A.V.M.M. தொழிற்பயிற்சிக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 3 கிலோமீட்டர் தூரம் உள்ள கள்ளம்பட்டி என்னும் இடத்தில் இருபாலரும் படிக்கும் ஆரிய வைசிய கல்லூரி உள்ளது. மேலும், திருப்பாலை என்னும் ஊரில் யாதவ மகளிர் கல்லூரி மற்றும் யாதவ ஆடவர் கல்லூரி உள்ளன. மேலூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் இருக்கும் மேலூரிலேயே இருபாலரும் படிக்கும் அரசு கலைக் கல்லூரி ஒன்றும் உள்ளது. மேலும், மதுரை மாநகரைச் சுற்றி பல கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருவதாலும், திருக்கோயில்மூலம் இரண்டு பள்ளிகள் செயல்பட்டுவரும் நிலையிலும், திருக்கோயில் நிதி ஆதாரத்தினைக் கணக்கிடுகையில் கல்லூரி துவக்கிட, அடிப்படைக் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், நிர்வாகச் செலவினங்கள் போன்றவற்றிற்கு சுமார் 6 கோடி ரூபாயும், அத்துடன் ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் தொடர் செலவினங்களுக்கு 2 கோடியும் எதிர்கொள்ளத் தேவையான நிதிவசதி இல்லை. எனவே, திருக்கோயில் நிதியின்மூலம் அங்கே புதிய மகளிர் கல்லூரி கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிதி இல்லாத காரணத்தினாலே, அங்கே கல்லூரி கட்டுவதற்கு இடம் வேண்டுமென்றால், ஆலயத்தினுடைய இடத்தைக் கொடுக்கலாம். அரசின்மூலமாகக் கல்லூரி கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மூலம் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது அழகர்கோயிலைச் சுற்றி நிறையக் கல்லூரிகள் இருப்பதாகக் கூறினார்கள். அவை எல்லாம் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் போன்ற தனியார்களுடைய பொறியியல் கல்லூரிகள்தான் இருக்கின்றன. ஆனால், இரண்டு பள்ளிகள் அழகர்கோயில் திருக்கோயில் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. நான் கேட்பது.



2006 ஜனவரி 21]

மகளிர் கல்லூரி. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கள்ளழகர் திருக்கோயிலைப் பொறுத்த அளவிலே ஆண்டுக்கு 3 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆகையால், அம்மா அவர்களிடம் நீங்கள் இந்தக் கோரிக்கையைக் கொண்டுபோனால் உறுதியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொடுப்பார்கள். ஆகையால், அமைச்சர் அவர்கள் மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று—ஏனென்றால் தேனி மாவட்டம், மதுரை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலிருந்து எல்லாம் மாணவர்கள் மேலூருக்குத்தான் வருகின்றார்கள். அப்படி அவர்கள் வருகின்ற நேரத்திலே, மகளிருக்கு அதிகம் இடம் கிடைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மகளிரை முதலிடத்திற்குக் கொண்டு போவதற்கு, இந்தியாவிலேயே மகளிருக்காக அதிகத் திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்வதெல்லாம், கள்ளழகர் திருக்கோயிலின் சார்பாக மேலூர் தொகுதியிலே மகளிர் கல்லூரி ஒன்று அமைக்க மீண்டும் பரிசீலனை செய்து, அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டுபோய் மகளிர் கல்லூரி ஒன்றை உறுதியாக அமைத்துத்தர முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரி கட்டுவதற்கு நிதி இருந்தாலும், தற்சமயம் இருக்கின்ற 5 கல்லூரிகளும் ஏறக்குறைய 53 நிர்வாகங்களும் அரசினுடைய நிதியினைப் பெற்று நடந்து கொண்டிருக்கின்றன. தற்சமயம் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால் அரசினுடைய நிதி கிடைக்குமேயானால், உடனடியாகச் செய்யலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுரை மேற்குத் தொகுதியில் புகழ்பெற்ற தல்லாகுளம் பெருமாள் கோயில் இருக்கிறது. அங்கே உள்ள மக்கள் நடுத்தர, ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். பல தலைமுறைகளாக

அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் சுவாமியை தரிசனம் செய்துவிட்டு தங்களுடைய அன்றாடப் பணிகளைச் செய்யக்கூடிய பழக்க வழக்கத்திற்கு ஆளானவர்கள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு பக்தர்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்துக் கொண்டு வருகிறார்கள். கோயில்களிலே அன்னதானத் திட்டம்; பக்தர்கள் கோயிலுக்குச் செல்லுகின்றபொழுது காலணிகளைப் பாதுகாப்பதற்காக இலவச காலணி பாதுகாப்புத் திட்டம்; இப்படி எல்லாம் திட்டங்களை அறிவித்து வருகின்றபொழுது, சமீப காலமாக அந்தக் கோயிலிலே பக்தர்களிடத்திலே சுவாமி தரிசனம் செய்வதற்கு 1 ரூபாய் என்றும், மூலஸ்தானத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்கு 5 ரூபாய் என்றும் வசூல் பண்ணுவதாகச் செய்தி வருகிறது. அங்கே உள்ள மக்கள் என்னிடத்திலே தொலைபேசியிலே தொடர்புகொண்டு சொன்னார்கள். உடனடியாக அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலயங்களில் காலணிகளைப் பாதுகாப்பதற்குக்கூட கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்றும், ஆலய நிதியிலேயிருந்து சம்பளம் கொடுத்து அதைப் பாதுகாக்க வேண்டுமென்றும் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த ஆலயத்தில் பக்தர்கள் செல்கின்ற நேரத்திலே வசூல் செய்வதைக் கண்டறிந்து உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேண்டுமென்றால் டிக்கெட்டு வாங்கிச் செல்வதற்கு அவர்கள் முன்வந்தால் அப்படிப்பட்டவர்களை அனுமதிக்கப்படும். மற்றவர்கள் டிக்கெட் வாங்காமல், அனைவரும் சென்று அங்கு தரிசனம் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்புகாரில் இந்துசமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான பூம்புகார் கல்லூரி உள்ளது.



அக்கல்லூரியில் B.Sc. (Maths), B.Sc. (Physics), B.Sc. (Chemistry) போன்ற வகுப்புகள் உள்ளன. ஆனால், அந்தக் கல்லூரியில் Computer பயில்வதற்கு B.Sc. (Computer Science) வகுப்புகள் இன்னும் தொடங்கப்படவில்லை. நடப்பாண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ B.Sc. (Computer Science) தொடங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எங்கும் கணினிமயமாக்கப்படுகின்ற இந்தக் காலத்தில் அந்தக் கல்லூரியிலும் கணினி மையம் கொண்டு வருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொன்னம்பலம்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சமயநல்லூர் தொகுதியும், சாமி அண்ணன் மேலூர் தொகுதியும் அழகர்கோவில் கோட்டை வாசல் முன்பாக உள்ள பகுதிவரை ஒட்டியுள்ளது. மதுரையில் அனைத்துப் பாடத் திட்டங்களும் கல்லூரிகளில் உள்ளதால், அங்கு 10, 12 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் நிறையப் பேர் பயில வருகின்றார்கள். அங்குள்ள கல்லூரிகளில் இடத் தட்டுப்பாடு இருக்கிறது. ஏற்கெனவே இம்மாமன்றத்தில் நான் கூறியிருக்கின்றேன். பெண்களுக்கு ஒரு கல்லூரி கட்டித் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நேற்று அறிவித்த அறிவிப்பினால், இன்று தமிழகத்திலுள்ள மக்கள் அனைவரும், துள்ளாத மனமும் துள்ளும், சொல்லாத வாழ்த்துகள் எல்லாம் குவியும் என்ற நிலையில், தமிழக மக்களுடைய ஆதரவு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இருக்கின்ற இந்த வேளையில், அருமை அண்ணன் சாமி அவர்கள் கேட்டதைப் போல எங்களுக்கும் ஒரு பெண்கள் கலைக் கல்லூரி கட்டித் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் தற்சமயம் புதிதாக மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு வேண்டிய நிதிகள் இருந்தாலும், பின்னால் அந்தக் கல்லூரிகளை நடத்திச் செல்வதற்கு வேண்டிய நிதிவசதி இல்லாத காரணத்தினாலே, இப்போது அந்தக் கல்லூரிகள் கட்டுவதற்கு

தடையாக இருக்கிறது. இருந்தாலும், உங்களுடைய கோரிக்கைக் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 62, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**62—**

### சத்துணவுக் கூடங்கள்

***19474—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 9-வது வட்டத்திற்குட்பட்ட சத்துணவுக் கூடங்களை சீரமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மைய எண் 820-க்கு மாநகராட்சி மன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.6.20 இலட்சத்தில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டும் பணி 22-08-2005 அன்று தொடங்கப்பட்டு நான்கு மாத காலத்திற்குள் முடிக்கக் கருதப்பட்டது. இருப்பினும், பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மாநகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும். எனவே, வரும் பிப்ரவரி மாதம் 2006-ல் நடைபெறவுள்ள மாநகராட்சிக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்படவுள்ளது.

மைய எண் 821-க்கு சிறு பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டாலே போதுமானது. பராமரிப்புப் பணிகள் 29-07-2005 அன்று தொடங்கப்பட்டு, 31-08-2005-க்குள் முடிக்கக் கருதப்பட்டது. இருப்பினும், மழை வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தினால், மறுவாழ்வுப் பணிகளில் மாநகராட்சி முன்னுரிமை அடிப்படையில் செயல்பட்டதால் இப்பணிகளில் தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், சத்துணவு மைய பராமரிப்புப் பணிகள் 31-03-2006-க்குள்



முடிக்கப்படும். அதேபோன்று மைய எண் 54 மற்றும் 55-ஐப் பழுதுபார்க்கும் பணிகள் 31-03-2006-க்குள் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 9-வது வட்டத்தில் செயல்படுகின்ற அங்கன்வாடிகள் மற்றும் சத்துணவுக் கூடங்கள் பராமரிப்பு மற்றும் புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், 1982 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாள் – மறைந்த மனிதப் புனிதன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த இந்தச் சத்துணவுத் திட்டமானது, அன்றையதினம் எதிர்த்தவர்களால்கூட பின்னால் அந்தத் திட்டத்தை விட்டுவிட்டு ஆட்சியை நடத்த முடியாது என்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுச் சென்றார். அதன்பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு வலிவும் பொலிவும் சேர்த்துள்ளார். இன்றைக்குக்கூட, 2006-2007 ஆம் ஆண்டு ரூ.559.76 கோடியை ஒதுக்கீடு செய்து, வருங்கால சந்ததியினர் வளமோடு வாழ வேண்டும் என்பதற்காக சத்துணவுத் திட்டத்தை நல்லமுறையிலே சீரமைத்து வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், இந்தச் சத்துணவுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் கட்டடங்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்பட்டவை. ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டினாலான இந்தக் கட்டடங்களில், இன்றையதினம் கோடைக் காலங்களிலே அங்கன்வாடிகளிலே இருக்கின்ற இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதால், போதிய அளவு சிமெண்ட் ஓட்டினாலான கட்டடங்கள் மாற்றப்பட்டு, இன்றைக்கு கான்கிரீட் தளங்களாக மாறி வருகின்றன. இருந்தாலும், முழு அளவு கான்கிரீட் தளங்களாக மாற்றப்படுவதற்கு, ஒட்டுமொத்த ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டினாலான அந்தக் கட்டடங்களை மாற்றி, கான்கிரீட் தளத்தால் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்து மறைந்த புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட

சத்துணவுக் கூடங்கள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் உள்ளன என்று கூறினார். அதுபோன்ற கட்டடங்களையெல்லாம் பழுதுபார்ப்பதற்காக இன்றைக்கு மாண்புமிகு 'அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. கடந்த 2001–2001 ஆம் ஆண்டுகளில் அரசு சிறப்பு நிதியிலிருந்து 2.5 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்து, இதுபோன்ற பழுதடைந்த - சத்துணவுக் கூடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களைப் பழுதுபார்க்கும் பணியினை, சீரமைக்கும் பணியினை, இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செய்து முடித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்கு 2.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பழுதுபார்ப்புப் பணியை மேற்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரத்தில், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் எத்தனை சத்துணவுக் கூடங்கள், எத்தனை உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த அங்கன்வாடிகள் செயல்படுகின்றன என்பதையும், அதில் எத்தனை குழந்தைகள் பயன்பெறுகிறார்கள் என்பதையும் அறிகின்ற அதேநேரத்தில், இப்படி சிமெண்ட் ஓடுகளாலான சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி அங்கன்வாடி கட்டடங்களை மாற்றி, கான்கிரீட் தளத்தால் கட்டப்படுகின்ற நேரத்தில், ஒருசில கட்டடங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்படுகின்றது; ஒருசில கட்டடங்களுக்கு மின்சார வசதி இல்லாத சூழ்நிலை நிலவுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? குழந்தைகள் பயன்பெறுகின்ற அந்த அங்கன்வாடிகளுக்கு முழுவதுமாக மாற்றியமைக்கப்படுகின்ற கான்கிரீட் தளங்கள் உள்ள கட்டடங்களுக்கு மின்சார வசதி செய்து தர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 51 பள்ளி சத்துணவு மையங்களும், 106 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களும் உள்ளன. மேலும், இந்த மாநகராட்சியின் சார்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சத்துணவு மையக் கூடங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதைப்பற்றி



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு கேட்டிருக்கின்றார்கள். இதைப்பற்றி ஏற்கெனவே சட்டப் பேரவையில் நான் பதிலளித்திருக்கின்றேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், எனது திருநாவலூர் தொகுதியில் அடங்கிய திருநாவலூர் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய ஒன்றியங்களில் எழுபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் நல மையங்கள் புதியதாக ஆரம்பிக்கப்பட்டு, அவற்றிலே சில மையங்கள் துணை மையங்களாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அந்த மையங்களுக்கு எல்லாம் தற்போது கட்டட வசதி இல்லாமல் ஆங்காங்கே குழந்தைகள் தனியார் கட்டடங்களிலும், சில இடங்களிலே இடங்கள் இல்லாமல் மரத்தடியிலேகூட அந்த மையங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த மையங்களுக்கு புதியதாக கட்டட வசதியைச் செய்து கொடுத்தால்தான், அந்தக் குழந்தைகள் நல்லமுறையிலே ஆக்கமும் ஊக்கமும் பெறுகின்றவகையிலே, அந்தக் குழந்தைகள் நல மையங்கள் இயங்கும் என்பதைக் கருத்திலே கொண்டு-இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் கொண்டுவந்த சத்துணவுத் திட்டத்தை, தரமுயர்த்தப்பட்ட அளவிலே எந்த அளவிற்கு இயக்கி வருகிறார்களோ, அதேபோன்று இந்தக் குழந்தைகள் நல ஊட்டச் சத்துணவுத் திட்டத்தையும் தரமுயர்த்துகின்றவகையிலே அம்மா அவர்கள் கூடுதலாக மையங்களை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள்; அவற்றிற்கு கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அந்த வகையிலே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த மையங்களுக்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் பணம் கொடுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன; தமிழக முதல்வர் அம்மா அவர்கள் துவக்கிய நமது கிராமத் திட்டத்தின் மூலமாகக்கூட கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருந்தபோதிலும் 100–க்கும் மேற்பட்ட பழைய மற்றும் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மையங்களுக்குக் கட்டட வசதி இல்லாத காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஜனவரி 21

முற்பகல் 10–20

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து இதுபோன்ற சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடிகளுக்கெல்லாம் புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, கட்டடங்கள் ஒரு சில பகுதிகளில் கிராமப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, வேலைக்கு உணவுத் திட்டத்திலிருந்தும் ஊரக வளர்ச்சிப் பகுதிகளில் 2004–2005 ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 3,050 சமையல் கூடங்கள் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளன. அதுபோக, 2005–2006–லும் மேற்படித் திட்டத்திலிருந்து அதுபோன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனையும் மீதமுள்ள அதுபோன்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்காக மாநகராட்சி மற்றும் ஊராட்சி-பஞ்சாயத்து யூனியன்களிலும் பொது நிதியிலிருந்து கட்டடங்கள் கட்ட நிதி எடுத்துக்கொள்ளலாம் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 63, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**63—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

*** 59128—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், வாழவந்தி துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், வாழவந்தி துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதி மக்களினுடைய பிரச்சினைகளை இந்தச் சட்டமன்றத்திலே எடுத்துக் கூறுவதற்காக, மக்கள் சட்டமன்ற உறுப்பினர் மலையப்பசாமி அவர்களுக்கு வாய்ப்பு வழங்கி இருந்தாலும்கூட, அவர் இன்றைக்கு இந்த அவைக்கு வந்து அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால், அனைத்து தொகுதி மக்களுக்கும் நல்ல பணிகளை, நல்ல திட்டங்களை அறிவித்து, பணியாற்றி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களினுடைய இந்த ஆட்சிக் காலக் கட்டத்தில் கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றிய வாழவந்தி துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1,417 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மக்கள் தொகை அடிப்படையிலே பார்க்கும்போது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இதுபோன்ற கோரிக்கைகள் வரும்போது அவற்றை நிறைவேற்றுவதற்கான பரிந்துரைகள் சுகாதாரத் துறைமூலமாக மத்திய அரசுக்கு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரையினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்போது துணை சுகாதார நிலையங்கள் எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்களாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கண்டமங்கலம் சுப்பிரமணியன்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது கண்டமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட விக்கிரவாண்டி சிறப்பு ஊராட்சியில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்றித் தருவதற்கு

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கிராமப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி 106 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்றையதினம் மேம்படுத்தி, மக்களுடைய வாழ்விலே ஒரு பெரிய முன்னேற்றத்திற்கான நடவடிக்கையை இந்த அரசு செய்ததைப் போல, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்ததைப் போல, எந்த அரசும் இதுவரை செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மேலாக, இந்த 106 போக, இன்னும் 71 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட இருக்கின்றன. வருகின்ற நிதி ஆண்டிலே நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று ஆங்காங்கு இருக்கக்கூடிய அந்த 71 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்று சூளுரைத்து இன்றைக்கு அல்லும், பகலும் அயராது பாடுபட்டு வருபவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சுகாதாரத் துறையில் 10.5 கோடி ரூபாய் செலவிலே சென்னைப் பொது மருத்துவமனையை தரம் உயர்த்தி இன்றைக்கு ஆசியாவிலேயே முதன்மை மருத்துவமனையாக ஆக்கிக் காட்டிய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும். அவருடைய அமைச்சரவையிலே சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கிற அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். தற்பொழுது ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தப் பகுதியிலே 30,000 ஜனத்தொகை இருக்கவேண்டுமென்று மத்திய அரசு ஒரு விதியைக் கூறியிருக்கின்றது. அந்த விதியைத் தளர்த்தி, 20,000, 15,000 ஜனத்தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விதியானது மத்திய அரசின்மூலமாக விதிக்கப்பட்ட ஒரு விதியாகும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது மக்கள்தொகையினை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது, இன்னும் கூடுதலாக 61 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றது. ஆக, இந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும்பொழுது, உங்களுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்த துணை சுகாதார நிலையமோ அல்லது அந்த மக்கள்தொகை அடிப்படையில் பார்க்கும்பொழுது, அதற்கான வாய்ப்புகள் வரும்பொழுது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையிலே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலம், சுகாதாரத் துறையினுடைய பொற்காலம் என்று சொல்லத்தக்க வகையிலே, மருத்துவர்கள் நியமனம், மருந்தாளுநர்கள் நியமனம், செவிலியர் நியமனம், மருத்துவ ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தல் போன்ற அற்புதமான பணிகளைத் தொடர்ந்து இந்த ஐந்து ஆண்டு காலத்திலே நிறைவேற்றி இருக்கின்றோம். அந்த வகையிலே, மருத்துவத் துறையினுடைய வரப்பிரசாதமாக, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, உலக வங்கியின் மூலமாக பல கோடி ரூபாய்களை ஒதுக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாணை வெளியிட்டுள்ளார்கள். அதற்காக மாவட்ட மக்களுடைய சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சுகாதாரத் துறைக்கும் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அப்படி அரசாணை வெளியிடப்பட்ட அந்தப் பணிகள், புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும், இராணியார் மகப்பேறு மருத்துவமனைக்கும் எப்போது துவங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதல் கட்டமாக ஐந்து மாவட்டங்களைத் தேர்வு செய்தார்கள். அந்த ஐந்து மாவட்டங்களில் புதுக்கோட்டை மாவட்டமும் ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கூறியதுபோல், ஏற்கெனவே புதுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்கும், சுனாமியின்மூலமாக எற்பட்ட, அந்த விளைவின் காரணமாக, அதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவிலே அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்படும். ஒப்பந்தங்கள் கோரப்பட்டவுடனே, வேலைகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், தமிழக முதல்வர் தங்கத் தாரகை அம்மா அவர்கள், எதிரிகள் எதிர்பார்க்காத அறிவிப்பை அறிவித்து, தமிழகமே ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், எதிர்க்கட்சிகளே காணாமல் போயிருக்கிற நிலையை இன்றைக்குப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகிழ்ச்சி, மக்கள் மத்தியிலே இன்றைக்கு அரசு ஊழியர் முதல், கீழேயிருக்கிற அத்தனை ஆசிரியர்கள் வரை புன்னகையோடு பூத்துக் குலுங்குகிறார்கள். தமிழகம் அருமையான முறையிலே மகிழ்ச்சியோடு இருக்கிற இந்த நேரத்தில், என்னுடைய ஆரணி தொகுதியிலே ஒண்ணுபுரம் என்ற கிராமம், துணைச் சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. சுமார் 500 பேர் தினசரி நோயாளிகள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்த ஒண்ணுபுரம், நெசவாளர்கள் நிறைந்த பகுதி. லுங்கி மற்றும் பட்டுச் சேலைகள் தயாரிக்கும் பெரிய கிராமம். அதேநேரத்திலே, அதைச் சுற்றி 20 கிராமங்கள் பயன்பெறுகின்ற வகையில், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அதைத் தரம் உயர்த்தி, அம்மாவின் ஆட்சி அதை அளிக்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மாவின் ஆணையைப்பெற்று, அந்த ஒண்ணுபுரம்



கிராமத்திற்கு 30 படுக்கைகள் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார். எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிற இந்த நேரத்தில், இதையும் பெற்றுத்தர வேண்டுமென்று ஆரணித் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டு, அம்மாவிற்கு மென்மேலும், மீண்டும் அம்மாவின் ஆட்சி மலரும் என்ற நல்ல வார்த்தையைச் சொல்லி, உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியிலே இருக்கின்ற மருத்துவமனை, ஒரு மாவட்ட மருத்துவமனை. அதற்குப் போதிய கட்டட வசதிகள் இல்லையென்று ஏற்கெனவே இந்த அவையிலே வினா எழுப்பிய நேரத்தில், உலக வங்கி நிதி வந்தவுடனே, அதற்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். இப்போது உலக வங்கி நிதி பெறப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், அந்த இடத்திலே போதுமான இடவசதி இல்லையென்கின்ற காரணத்தினால், பழமையான ஓட்டுக் கட்டடங்கள், எந்தவிதத்திலும் உபயோகம் இல்லாத நிலையிலே இருந்துகொண்டிருக்கின்ற அந்தக் கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடிக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். பொதுவாக, மாவட்ட மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, வட்ட மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, வட்டம் சாரா மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, உலக வங்கியானது இதுபோன்ற இடங்கள் இல்லாத இடத்திலே, அந்தப் பழைய கட்டடத்தை இடித்து புதியதாக மாடிக் கட்டடங்களைக் கட்டுவதற்காக அனுமதி தந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய உசிலம்பட்டியினுடைய தலைமை மருத்துவமனைக்கும் அதுபோன்ற விதிகள் கண்டிப்பாகப் பொருந்தும். ஆகவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, இரண்டாவது கட்டமாக எடுக்கக்கூடிய, மதுரை மாவட்டத்தின் சார்பாக எடுக்கக்கூடிய, உசிலம்பட்டியினுடைய தலைமை மருத்துவமனைக்கு, அந்த உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று

[2006 ஜனவரி 21

புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, இரண்டாவது கட்டமாக எடுக்கக்கூடிய, மதுரை மாவட்டத்தின் சார்பாக எடுக்கக்கூடிய, உசிலம்பட்டியினுடைய தலைமை மருத்துவமனைக்கு, அந்த உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன, இடம் இல்லாதபோதிலும் அடுக்குமாடி கட்டடம் கட்டப்படும் என்பதை மாமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மோகன், திரு. சந்தானம் நன்றி சொல்கிறார்; கொஞ்ச நேரம் இருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல அறிவிப்பைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சின்னசேலம் தொகுதி, கச்சராயபாளையத்திலே 30 படுக்கைகள் கொண்ட சிறந்த மருத்துவமனையை என்னுடைய தொகுதிக்கு தந்தமைக்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தொகுதி மக்களின் சார்பாக பணிந்து நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, சின்னசேலம் தொகுதியினுடைய தலைநகரான சின்னசேலத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தித் தந்திட அரசு ஆவன செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 64, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**64—**

## அருங்காட்சியகம்

***19109—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை காதி கிராப்ட் அங்காடியின் மாடியில் உள்ள அண்ணல் காந்தியடிகள் அருங்காட்சியகம் பொதுமக்களும், மாணவர்களும் நாள்தோறும் கண்டு களிக்கும் வகையில் ஒரு மையமான இடத்திற்கு மாற்றப்படுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளும் இல்லை. வினா எண் 65, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**65—**

## பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை

***30701—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களின் மைய பகுதியில் தக்காளி பழம், பப்பாளி பழம் போன்ற பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2006 ஜனவரி 21

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதர்மம் எங்கெல்லாம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன் என்று சொன்ன கண்ணபிரான் போன்று, தமிழகத்து மக்கள் எங்கெல்லாம் துயரம் அடைகிறார்களோ அங்கெல்லாம் தானாக நேரில் சென்று, அவர்களின் குறைகளைத் தீர்த்து, நல்லாட்சி செய்து வரும் எங்களின் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி எனது வினாவைக் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் மையப் பகுதியில் தக்காளி மற்றும் பப்பாளி பழங்கள் அதிகமாக விளைகின்றன. அதனைச் சுற்றி மசிகம், மதனாபல்லி, சாரங்கல், மிட்டபல்லி, ஓனாங்குட்டை, கொத்தூர், பாலூர் போன்ற குக்கிராமங்களிலும் பப்பாளி பழம் மிகுதியாக விளைகின்றது. மிகக் குறைந்த விலைக்குப் பழங்கள் விற்கப்படுவதால் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அங்கு அமைக்கப்பட்டால் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் இதுவரை 12 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பேரணாம்பட்டு தொகுதி பத்ரபல்லி மற்றும் எருக்கம்பட்டு போன்ற கிராமங்களின் மையப் பகுதியில் தக்காளி மற்றும் பப்பாளி பழம் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு தனியாரிடமிருந்து இதுவரை எந்த விண்ணப்பங்களும் வரப்பெறவில்லை. மேற்படி தொழில் தொடங்க வருகின்ற தொழில் முனைவோர்களுக்கு அனைத்து உதவிகளையும் மாவட்ட தொழில் மையம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. இதுபோன்ற தொழில் முனைவோர் பழச்சாறு தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.



2006 ஜனவரி 21]

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் பழங்கள் அதிகமாக விளைந்தபோதிலும் அப்பழங்களை மிகுதியாகப் பயன்படுத்த முடிவதில்லை. வெளி இடங்களுக்குக் கொண்டு செல்வது என்றாலும் ஏழை மக்களால் அதிகம் செலவிட வேண்டியுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பழங்களை கொள்முதல் செய்ய தொழிற்சாலை ஒன்றை அமைத்தால் அவர்களது வருமானம் நிலையாக இருக்கும். எனவே, சாதனை மேல் சாதனை புரிந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய இனிய நல்லாட்சியில் பத்ரபல்லி மற்றும் எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் தக்காளிப் பழம் மற்றும் பப்பாளிப் பழம் போன்ற பழங்களின் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே முதலில் சொல்கிறபோதே பதிலளித்து இருக்கிறேன். யாராவது தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அனைத்து உதவிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே பேரணாம்பட்டு தொகுதியிலே 10 விண்ணப்பங்கள் வரப்பெற்று அதிலே இரண்டு விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டுவிட்டது. மீதி இருக்கக்கூடிய விண்ணப்பங்களிலே பழச்சாறு தயாரிக்க வேண்டுமென்று யாரும் கோரிக்கை தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும் தொழில் முனைவோர்களை அணுகி, அரசுக்குத் தெரிவித்தால் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாவட்ட தொழில் மையத்தால் பழச்சாறு தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 66, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2006 ஜனவரி 21

66—

## பேருந்து வசதி

***38773—திரு. லா. சந்தானம்:**

*மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து தும்மக்குண்டு வந்து செல்லும் பேருந்தினை பிச்சம்பட்டி, கரிசல்பட்டி வழியாக இயக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து தும்மக்குண்டு வந்து செல்லும் பேருந்து பிச்சம்பட்டி, கரிசல்பட்டி வழியாக இயக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கின்ற இந்த பிச்சம்பட்டி, கரிசல்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களிலிருந்து ஏறக்குறைய 1-1/2 கிலோ மீட்டர் தூரம் அளவுக்கு அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் நடந்து வந்துதான் பேருந்தைப் பிடிக்கின்ற ஒரு சூழல் இருக்கின்றது. அதோடுகூட இந்த தும்மக்குண்டிலிருந்து உசிலம்பட்டி செல்கின்ற பேருந்து இந்த இரண்டு ஊர்களையும் தொட்டு வருகின்ற காரணத்தினால், எந்த ஊரும் நடுவிலே விடுபடவில்லை என்கின்ற நிலையும் இருக்கின்ற காரணத்தினால், அந்த மக்களுக்கு ஒரு வசதியை ஏற்படுத்தித் தரும்பொருட்டு, அதோடு அந்தச் சாலைகள்கூட மிகச் சிறப்பாக கிராமிய சாலை திட்டத்தின்மூலமாக சென்ற ஆண்டுதான் நேர்த்தியாகப் போடப்பட்டிருக்கின்றன என்கின்ற காரணத்தினாலும், இந்தப் பகுதி மக்கள் பயன்படுகின்ற அளவுக்கு அங்கே செல்கின்ற பேருந்தை அந்தக் கிராமங்களை இணைத்து செல்கின்ற அளவிலே செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்களுடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இதனால் மிகப் பெரிய பளு அந்தப் பேருந்துகளுக்கு இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வோம் என்பதைக் காட்டிலும் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து, அடுத்த வாரமேகூட நீங்கள் நினைத்தால் உடனடியாக அந்த மாற்று வழித்தடத்தில் இயக்க முடியும் என்கின்ற காரணத்தினால், பரிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு முன்னாலேயே நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதைச் செய்யும் என்கின்ற நோக்கத்தோடு உங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு கோரிக்கையை நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கனிதா சம்பத்.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய கீரப்பாக்கம் ஊராட்சியில் வாழும் மக்கள், விவசாய மக்கள், மாணவ, மாணவிகள் அங்கு பஸ் வசதி இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஏழை எளிய மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டு வரும் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அந்த மக்களின் நலனைக் கருதி புதிய வழித்தடம் அமைத்துத் தரப்படுமா? அப்படி இல்லையென்றால், திருப்போரூர்-மாம்பாக்கம் வரை வரும் பஸ் வசதியை அங்கே கீரப்பாக்கம் வரை வர, வேறு வழித்தடம் அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நமது கனிதா சம்பத் அவர்கள் நேற்றே என்னிடம் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். நேற்றே அவருக்குச் சொல்லியிருக்கிறேன், நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு-அந்தப் புதிய வழித் தடம் விடுவதற்கு வாய்ப்பு

[2006 ஜனவரி 21

இல்லை; ஆனால், அந்த கீரப்பாக்கத்திற்கு, 3 கிலோமீட்டர் தொலைவிலுள்ள அந்த கீரப்பாக்கத்திற்கு, எக்ஸ்டென்ஷன்—வழித் தடம் நீட்டிப்பைச் செய்து தருவதாக அவரிடம் சொல்லியிருந்தேன். அதற்கு அவரும் சரியென்று சொல்லியிருந்தார். ஆகவே, அந்த கீரப்பாக்கத்திற்கு, ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்தைத் தடம் நீட்டிப்புச் செய்து கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் போபாலுக்கு பேருந்து கேட்கமாட்டேன். இப்போதுள்ள அரசு, நெடுஞ்சாலைத் துறையிலே மிகப் பெரிய சாதனைகளைச் செய்து, நெடுஞ்சாலைத் துறை சாலைகள் எல்லாம் மிகச் செம்மையாக, நல்ல முறையில் இருக்கின்றன. நிறைய புதிய சாலைகள் இந்த அரசினாலே செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சாலைகளிலே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியிலே, பல்வேறு இடங்களிலே நல்ல சாலைகள், போக்குவரத்துக்குச் சிறப்புடையனவாக இருக்கின்றன. அதனால், அந்தப் பகுதியிலே பேருந்து வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் கல்வி பயின்று தமிழகம் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையோடு, பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கிய, 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கிய, மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ்களும் வழங்கிய மாண்புமிகு



2006 ஜனவரி 21]

அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என் நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரில் சில அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்கள் அம்மாபேட்டை காவல் நிலையம் வழியாகச் செல்லாமல் காலை, மாலை இரு வேளைகளிலும் பள்ளி மாணவர்கள் செல்லும் நேரங்களில் செல்லாமல் வழித்தடம் மாற்றி, அம்மாபேட்டை மிலிட்டரி ரோடு வழியாகச் சென்றுவிடுகின்றன. இதனால் மாணவர்கள் மிகவும் பாதிப்பு அடைகின்றார்கள். எனவே, அவர்களுக்கு அறிவுரை வழங்கி, மீண்டும் அம்மாபேட்டை காவல் நிலையம் வழியாகச் செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் வசதிக்காக மயிலாடுதுறையிலிருந்து பெரும்பூர் வரை கொல்லுமாங்குடி வழியாகச் சென்ற நகரப் பேருந்தினை கடந்த ஆட்சிக் காலத்தில் சாலைகள் சரியில்லை என்ற காரணத்தினால் நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சாலைகள் எல்லாம் 'செப்பனிடப்பட்டு மிகச் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினால், நிறுத்திய அந்த நகரப் பேருந்தினை மீண்டும் மங்கநல்லூர், வேலங்குடி வழியாக பெரும்பூருக்கு இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு போக்குவரத்துத் துறையை, நட்டத்திலே இருந்த அந்தத் துறையை, இன்றைக்கு இலாபம் அடையச்

[2006 ஜனவரி 21

செய்து வைத்திருக்கிறார்கள்; அவர்களுடைய நிர்வாகத் திறமையினாலே இலாபம் அடையச் செய்து வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல்வேறு கிராமங்களிலே நல்ல தரமான சாலைகளை அமைப்பதற்காக நிறைய நிதியை ஒதுக்கித் தந்து, அதையும் மிகச் சிறப்பான முறையிலே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, புதிதாகப் போடப்பட்டிருக்கிற சாலைகளில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாகப் பேருந்துகளை இயக்க முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது, புதிய வழித்தடங்களிலே புதிதாக பேருந்துகளை இயக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியிலே தோழம்பாளையத்திலிருந்து கோபநாரி வரை இருக்கிற அந்த 16 கிலோமீட்டர் சாலையை கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் செலவிலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கி இன்றைக்கு அந்தச் சாலையை அமைத்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டுப்பாளையத்திலிருந்து அந்த கோபநாரி ஆதிவாசி மக்கள் வசிக்கிற பகுதிக்கு புதிய பேருந்தை இயக்க முன்வருவாரா? இந்தப் பகுதியிலே மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். இந்தச் சாலை இரண்டு மாநிலங்களையும் இணைக்கிற சாலையாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்தை இயக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விட முடியாது என்று நான் சொல்லவில்லை. அந்தக் குறிப்பிட்ட வழித்தடத்தில் தேவையில்லை, extension செய்யலாம் என்றுதான் சொல்லியிருந்தேன். ஆக, புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விட தடை ஏதுமில்லை. ஆனால், புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விடுகின்றபோது, சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அந்த வழித்தடத்தில் இருக்கின்ற பயணிகளுடைய அடர்வு, விகிதாச்சாரம் மற்றும் ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து வசதிகள் மற்றும் தனியார் பேருந்து வசதிகள் இப்படி ஏதாவது, ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற கிராமங்களா, அல்லது பேருந்து வசதி பெறாத கிராமங்களாக இருந்தால், அதிலே ஜனத்தொகை மற்றும் சாலை வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள், இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அதிலே ஓரளவிற்கு டீசலுக்காவது கட்டுபடியாகிற அளவிற்கு அதிலே வசூலாகுமா என்பதையும் பார்த்து, அந்த அளவிற்கு சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்து, வாய்ப்பு இருந்தால் நிச்சயமாக புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விடப்பட்டுத்தான் வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்களுடைய கோரிக்கை குறித்தும் அம்மாவினுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் போதக்காடு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த போதக்காடு கிராமத்தினுடைய மாணவ, மாணவிகள் பள்ளியிலே படிக்க வேண்டும் என்று சொன்னால், அருகிலே, 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பையர்நத்தம் கிராமத்திலே உள்ள மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று படிக்கிற ஒரு நிலை இருக்கிறது. பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கிற மாணவ, மாணவியர்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இலவச மிதிவண்டிகளை வழங்கி, அங்கே சிறப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். 7-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு அங்கே பேருந்து வசதி இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது பள்ளி நேரங்களிலே பேருந்து வசதி இல்லை. ஒரு டவுன் பஸ் அந்த போதக்காடு கிராமத்திற்குச் சென்றுக் கொண்டிருக்கிறது. அதை, பள்ளி மாணவ, மாணவியரின் நலனைக் கருதி, அந்தப் பள்ளி நேரத்திலே பள்ளிக்குச் சென்று படிப்பதற்காக மாற்றிக் கொடுக்க, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளி நேரங்களில் பேருந்து இயக்கப்படும் வசதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்ற 17,000 பேருந்துகளும் பள்ளி நேரத்தில் 100 சதவிகிதம் அப்படியே பள்ளி நேரங்களில் இயக்கப்பட்டு

வருகின்றன. அதிலே இன்னும் சில கிராமங்களுக்கு அந்தப் பேருந்து வசதி இருந்தாலும், அந்தக் குறிப்பிட்ட பள்ளி நேரத்திலே அந்தப் பேருந்து வசதி இல்லாமல் ஒரு சில கிராமங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அது குறித்தும், இப்போது அம்மாவினுடைய அரசு அப்படிப்பட்ட ஊர்களையெல்லாம் ஆய்வு செய்து, கண்டறிந்து, அதற்கு வேண்டிய வசதிகளை செய்வது குறித்தும் பரிசீலித்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியைப் பொறுத்த அளவிலே, சீர்காழியிலிருந்து மயிலாடுதுறைக்கு டவுன் பஸ் தடம் எண் 2, அதுபோல சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு டவுன் பஸ் தடம் எண் 1, அதுபோல சீர்காழியிலிருந்து மயிலாடுதுறை செல்வதற்கு கொண்டல் வழியாக சென்றுகொண்டிருந்த பஸ்ஸும், சீர்காழியிலிருந்து பழையாறு மீன்பிடி துறைமுகம் உள்ள அந்தப் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த டவுன் பஸ் எண் 6-ம், கடந்த 2 ஆண்டு காலத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது. காரணம் என்னவென்றால், சாலை சரி செய்து கொடுத்தவுடன், அந்த பஸ்ஸை இயக்குகிறோம் என்று சொன்னார்கள். தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, சாலைகள் எல்லாம் மிகவும் அழகான முறையிலே போடப்பட்டு நன்றாக உள்ளது. அப்படி இருக்கின்றபோது, அந்தக் குறிப்பிட்ட பஸ்கள் எல்லாம் அந்தந்த வழித்தடங்களிலே இயக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே போக்குவரத்துத் துறையிலே பல நன்மைகளைச் செய்து வரும் இந்த வேளையில் நான் குறிப்பிட்டுள்ள இந்த பஸ்களை மாணவ, மாணவிகளின் நலன் கருதி, பொதுமக்களின் நலன் கருதி, உடனடியாக மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சி காலத்தில்தான் சாலை வசதி சரியில்லை என்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித் தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, சாலை வசதிக்கென்று தனி



முக்கியத்துவம் கொடுத்து ஏறத்தாழ—சென்ற தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற பணிகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதலாக புதிய சாலைகள் சீரமைத்து, ஓரளவு சாலைகள் சரியாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆக, அப்படி சாலைகள் சரியில்லை என்று நிறுத்தப்பட்ட வழித்தடப் பேருந்துகளை மீண்டும் சாலைகள் சரி செய்ததற்குப் பின்பு அந்தப் பேருந்துகளை இயக்கிவருகிறோம். மேலும், எங்கள் கவனத்தில் விட்டுப் போயிருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒட்டுமொத்தமாகவே சொல்லிவிடுகிறேன்; ஒவ்வொருவரும் தனித்தனியாக கேள்விகள் கேட்பதைக் காட்டிலும்—அப்படி சாலைவசதி சரியில்லாமல் ஏற்கெனவே வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தால், இப்பொழுது அந்தச் சாலை சரி செய்யப்பட்டிருந்தால், உடனடியாக நமது அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்த வழித்தடங்களில் பேருந்துகள் உடனடியாக இயக்குவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. அண்ணாதுரை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு போக்குவரத்துத் துறையிலே புதிய சகாப்தத்தைப் படைத்து இருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்திலே ரூட் பஸ்கள் இயங்குகின்ற இடங்களிலே, தனியார் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் ஒரே நேரத்தில் இயக்கப்பட்டு, பல மணி நேரங்கள் இடைவெளி விட்டு, திரும்பவும் ஏற்படுகின்ற கால இடைவெளிகளை மாற்றி, அந்த இடைவெளியான நேரங்களிலே அரசுப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இருந்தால், உடனடியாக அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், revision of times என்று—அதற்கென்று time meeting நடத்தி முறைப்படி அதன் நேரங்களை மாற்றி அமைத்துக் கொடுத்து வருகிறோம். அந்த வகையிலே ஏதாவது ஓர் அரசுப் பேருந்தினுடைய நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பார்களேயானால் அதுகுறித்து உடனடியாக அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 67, திரு. என். நன்மாறன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**67—**

### காற்றாலை மூலம் மின்சாரம்

***53609—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி கணவாய் பகுதியில் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் இருக்கையில் இல்லை.

வினா எண் 68, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**68—**

### ஊதிய உயர்வு

***28931—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



2006 ஜனவரி 21]

(அ) மற்றும் (ஆ) நிதி ஆதாரம் இருக்கும்பொழுது பள்ளிக்கும், அரசு ஊழியர்களுக்கும் அள்ளிக் கொடுக்கக்கூடிய மனம் கொண்ட மனிதநேயமிக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருடைய விடுதிகளில் சமையல் உதவியாளர்களுக்கு கடந்த 1-4-2005-லிருந்து ஊதியமாக ரூபாய் 500-லிருந்து 850 ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்துள்ளார்கள் என்ற நல்ல செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

*முற்பகல் 10-55*

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, மகளிர் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றி, மகளிர் மாநாடு கண்ட மாந்தருள் மாணிக்கம் மாண்புமிகு அம்மா அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே சுனாமி வேகத்திலேயே அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, மக்களைக் காத்த எங்கள் அன்னையே! வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'நான் இருக்கிறேன் உங்களைக் காப்பாற்ற' என ஆறுதல் கூறிய, ஆறுதல் கரம் நீட்டிய அன்னையே! தங்களின் திறமையான நிருவாகத்தால், கஜானா காலி என்கின்ற சூழ்நிலையை மாற்றி, தமிழகத்தின் நிதிநிலைமையை ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவந்து, அடித்தட்டிலே இருக்கின்ற விவசாய மக்களினுடைய நலன் காக்க உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த விவசாயிகளின் விடிவெள்ளியே! மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் பணிபுரிகின்ற சமையல் உதவியாளர்களுக்கு சம்பள உயர்வை ஏற்றித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதிக்குட்பட்ட செவலபுரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, புதியதாக மாணவர் விடுதி தொடங்குவதற்கு

[2006 ஜனவரி 21

அனுமதியளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே அந்தக் கிராமத்திலே இருக்கின்ற பள்ளி, முதலிலே உயர்நிலைப் பள்ளியாக இருந்தது; மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் தரம் உயர்த்தப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதேநேரத்திலே அந்த தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கு, 46½ இலட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே இந்த விடுதியிலே பணியாற்றுகின்ற உதவியாளர்கள் மொத்தத்திலே நம்முடைய தமிழகத்திலே 463 உதவியாளர்கள் இருக்கின்றார்கள். இவர்களிலே 25 நபர்கள் என்னுடைய விழுப்புரம் மாவட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். பொதுவாகவே இந்த விடுதியிலே பணியாற்றுகின்ற உதவியாளர்களும், சமையலர்களும் ஒரே சமமான வேலையைத்தான் அங்கே செய்து கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் இவர்கள் கடந்த ஏழு வருடங்களாகப் பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். இவர்களை நிரந்தரப் பணியில் அமர்த்தினால் இவர்களுக்கு மாத ஊதியமான அடிப்படைச் சம்பளம் 2,550 ரூபாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு எத்தனையோ திட்டங்களை அறிவித்திருக்கிற அம்மா அவர்களுடைய அரசு, இந்த 463 நபர்களுக்கும் விடிவெள்ளியாக இவர்களுடைய பணியை நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1-4-2005-லிருந்து 500 ரூபாய் தொகுப்பூதியமாக இருந்ததை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாதம் 350 ரூபாய் ஊதியம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்



2006 ஜனவரி 21]

மாணவர் விடுதியில் காலியாக உள்ள சமையலர், சமையலர் உதவியாளர் பணியிடங்களில் நபர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மனிதநேயமிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரப்பப்படாத அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கான உத்தரவை வழங்கிய அந்த அடிப்படையில், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்திலே நம்முடைய தமிழகத்திலே மாணவர்கள் விடுதியானது, பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? கடந்தகால தி.மு.க. ஆட்சியிலே எத்தனை விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டன? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எத்தனை கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் 973 இருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி 2001-லே பொறுப்பேற்கின்றபோது தனியாருடைய கட்டடங்களில் விடுதிகள் அடிப்படை வசதியில்லாமல் இருப்பதை உணர்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிதி ஆதாரங்கள் குறைவாக இருந்தாலும்கூட, வருங்காலச் சந்ததிகளாக விளங்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவிகளுடைய வாழ்வுக்கு நலம் அளிக்க வேண்டுமென்ற உன்னதமான நோக்கோடு, 760 விடுதிகள், தனியார் விடுதிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரத்தால் 294 விடுதிகள் கட்டித் திறக்கப்பட்டு, அனைத்து விடுதிகளுமே கட்டுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், கடந்த திராவிட

[2006 ஜனவரி 21

முன்னேற்றக் கழகத்தினுடைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் வெறும் 36 விடுதிகள் மட்டும்தான் கட்டப்பட்டன என்பதையும் அதிலே பெண்கள். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** அதிலே பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு 43 இலட்சம் ரூபாயும், மாணவர் விடுதிகளுக்கு 36.60 இலட்சம் ரூபாயும், கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூ. 5,30,000/– செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், அந்த கடந்த ஆண்டிலேயிருந்த 36.60 இலட்சம் ரூபாயிலிருந்து 5,30,000 ரூபாய் வரை செலவு செய்து கட்டிய விடுதிகளின் வீண் செலவுகளைக் குறைத்து அத்தனை வசதிகளும் கொண்ட விடுதிக் கட்டடங்களை வெறும் 31½ இலட்சத்திற்கு மிகாமல் கட்டக்கூடிய உன்னதமான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் நீண்டநாள் கோரிக்கையான பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஒன்று புதிதாக துவக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 69, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.



2006 ஜனவரி 21]

**69—**

## கால்நடை துணை மருந்தகம்

***19847—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி, மோளையானூர் ஆகிய இடங்களில் கால்நடை துணை மருந்தகம் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி கோட்டம், மொரப்பூர் தொகுதியில் உள்ள தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி, மோளையானூர் ஆகிய இடங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள புட்டிரெட்டிப்பட்டி கால்நடை கிளை நிலையத்தை முழு வசதியுடன் கூடிய கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்த கிராமத்து மக்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி பகுதிகளிலுள்ள கால்நடைகள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்று சொன்னால் அருகிலேயுள்ள மொரப்பூர் கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். அது, அந்த கிராமத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலை தூரம் நடந்து செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. மோளையானூர் கிராம கால்நடைகள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்று சொன்னால் பாப்பிரெட்டிப்பட்டியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு 5 கி.மீ. கடந்து செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்தக்

[2006 ஜனவரி 21

கிராமங்கள் மலைப் பகுதியைச் சார்ந்த கிராமங்கள் ஆகும். அங்கே மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக உள்ளன. அங்கே கால்நடைகளினுடைய எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. எனவே, அந்த கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல அவர்களுடைய அத்தனை பகுதிகளுக்கும் அள்ளிக் கொடுக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக கனிவுடன் பரிசீலித்து ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லுங்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** 10 கோடி ரூபாய் செலவில் 24,051 கால்நடை மருத்துவப் பாதுகாப்புத் திட்டத்தை நடத்தி வைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதியிலுள்ள மோளையானூர், கோபிநாதம்பட்டி, தொட்டம்பட்டி போன்ற கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகள் துவங்குவதற்கு உறுதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் பழையாறு என்ற மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகம் உள்ளது. அங்கு பழையாறு, புதுப்பட்டினம், மடவாமேடு, கொடியம்பாளையம், மாதானம் போன்ற பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி சுனாமியால் பாதிக்கப்பட்டபோதுகூட



2006 ஜனவரி 21]

அவர்களுக்கு முழு வாழ்வளித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த வேளையில் அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் இல்லாததினால் கிட்டத்தட்ட பழையாற்றிலிருந்து மாதானம் என்கின்ற இடத்திற்கு சுமார் 8 கி.மீ. தூரம் அவர்கள் கால்நடைகளை ஓட்டிச் சென்று மருத்துவம் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருப்பதனால், பழையாறு, புதுப்பட்டினம் பகுதிகளினுடைய பொதுமக்களின் நலன் கருதி அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று புதுப்பட்டினம் கிராமத்திற்கு அந்தப் பொதுமக்களுடைய வசதிக்காக அம்மா அவர்களுடைய அரசு இதை நிதிநிலைக்கேற்ப கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், தேவனூர் கால்நடை மருத்துவமனையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மட்டும் சுமார் 90 கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய செஞ்சி தொகுதியிலே உள்ள கால்நடை மருந்தகத்திற்கும் இந்த நிதியாண்டில் அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலித்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

[2006 ஜனவரி 21

**70—**

### கால்நடை மருத்துவமனை

***69635—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கோட்டேரியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி கோட்டேரியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**71—**

### கலங்கரை விளக்கங்கள்

***44823—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மற்றும் நீரோடி கலங்கரை விளக்கங்களைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மற்றும் நீரோடி கலங்கரை விளக்கங்களைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**72—**

### தொழிற்பயிற்சி நிலையம்

***40347—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பு ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் உழவர் பாதுகாப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்ற செய்தியினைக் கேட்டு தமிழக மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கிற இந்த வேளையிலே சோளிங்கர் தொகுதி விவசாயப் பெருமக்களின் சார்பாகவும், காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சியின் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியினை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களிலே காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி 86 ஊராட்சிகளையும், 2 சிறப்பு ஊராட்சிகளையும் உள்ளிட்ட தொகுதியாகும். அந்த வகையிலே காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சி ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டத்தினுடைய பெரிய ஏரியைக் கொண்ட பகுதியாகும். நிறைய நஞ்சை நிலங்களைக் கொண்ட பகுதியாகும். விவசாயத்தைத் தவிர வேறு தொழிலே இல்லை என்கிற நிலையிலே சோளிங்கர் தொகுதி இப்போது இருக்கிறது. அங்குள்ள மாணவ, மாணவிகள் தொழில் கற்கின்ற வகையிலே தொழிற்கல்வி பயில வேண்டுமானால் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள

வேலூருக்கும், 40 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள காஞ்சிபுரத்திற்கும், அல்லது 45 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள அரக்கோணம் பகுதிக்கும் செல்லவேண்டிய ஒரு நிலை இருக்கிற காரணத்தினாலே, அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கேட்டவற்றையெல்லாம் வழங்கப்படுகிற இந்த நேரத்திலே சோளிங்கர் தொகுதி மக்களுடைய கோரிக்கையான, காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சி மக்களுடைய கோரிக்கையான தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 986 இருக்கைகளோடு இயங்கி வருகின்றன. தற்போது பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 896 ஆகும். காலி இடங்கள் 90. இவைதவிர, 37 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 4,568 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. தற்போது 2,504 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். காலி இடங்கள் 2,064. சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் இரண்டு தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 190 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. தற்போது 60 மாணவர்கள்தான் பயிற்சி பெற்று வருகிறார்கள். காலியிடங்கள் 130. மேற்கண்டவாறு, வேலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் 2 தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் காலியிடங்கள் 130 இருக்கிற காரணத்தினால், கூடுதலாக ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, (குறுக்கீடு) இல்லை, ஏற்கெனவே காலியிடம் இருக்கிறது என்று சொல்கிறார். அதற்கே ஆள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) திரு. வில்வநாதன், சொல்லுங்கள்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருப்பதாகச்



சொன்னார்கள், உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட மையங்களிலே மாணவர்கள் சேரத் தயங்குகிறார்கள். காரணம், என்னவென்று சொன்னால், கல்வி வசதிக்கேற்ற போதிய கருவிகள் அங்கு இல்லை, ஆசிரியர்கள் இல்லை. அதனாலே தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருந்தும்கூட, இல்லாத ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு, அரசின் சார்பிலே ஒரு தொழிற்பயிற்சி மையத்தை ஆரம்பித்தால், மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லி, அதைப்பற்றி ஒரு பரிசீலனையை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென என்னுடைய சார்பிலே கேட்டுக்கொண்டு, என் தொகுதி மக்கள் சார்பாகவும் கேட்டுக்கொண்டு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நேரடிப் பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**73—**

## மருத்துவமனைக் கட்டடங்கள்

***7517—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைக் கட்டடங்கள் அனைத்தையும் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்கள் ஏற்க முன்வந்தால் அதைச் செயல்படுத்த அரசு அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களில் நிதிநிலை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதால், அரசு மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்களால் ஏற்க இயலாது.

[2006 ஜனவரி 21

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியாருடைய துணிவையும், தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாற்றலையும், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவருடைய ஒரே வாரிசாகவும், இன்றைய தமிழகம், நாளைய பாரதம், ஒட்டுமொத்த மக்கள் சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்க்கிறேன், வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரை, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் நிதிநிலை சீர்கேட்டைச் செய்துவிட்டுச் சென்ற அன்றையதினம் தொடுக்கப்பட்ட வினா. ஆனால், அந்த வினாவிற்கு இன்றைக்கு அவசியமே இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதியாதாரங்களைக் கொடுத்து, இன்றைக்கு அத்தனை கட்டடங்களையும் நல்லமுறையில் பராமரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக அம்மாவினுடைய பொற்பாதங்களில், எனது தொகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றியினை நான் காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**74—**

### மகப்பேறு மருத்துவமனை

*** 28556—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில், மாநகராட்சி தொடக்கப் பள்ளி பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளதால், அந்த இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிப் பள்ளி இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.



2006 ஜனவரி 21]

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகப்பேறு மருத்துவமனையை தற்போது அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவொரு மிக முக்கியமான இடம். ஆரப்பாளையம் பஸ் ஸ்டாண்டிலிருந்து மிக அருகிலே அந்த இடம் காலியாக பயன்படுத்தப்படாமல் உள்ளது. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அந்த இடத்தை எப்படியாவது பயன்படுத்த வேண்டுமென்று என்னிடத்திலே வேண்டுகோள் விடுத்து, அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே உள்ள பழைய கட்டடம், பயன்படுத்தப்படாமல் உள்ள பழைய கட்டடம்; காலியிடம், கடந்த வருடம் தோராயமாக 40 சதுர அடி நீளம், 25 சதுர அடி அகலம் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு, அதுவும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்தால், தோராயமாக 20 சென்ட் இடம் அந்த இடத்திலே இருக்கும் என்று நான் கருதுகிறேன். மதுரை மாநகராட்சியின் இதயப் பகுதியாகக் காணப்படுகின்ற அந்த இடத்தில், அந்த இடம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அது அந்தப் பகுதி மக்களிடத்திலே ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்தப் பகுதியிலே வேளாளர் தெரு என்ற ஒரு தெருவில் இருக்கிறது. அந்தப் பகுதியிலே அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே திருமணம் செய்துவிட்டு வருகின்ற ஏழை மக்கள், விருந்தினரை உபசரிப்பதற்கு இடம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகப்பேறு மருத்துவமனை கட்ட முடியாவிட்டாலும்கூட, அந்த இடத்திலே அந்த ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு ஒரு திருமண மண்டபத்தையாவது கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி தொடக்கப் பள்ளி அமைந்துள்ள இடமானது சுமார் 150 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். ஒரு திருமண மண்டபம் கட்டவேண்டுமென்றால், குறைந்தபட்சம் 300 சதுர மீட்டர் பரப்பரளவு உள்ள இடமாவது தேவைப்படுகிறது. எனவே, இந்த இடத்தில் திருமண மண்டபம் கட்டப் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலி இடத்தை மட்டும்

சொல்கிறார்கள் என நான் கருதுகிறேன். நான் கேட்பது பயன்படுத்தப்படாமல் இருக்கிற பழைய கட்டடம். காலி இடம். கடந்த வருடம் கட்டப்பட்டிருக்கிறது; 40 அடி நீளம் 25 அடி அகலம்— எல்லாவற்றையும் சேர்த்து திருமண மண்டபம் கட்ட ஆலோசனை செய்யப்படுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் மதுரைக்கு வரும்போது கூப்பிட்டுக் கொண்டுபோய்க் காட்டுங்கள்.

வினா எண் 75, திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## விளையாட்டு துணை மையம்

***73171—திரு. கே.டி. பச்சைமால்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் இந்திய விளையாட்டு துணை மையம் கட்டுமானப் பணி தாமதப்பட காரணம் என்ன?

(ஆ) விரைவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் இந்திய விளையாட்டு துணை மையம் அமைக்கும் பணி மத்திய அரசின் திட்டப் பணி. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த மையம் அமைக்கத் தேவையான இடத்திற்கு இதுவரையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை இயக்குநர் அவர்களின்





ஒப்புதல் கிடைக்கப்பெறாமையால் இந்தத் துணை மைய கட்டுமானப் பணி தொடங்க வகையில்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உலகம் போற்றும் உன்னதத் திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், குமரி மாவட்ட மக்களுடைய நீண்டகால கோரிக்கையான குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆசாரிபள்ளத்தில் ரூ. 110 கோடியில் அரசு மருத்துவக் கல்லூரியும், இராஜாக்கமங்கலத்தில் மீன்பிடி துறைமுகம் ரூ. 22 கோடியில் தனியார் முதலீட்டில் அமைத்திட ஆணை வழங்கியும், முட்டம் பகுதியிலே ரூ. 39 கோடி செலவில் தனியார் முதலீட்டில் மீன்பிடி துறைமுகம் அமைத்திடவும், குளச்சலிலே ரூ.25 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட துரிதப் பணி மேற்கொண்டுள்ளதற்கும், தேங்காய்ப்பட்டணத்திலே ரூ. 32 கோடி செலவில் மீன்பிடி துறைமுகம் அமைக்க ஆணையிட்டதற்கும், குமரி மாவட்டம் நாகர்கோவிலிலே சுமார் ரூ. 3 கோடி செலவில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அமைக்க ஆணையிட்டதற்கும், குமரி மாவட்டத்தில் இதுவரை சுமார் 50 கோடி ரூபாய் செலவில் தூண்டில்வளைவு கடல் அரிப்பு தடுப்புச்சுவர் பணி நிறைவேற்றித் தந்ததற்கும், குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், குமரி மாவட்ட மக்களின் சார்பாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை காணிக்கையாக்குகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராஜக்கமங்கலத்தில் இந்திய விளையாட்டு ஆணையத்தினுடைய துணை மையம் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 53 ஏக்கர் நிலத்தை அளித்தார்கள். அதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த பாரதிய ஜனதா ஆட்சியில் அன்றைய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு அதற்கான சீரமைப்புப் பணிகள் நடைபெற்றன. இன்றையதினம் அந்த விளையாட்டுத் துறையினுடைய மண்டல ஆணையாளர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு, அந்த இடம் கட்டடம் கட்டுவதற்கு சரியான, உகந்த இடமல்ல என்று கூறி கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புதியதாக 14 ஏக்கர் நிலத்தை பார்வையிட்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

நல்லாட்சியில் மீண்டும் அந்த இடத்தை மத்திய விளையாட்டு ஆணையத்திற்கு வழங்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்திய விளையாட்டு துணை மையம் அமைத்திட குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தை அடுத்துள்ள நீண்டகரை கிராமம் தெக்குறிச்சிப் பகுதியில் சுமார் 15 ஹெக்டேர் நிலம் வழங்கப்பட்டது. ஆனால், இந்நிலப்பரப்பு கடற்கரைப் பகுதியில் வருவதால் விளையாட்டு மைதானம் மட்டும் அமைக்கமுடியும். ஏனைய விளையாட்டு மேம்பாட்டு வசதிகளுக்குத் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு கடற்கரைப் பகுதி ஏற்றதாக இல்லை என்று மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய விளையாட்டுக் குழுமம் கருதியது. எனவே, அதே கிராமத்தில் சுமார் 6 ஹெக்டேர் நிலம் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு துணை மையம் அமைக்க பொருத்தமான இடம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவுப்படி தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பிரதிநிதியும் இசைவு தெரிவித்ததன்பேரில் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை இயக்குநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை ஒப்புதல் வரப்பெறவில்லை. மத்திய அரசின் ஒப்புதலுக்குப்பின் நிலம் வழங்குவது குறித்து உரிய நடவடிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதைப் பணிவுடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட இந்தத் திட்டத்தை இன்று மத்தியில் ஆளுகின்ற ஆளுங்கட்சியினர் தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு மாற்றிச் செல்லுகின்ற ஒரு சூழ்நிலைக்காக இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டுள்ளது. கடந்த ஒரு சில மாதங்களாக அப்பகுதி மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி, மத்திய மண்டல விளையாட்டு இணை இயக்குநர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகைதந்து, மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் புதிதாக ஓர் இடத்தைப் பார்வையிட்டு அந்த இடத்தை தமிழக அரசு வழங்குகின்ற வேளையில், உடனடியாக அந்தப் பணி ஆரம்பிக்கப்படும்



என்று கூறியுள்ளார்கள். எனவே, அந்த இடம் குறித்த கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த இடத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு முதலில் 15 ஹெக்டேர் நிலமும், இரண்டாவதாக 6 ஹெக்டேர் நிலமும் வழங்கியுள்ளது. ஆனால், மத்திய அரசு அனுமதி கொடுக்காததினால் மேற்கொண்டு பணிகள் நடக்காமல் தாமதப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பச்சைமால் அவர்கள் குறிப்பிட்டதுபோல இராஜாக்கமங்கலம் பகுதியிலே இந்திய விளையாட்டு துணை மையம் அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசால் 15 ஹெக்டேர் நிலம் வழங்கப்பட்டு, ஏற்கெனவே மத்திய அதிகாரிகள் எல்லாம் அந்த இடத்தைப் பார்வையிட்டு, துணை மையம் அமைப்பதற்கு இந்த இடம் தகுதியான இடம் என்று சான்று வழங்கிய பிறகே, அந்தத் துணை மையம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஒரே காரணத்திற்காக இன்றைக்கு அந்த மையம் அமைக்கப்படுவது காலதாமதப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, நம்முடைய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம்மூலமாக வலியுறுத்தி உடனடியாக இந்தத் துணை மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2006 ஜனவரி 21

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்விக் கட்டணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக இருப்பதால் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாக அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இது குறித்துச் சுருக்கமாகப் பேச அவரை அழைக்கிறேன். திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மாணவர்களின் கல்விக் கட்டணமானது கல்லூரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணங்களைவிட அதிகமாக இருப்பதால் பெற்றோர்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். சில தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டணம் நிர்ணயம் செய்யும்போது மாதம் ரூபாய் 500, 1,000 என்று வசூலிக்கின்றார்கள். அதோடு சிறப்புக் கட்டணமாக ஆண்டுக்கு 25,000, 50,000 ரூபாய் என்று வசூலிக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. இதனால் நடுத்தர மக்களுடைய குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கு மிகுந்த அவதியுறுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற செயல்களை கட்டுப்படுத்துகின்றவகையில் வெளிப்படையாக அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கின்றவகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் திரு. டி.ஏ.பாய் வழக்கில் சுயநிதி கல்வி நிறுவனங்கள் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்களை அரசு நிர்ணயிக்க முடியாது எனவும், அக்கல்வி நிறுவனங்களே கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்கும்வகையில் தீர்ப்பளித்துள்ளது. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளை முறைப்படுத்துதல் குறித்து ஆராய அரசால் அமைக்கப்பட்ட முனைவர் திரு. சிட்டிபாபு அவர்கள் தலைமையில்



2006 ஜனவரி 21] [திரு. சி.வி. சண்முகம்]

அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு கல்விக் கட்டண விகிதங்களை அமைக்க ஆலோசனைகள் வழங்கலாம் என தெரிவித்ததைத் தொடர்ந்து, அரசாணை 48, 21-7-2000 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், இவ்வரசாணையின் அடிப்படையில், பள்ளிகள் அமைந்துள்ள பகுதி, பள்ளியின் தரம், அவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டடம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதி, மாணவர் எண்ணிக்கை, படிக்கும் வகுப்பு இவற்றின் அடிப்படையில் கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்க வழிகாட்டி நெறிமுறைகளை மெட்ரிக் பள்ளி இயக்குநர் அவர்களின் செயல்முறை, நாள் 17-8-2000 அன்று அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், நிர்ணயிக்கப்படும் கல்விக் கட்டணம் நியாயமானதாகவும், பெற்றோர்கள் பணம் செலுத்தும் வசதிக்கேற்ப இருந்திடல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11-25

## 3. கவன ஈர்ப்பு

### சீர்காழி தொகுதி, மகேந்திரபள்ளி முதல் காட்டூர் வரை கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளி முதல் காட்டூர் வரையுள்ள கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரப்பள்ளி முதல் காட்டூர் வரை உள்ள கொள்ளிடம் வெள்ளக்கரை சுமார் 6 கி.மீ. தூரத்தைப் பலப்படுத்தும் பணியானது, அரசாணை எண் 585, வருவாய்த் துறை, நாள் 20–10–2005–ல் ஒப்பளிக்கப்பட்ட சுனாமி நிவாரணப் பணிகளின்கீழ் உள்ள, ஒட்டுமொத்தக் கருத்துருவில் ரூ. 1.23 கோடிக்கு இடம் பெற்றுள்ளது. விரைவில் இப்பணியைச் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளியிலிருந்து, காட்டூர் வரையுள்ள கொள்ளிடம் வெள்ளக்கரை, சுமார் 6 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூ.1.23 கோடி மதிப்பில் விரைவில் பலப்படுத்தப்படவுள்ளது என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குவதோடு மட்டுமல்லாமல், கடந்த மாதங்களில் பெய்த பெருமழை, மேட்டூர் அணையிலிருந்தும், அமராவதி அணையிலிருந்தும் திருப்பி விடப்பட்ட வெள்ள நீர் இரண்டு முறை கொள்ளிடம் ஆற்றின் வழியாகத்தான் கடலில் வடிந்தது. அதில், இரண்டாவது முறை, விநாடிக்கு சுமார் 4.50 இலட்சம் கன அடி நீர் கொள்ளிடம் ஆற்றில் வந்ததனால், கொள்ளிடம் ஆற்றுப் பாலத்திலிருந்து கடலுக்கு அருகிலுள்ள கிராமங்களான முதலைமேடு, சந்தப்படுகை, முதலைமேடு திட்டு, அலக்குடி, நாணல்படுகை, நாதல்படுகை போன்ற கிராமங்களில், கொள்ளிடக் கரை உடைப்பு எடுத்து, அதனைச் சுற்றியுள்ள 40–க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ள நீர் புகுந்து பெருத்த சேதத்தை விளைவித்தது. அதனை வருங்காலங்களில் தடுக்க ஏதுவாக, கொள்ளிடத்திலிருந்து மகேந்திரப்பள்ளி வரையிலுள்ள, சுமார் 15 கிலோமீட்டர் கொள்ளிடக் கரையைப் பலப்படுத்தி, அதன் மேல், நெடுஞ்சாலைத் துறையின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் போக்குவரத்து வசதிபெறும் வகையில், தார்ச்சாலை அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடக் கரையைப் பலப்படுத்துவது, கடந்த சில நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் மூலம் அரசின் கவனத்திற்கு ஈர்க்கப்படுகிறது. 9 பணிகளுக்கு, கிட்டத்தட்ட 19.271 கோடி ரூபாய்க்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, பணி விரைவில் தொடங்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 16 கிலோமீட்டர் கொள்ளிடம் கரையைத் தார்ச்சாலைகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 191 முதல் 193 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–30

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

[2006 ஜனவரி 21

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2006 ஜனவரி 21]

### (ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2006 ஜனவரி 21

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்பு

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2006 ஜனவரி 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 ஜனவரி 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் உரையாற்றுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே இந்தப் பேரவையிலே கடந்த 5 ஆண்டு காலமாக நான் பணியாற்றுவதற்கு நல்ல வாய்ப்பினைத் தந்த, என்னுடைய நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற என்னுடைய அறந்தாங்கி தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல என்னை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்து எனக்கு வெற்றி தேடித் தந்த என்னுடைய பாசத்திற்கும், அன்பிற்கும் உரிய சகோதரர் மாண்புமிகு திருநாவுக்கரசர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த 5 ஆண்டுக் காலத்தில் இந்த அவையிலே நான் பணியாற்றுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்கும், அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற

உறுப்பினர்களுக்கும், அலுவலகப் பெருமக்களுக்கும், பத்திரிகைத் துறை நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நீண்ட காலமாக நம்முடைய அரசு ஊழியர்களாக பணியாற்றுகிற சகோதரர்கள் விரும்பிய ஊதிய உயர்வை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே நேற்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மகிழ்ச்சியாக பாடிக் கொண்டிருக்கிறார்கள், ஆடிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி என்று சொன்னால், எங்களுக்கு ஒரு தாய் இருக்கின்றார், என்றும் எங்களைக் காக்கின்றார் என்று சொல்லி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அரசு ஊழியர்கள் மனம் நிறைந்து மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்; நானும் பாராட்டுகிறேன். அவர்கள் இன்னும் ஒன்றிரண்டு சிறிய கோரிக்கைகளை, Surrender of Earned Leave, C.L. போன்ற சலுகைகளையெல்லாம் தங்களிடத்திலே எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே, அவற்றையும் தந்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒருசிலர் தமிழகத்திலே இதை தேர்தலுக்காகச் செய்கிறார்கள் என்றெல்லாம் பேசுகிறார்கள். அரசியல்வாதியாக இருக்கிற நாம் தேர்தலுக்காகச் செய்யாமல், சாமியார்களாக ஆவதற்கா நாம் அரசியலிலே, பொது நல வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிறோம்? மக்களுக்குச் செய்வது, அதைச் சொல்லி தேர்தலிலே வெற்றி பெறுவது, ஆட்சி அமைப்பது, மீண்டும் மக்களுக்குச் செய்வது என்பதற்காகதான் அரசியல்வாதிகள் பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய நல்ல காரியங்களை, அவர்களே சொன்னதைப்போல, ஒரு நாள் அல்ல, ஒரு மாதம்கூட இந்த ஆட்சியினுடைய சாதனைகளைச் சொல்கிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அளப்பரிய நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். நான் ஒரு 5 ஆண்டுக் காலத்திற்கு பின்னாலே பின்நோக்கிச் செல்ல விரும்புகிறேன். 2001 ஆம் ஆண்டு மே திங்களிலே ஆட்சிப் பொறுப்பினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றார்கள். யாரும் அந்த ஆட்சிப் பொறுப்பினை அன்றைக்கு ஏற்றுக்கொள்வதற்கு பயப்படுவார்கள்.



அன்றைக்கு இருந்த நிலைமை என்ன? தமிழகத்தினுடைய நிதி நிலைமை என்ன? அதை எண்ணிப் பார்க்க வேண்டும். உலக வங்கியினுடைய பக்கமே நாம் தலை வைத்துப் படுக்க முடியாது. ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய பக்கமே நாம் தலை வைத்துப் படுக்க முடியாது. பிற நிதி நிறுவனங்களினுடைய அலுவலகங்களுக்குச் செல்ல முடியாது. நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற முடியாது என்கிற ஒரு மோசமான சூழ்நிலை அன்றைக்கு தமிழகத்திலே இருந்தது. அதுமட்டுமல்ல, நெடுஞ்சாலைத் துறையில், பொதுப் பணித் துறையில், குடிநீர் வழங்கல் துறையில், உள்ளாட்சித் துறையில் என்று சொல்லி ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையை அன்றைக்கு இருந்த ஆட்சி இந்த ஆட்சியின்மேல் சுமத்திவிட்டுச் சென்றார்கள். அன்றைக்கு வீரமிக்க ஆண்மகன்கூட, திறமைமிக்க ஆண்மகன்கூட, இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு பயப்படுகிற ஒரு சூழ்நிலை இருந்தது. அந்த நேரத்தில் ஆங்கில சாம்ராஜ்யத்து வரலாற்றில் சொல்வார்கள், Joan of Arc என்ற ஒரு வீரப் பெண்மணியைச் சொல்வார்கள். அந்த Joan of Arc-ஐப் போன்ற வீரப் பெண்மணியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

அதுபோல வடஇந்திய வரலாற்றில் ஒரு வீரப் பெண்மணியைச் சொல்வார்கள், ஜான்சி இராணி. ஜான்சி இராணியைப் போல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல தென் இந்திய வரலாற்றில் நம்முடைய இராணி மங்கம்மாள் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைச் சொல்வார்கள், வீரப் பெண்மணியாகக் குறிப்பிடுவார்கள். அந்த இராணி மங்கம்மாளைப் போல விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பாசமிகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சகோதரர்கள் சொல்வதைப் போல, ஆதி பராசக்தியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய தன்னலமற்ற உணர்வோடு, தான் இந்த ஆட்சியை ஏற்றுக்கொள்கிறபோது, இருக்கிற கஷ்டத்தை உணர்ந்து, கஷ்டம் இருந்தாலும் தமிழக மக்கள் நம்மை நம்பி வாக்களித்திருக்கிறார்கள், நமக்கு ஆட்சிப் பொறுப்பினை தந்திருக்கிறார்கள், இந்த ஆட்சியை எவ்வளவு கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாலும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிற ஓர் உன்னதமான நோக்கத்தோடு நினைத்து இந்த ஆட்சிப் பொறுப்பினை அன்றைக்கு ஏற்றுக்கொண்டார்கள்.

[திரு. ப. அரசன்] [2006 ஜனவரி 21

இந்த நிதிநிலையை சரி செய்துவிட முடியுமா? சீர்கெட்டிருக்கிற இந்த நிதிநிலைமையைச் சரிப்படுத்தி, மீண்டும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிட முடியுமா என்று தமிழகத்திலே இருக்கிற அத்தனைபேரும், இந்தியாவிலே இருக்கிற அத்தனைபேரும் எண்ணிப் பார்த்து வியப்படைகிற வகையிலே தமிழகத்தினுடைய நிதிநிலைமையைச் சீராக்கி, சிறப்பான ஆட்சியை கடந்த 5 ஆண்டுக்காலத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன், நன்றி கூறவும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சியினுடைய சாதனைகளுக்கு பல்வேறு விளக்கங்களை எடுத்துச் சொல்ல முடியும். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்; கல்வித் துறையிலே செய்து இருக்கிற சாதனை மட்டுமே போதும், வருகிற தேர்தலை எதிர்கொள்வதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாட்டிற்கு மிக இன்றியமையாதது கல்வி. ஒரு நாட்டில் இருக்கிற குழந்தைகள் கல்விச் செல்வம் பெறுவதனாலேதான், கல்வியறிவு பெறுவதனாலேதான் உயர்வு அடைய முடியும் என்கிற உன்னத நோக்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்முடைய கவனத்திலே எடுத்துக்கொண்டு மிகப் பெரிய நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு, நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளை அரண்மனையைப் போன்று கட்டியிருக்கிறார்கள் அந்த விடுதிகளைப் பார்க்கின்றபோது மிக அற்புதமாக அந்தக் கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. குழந்தைகள் கல்வி பெறுவதற்குரிய நல்ல சூழ்நிலையான கட்டடங்களாக அவை அமைந்திருக்கின்றன. அதைப்பொறுத்து ஒரு சின்ன கோரிக்கை. ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர் படிக்கிற அளவிற்கு அந்தக் கட்டடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களே நீங்கள் கட்டித் தந்திருக்கிறீர்கள். இப்போது அங்கே அனுமதிக்கப்படுகிற மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கை 50-லிருந்து 60-ஆக இருக்கிறது. அங்கே தங்கிப் படிக்கிற மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கையை கொஞ்சம் கூடுதலாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2006 ஜனவரி 21]

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய விடுதிகளில் எந்த ஆண்டும் இல்லாததைவிட அதிகமாக, கூடுதலாக 3,275 கூடுதல் மாணவர்களைச் சேர்ப்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கினார்கள் என்ற நல்ல செய்தியை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் அறிவேன். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் என்ன சொல்ல வருகிறேன் என்று சொன்னால், இப்போது 50 என்று, 60 என்று இருப்பதை மொத்தமாகவே 75, 80 மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான, —ஏறத்தாழ 900 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே இருக்கின்றன; எல்லா விடுதிகளிலேயும்— அப்படிப்பட்ட வசதிகளை செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 5 ஆண்டுக் காலத்தில், பள்ளிக் கல்வித் துறையிலே செய்திருக்கிற சாதனைகள் மிக அளப்பரிய சாதனைகளாகும். 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல, 1,274 புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ தமிழகத்திலே இருக்கிற 80 சதவிகித உயர்நிலைப் பள்ளிகள், 80 சதவிகித மேல்நிலைப் பள்ளிகள், 75 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதியினை நம்முடைய கல்வித் துறை தந்திருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த நிலைமை என்ன? கட்டட வசதி இல்லாமல், மரத்தடியிலே 6-லிருந்து 8-வது வகுப்பு வரைக்கும் காலையிலே வகுப்பு; 9, 10, 11 ஆகிய வகுப்புகளுக்கு மாலையிலே வகுப்பு என்கிற ஒரு துர்பாக்கியமான நிலைமை தமிழகத்திலே இருந்தது. அந்த நிலைமையை இன்றைக்கு மாற்றி தமிழகத்திலே இருக்கிற 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நபார்டு வங்கியின் மூலமாக, மாநில அரசின் நிதியின் மூலமாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியின் மூலமாக கட்டட வசதிகளைச் செய்து

தந்திருக்கின்ற அளப்பரிய சாதனையை கல்வித் துறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நன்றியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சமுதாயத்தினுடைய முன்னேற்றம் கல்வியிலேதான் இருக்கிறது என்பதை உணர்ந்து, ஒரு சமுதாயத்தினுடைய முன்னேற்றம் கல்வி அடிப்படையிலேதான் வரும் என்பதை உணர்ந்து அந்த அளப்பரிய காரியங்களைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களை மீண்டும் ஒருமுறை பாராட்டி, நன்றி தெரிவிக்கிறேன்.

*முற்பகல் 11–45*

அடுத்து, நம்முடைய மருத்துவத் துறையிலே அளப்பரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும். ஒரு காலத்தில் என்னுடைய அறந்தாங்கி மருத்துவமனையிலே 5 மருத்துவர்கள் பணியாற்றினார்கள். ஆவுடையார்கோவில் மருத்துவமனையிலே மருத்துவர்களே இல்லை. மணமேல்குடி மருத்துவமனையிலே ஒரு மருத்துவர். சுப்ரமணியபுரம் என்னுடைய சொந்த ஊர். அந்த மருத்துவமனையிலே ஒருவர் என்றிருந்த நிலைமை போய், இன்றைக்கு அறந்தாங்கி அரசினர் மருத்துவமனையிலே 12 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். அதுமட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாதிக்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர்கள் இல்லை என்கிற நிலைமை; அதற்குக் கட்டடங்கள் இல்லை என்கிற நிலைமை. மருந்துகள் இல்லை என்கிற நிலைமை; இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; செவிலியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். Technicians–தொழில்நுட்ப வேலை பார்ப்போர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல சாதனையைச் செய்து தந்திருக்கிறீர்கள். அதிலேயும் ஒரு சின்ன கோரிக்கை. இப்போது மருத்துவர்களுக்கு ரூ.6,000 சம்பளம் கொடுக்கிறீர்கள். Special.......

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவமனைகள், அதற்கு மேலாக இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுடைய அத்தனை



மருத்துவர்களையும் நிரப்புவதற்காக அங்கே இருக்கக்கூடிய பணியிடங்களிலே கிட்டத்தட்ட 2,322 காலியிடங்கள் இருக்கின்றன. இன்றைய சூழ்நிலையிலே இப்போது 1,265 பேர் இப்பொழுது நேர்முகத் தேர்விலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இவர்களைப் போடும்பொழுதே ஒப்பந்த கால அடிப்படையிலே போடப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான சம்பளம் 8,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவர்கள் தேர்விலே வெற்றி பெறும்போது அந்த அந்த மருத்துவமனைகளிலே நியமிக்கப்படுவார்கள். ஆகவே, ரூ. 6,000 இல்லை. அவர்கள் வேலைக்குச் செல்வதற்கான ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. அரசன்:** அவர்கள் எல்லாம் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு எழுதியிருக்கிறார்கள். ஏற்கெனவே பணியாற்றியவர்களுக்கு கருணை அடிப்படையிலே மதிப்பெண்கள் தரப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தக் கருணை மதிப்பெண்களை அவர்களுக்குத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மருத்துவத் துறையில் உலக வங்கி நிதி உதவியின் மூலமாக இப்போது எங்கள் மாவட்டத்தையும் சேர்த்து 5 மாவட்டங்களிலே மருத்துவமனைகளுக்கு கட்டட வசதி செய்து தருவதற்காக நிதி உதவி செய்து, பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வர் ஆகிய இருவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழகத்தில் வேளாண் துறையிலே மிக முக்கியமான, அளப்பரிய காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள். நல்ல காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள். அதிலே ஒரு சின்ன ஆலோசனையைச் சொன்னால் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். பொதுவாக எந்தத் துறையாக இருந்தாலும் ஆய்வு என்பது மேற்கொள்ளப்பட வேண்டும். அதிகாரிகளைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்குப் பயந்துகொண்டு சில புள்ளிவிவரங்களைத் தந்து விடுகிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களிலேகூட சின்னச் சின்னத் தவறுகள் இருக்கின்றன. எங்களுடைய அன்பிற்குரிய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலே ஆய்வு செய்கிறபோதுகூட அந்தச் சிறிய சிறிய தவறுகளை எல்லாம் நான் சுட்டிக்காட்டி, அதிகாரிகள் திருத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன்.

அதைப்போல, நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், தமிழகத்திற்கு மிக இன்றியமையாத துறை வேளாண்மைத் துறை. அந்தத் துறையிலே நடக்கிற காரியங்கள் 100 சதவிகித வெற்றியைப் பெறுவதற்கு supervising–மேற்பார்வை கொஞ்சம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயெல்லாம் விதை நெல்லுக்கு மானியம் இருந்தது. அதேபோல விவசாயிகளுக்கு டிராக்டர்களை மானிய விலையிலே கொடுத்தோம். பவர் டில்லரை மானிய விலையிலே கொடுத்தோம். கைத் தெளிப்பான் மானிய விலையிலே கொடுத்தோம். விசைத் தெளிப்பான் மானிய விலையிலே கொடுத்தோம். தென்னங்கன்றுகள் மானிய விலையிலே கொடுத்தோம். மற்ற மரக் கன்றுகள் கொய்யா, எலுமிச்சை போன்றவையெல்லாம் மானிய விலையிலே கொடுத்தோம். இவற்றையெல்லாம் கொடுப்பதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்...

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்றபோது, அதிகாரிகள் பயந்துகொண்டு சில புள்ளிவிவரங்களைக் கூடுதலாகக் கொடுக்கின்றார்கள் என்ற தகவலை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சராக வாழ்ந்து வருகின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே வேளாண்மைத் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளின் அலுவலர்களும், சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடுமட்டுமன்றி, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே பேசுகின்றபோது, பண்ணை இயந்திரங்களுக்கு, டிராக்டர்களுக்கு, பவர் டில்லர் போன்ற உழவுக் கருவிகளுக்கு மானியம் இல்லையென்ற ஒரு குறைபாட்டைச் சொன்னார். நான் மெத்தப் பணிவோடு, மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புவதெல்லாம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டிலே மட்டும் 10 கோடி ரூபாய் பண்ணை இயந்திரங்கள் மானியத்திலே வாங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக டிராக்டர் வாங்குவதற்கு 25 சதவிகித மானியம், பவர் டில்லர் வாங்குவதற்கு 25 சதவிகித மானியம், மற்றும் வேளாண் தொழிலுக்குத் தேவைப்படுகின்ற உழவுக் கருவிகள்



வாங்குவதற்காக 25 சதவிகித மானியம் கொடுப்பதற்காக இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் நம் தாய், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்ற நல்ல தகவலை நான் மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடுமட்டுமன்றி, Power sprayer, Hand sprayer என்று சொல்லப்படுகின்ற மருந்து தெளிப்பான் கருவிகள் வாங்குவதற்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையின் சார்பாக, தோட்டக்கலைத் துறையின் சார்பாக மானியங்கள் கொடுப்பதற்கு, கருவிகள் கொடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள் என்ற நல்ல தகவலையும் நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமன்றி, சொட்டுநீர் பாசனத்திற்காக, தெளிப்புநீர்ப் பாசனத்திற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காக 50 சதவிகித மானிய விலை அடிப்படையிலே அதற்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், இன்னும் 5 மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** 10 மணித் துளிகளில் பேச்சை முடித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதேபோல கூட்டுறவுத் துறையிலே அன்றைக்கெல்லாம் சொன்னார்கள். நபார்டு வங்கி, விவசாயிகளுக்கு வட்டித் தள்ளுபடி செய்வதற்கு இடையூறாக இருக்கிறது. வட்டித் தள்ளுபடியெல்லாம் செய்ய முடியாது என்ற தத்துவங்களையெல்லாம் இந்த அவையிலே பெரியவர்கள் சொன்னார்கள். அந்த நபார்டு வங்கியினுடைய நிபந்தனைகளையெல்லாம் தவிடுபொடியாக்கி, அந்த நபார்டு வங்கி என்ன சொன்னாலும் பரவாயில்லை, தமிழகத்திலே இருக்கின்ற உழவர் பெருமக்களை, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளை நான் காப்பாற்றுவேன் என்று உறுதியேற்று, சபதமேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே அப்படி ஒரு வட்டித் தள்ளுபடியைச் செய்தார்கள். அதற்குப் பிறகு ஐந்தாண்டுக் காலத்திலே விவசாயிகளுக்கு எந்தச் சலுகையும் இல்லை. ஆனால், மாண்புமிகு

முதல்வர் அவர்கள் 2001–லே பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், கடுமையான பொருளாதார கஷ்டம் இருந்தபோதிலும், ஏறத்தாழ 316 கோடி ரூபாய் வட்டித் தள்ளுபடியாக செய்த சாதனையை, அளப்பரிய நல்ல சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புமிக்க நல்ல சாதனையை நான் உளமாற, மனமாரப் பாராட்டுகின்றேன். விவசாயிகளின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல அடுத்த ஆண்டிலே 60 கோடி, அடுத்த ஆண்டிலே 65 கோடி, இப்பொழுது கடைசியாக ஒரே முறை கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தின்கீழ் 645 கோடி ரூபாயை விவசாயிகளுக்காக தந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்பற்ற சாதனையை, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுடைய நெஞ்சங்களிலே நீக்கமற நிறைந்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அந்த அற்புதமான சாதனையை நான் இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏறத்தாழ 1,000 கோடி ரூபாயை தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்காக, வட்டித் தள்ளுபடியாக அவர்கள் செய்திருக்கின்றார்கள். அதற்கு பல வியாக்கியானங்களை எல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். நிதிநிலை சரியாக இல்லை, எது எதற்கோ செலவு செய்வார்கள், என்னென்ன காரியங்களுக்கோ செலவு செய்வார்கள், ஆனால், விவசாயிகள் கேட்டால் மட்டும் கவிதை பாடுவார்கள். கதை எழுதுவார்கள்; கட்டுரை எழுதுவார்கள்; விவசாயிகளைப்பற்றி கிஞ்சித்தும் சிந்தித்துப் பார்க்கமாட்டார்கள். அப்படிப்பட்ட அந்தச் சூழ்நிலையில் விவசாயிகளை தன்னுடைய கண்ணாக நினைத்து விவசாயிகளுக்காக இந்த ஐந்தாண்டு காலத்தில் ஆயிரம் கோடி ரூபாயை வட்டித் தள்ளுபடியாக மட்டும் (குறுக்கீடு) 1,245 கோடி, கூட்டவில்லை சரியாக– ஆயிரத்து இருநூற்றுச் சில்லறை கோடி ரூபாயை வட்டித் தள்ளுபடியாக மட்டும் தந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய செயலை நான் பாராட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

அதைப்போல உணவுத் துறையிலேகூட மிகப் பெரிய சாதனை. தமிழகத்திலே குடும்ப அட்டை இல்லாமல் அத்தியாவசியப் பொருள்களைப் பெற முடியாமல் நம்முடைய ஏழை எளியவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அதற்காக புதிய குடும்ப அட்டை நான் தருகிறேன், பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி, வரப்பெற்ற மனுக்களில் 95 சதவீதத்திற்குமேல் குடும்ப அட்டைகளை



வழங்கியிருக்கிற ஒரே அரசு நம்முடைய தமிழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு கேரளாவிலே மொத்த குடும்ப அட்டை 21 இலட்சம். எனக்குக்கூட கொஞ்ச நாளைக்கு முன்னாலே அரிசி விலையைக் குறைக்கிறபோதுதான் அந்த உண்மைநிலை தெரிந்தது. நம்முடைய மாநிலத்தில் ஏறத்தாழ ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் குடும்ப அட்டைகளை வழங்கியிருக்கிறோம். எந்த அரசும் செய்யாத ஒரு சாதனையை உணவுத் துறை குடும்ப அட்டை வழங்குவதிலே செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல. 20 கிலோ அரிசியை, மிக நல்ல அரிசியை, தரமான அரிசியை அந்த ரேஷன் அட்டை உள்ளவர்களுக்கு, குடும்ப அட்டைகள் உள்ளவர்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம். அத்தியாவசியப் பொருள்களைத் தருவதிலே இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக நம்முடைய தமிழகம் விளங்குகிறது என்ற சான்றிதழ் வழங்க விரும்புகிறேன்.

அதைப்போல நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறையின் புள்ளிவிவரங்களையெல்லாம் நாம் பார்க்கிறபோது இப்படி ஒரு சாதனையை யாரும் செய்ய முடியுமா என்று எண்ணி வியந்து போகிற அளவிற்கு, அதிசயிக்கத்தக்க அளவிலே செய்திருக்கிறது இந்த அரசு. ஏற்கெனவே இருந்த அரசு, ஐந்தாண்டு காலம் ஆண்ட அரசு, 22 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளைச் செப்பனிட்டார்கள். அதற்குப்பிறகு ஆட்சிப்பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இன்றைக்கு இந்த அரசு ஏறத்தாழ 56 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளை செப்பனிட்டுத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரைக்கும் என்னுடைய ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் என்னை மிக அதிகமாகப் புகழ்கிறார்கள். ஏனென்று சொன்னால், அறந்தாங்கியிலேயிருந்து ஒருகாலத்தில் புதுக்கோட்டை வர வேண்டுமென்று சொன்னால், ஒன்றரை மணிநேரம் ஆகும். இன்றைக்கு 35 நிமிடத்திலே அறந்தாங்கியிலேயிருந்து புதுக்கோட்டை வர முடியும். அதைப்போல அறந்தாங்கியிலேயிருந்து கடற்கரை நகரமான மீமிசலுக்குச் செல்வது என்று சொன்னால், ஏறத்தாழ இரண்டு மணி நேரம் பிடிக்கும். இன்றைக்கு 35 நிமிட நேரத்திலே அந்த தூரத்தைக் கடக்க முடியும் என்கிற மிக அற்புதமான சாலை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கிறது. அறந்தாங்கியிலேயிருந்து காரைக்குடிக்கு, நான் அழகப்பா கல்லூரியிலே படிக்கிற காலத்திலே கண்ணுடைநாயகி என்ற பேருந்திலே பயணம் செய்கிறபோது ஆறு மணிக்குப் பேருந்திலே ஏறினால், எட்டரை மணி ஒன்பது மணி வாக்கிலே அந்தக் கல்லூரி விடுதியை அடைகிற ஒரு துர்பாக்கியமான நிலைமை இருந்ததுபோக, இன்றைக்கு அந்த 36 கிலோமீட்டரை 40 நிமிடத்தில்

சென்றடைவதற்கான அற்புதமான சாலை வசதி இன்றைக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறை செய்து தந்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற அத்தனை முக்கியமான சாலைகளையும், —State Highways, M.D.R., O.D.R என்று சொல்லப்படுகிற அத்தனை சாலைகளையும் மிக அருமையாக இருவழிச் சாலையாகவும், பலப்படுத்தியும் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒப்பற்ற சாதனை தமிழகத்திலே நெடுஞ்சாலைத் துறை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டவும் அதற்காக நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல பொதுப் பணித் துறை. ஐந்தாண்டு காலத்திற்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நடிகர் திலகம் துரைமுருகன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது என்னுடைய தொகுதியிலே (மேசையைத் தட்டும் ஒலி) —அவர்கள் இல்லை, நாளைக்கு வருகிறபோது சொல்வதாக இருக்கிறேன்; என்னுடைய தொகுதியிலே அணைக்கட்டு தொடர்பாக நான் அவர்களைச் சந்தித்தபோது, ஓர் அணைக்கட்டை ஒன்றரை கோடி ரூபாயிலே தந்தார்கள். அந்த நேரத்திலே நான் அவர்களிடத்திலே வலியுறுத்தினேன். தங்களுடைய ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் எந்த ஏரியும் தூர்வாரப்படவில்லை, ஏதாவது நிதி தரவேண்டும் என்று சொன்னேன். அந்த ஆட்சியினுடைய கடைசி காலத்திலே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மொத்தமாக ஐந்து கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதிலே அறந்தாங்கி தொகுதிக்கு ஒன்றேகால் கோடி ரூபாய் வந்தது. தம்பி விஜயபாஸ்கர் மற்றவர்களுக்கெல்லாம் அந்த ஐந்து கோடி ரூபாய் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அறந்தாங்கி தொகுதியிலே மட்டும் பொதுப் பணித் துறையின் மூலமாக ஏரிகள் தூர்வார, பலப்படுத்த 20 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் நன்றியோடு எங்கள் பகுதி விவசாய மக்களின் சார்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அதைப்போல, ஓர் அணைக்கட்டுத் திட்டம் என்னுடைய தொகுதிக்கு நபார்டு வங்கியின் மூலமாக வந்திருக்கிறது. இப்பொழுது ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த



வேண்டும் என்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி கடந்த 5 ஆண்டுகளிலே செய்த சாதனையை முறியடிக்க வேண்டும் என்று சொன்னால் ஒருவராலேதான் முடியும். அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) வந்து, மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றால்தான் இந்தச் சாதனையை முறியடிக்க முடியும். வேறு எந்தக் கூட்டணியினாலேயும் இந்தச் சாதனையை முறியடிக்க முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் உறுதிபடச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். மனமே இல்லாத போது, இதயமே இல்லாத போது எப்படிச் சாதனைகளைச் செய்ய முடியும்? எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் முயற்சிக்க வேண்டும் என்கிற எண்ணமே இல்லாதபோது, ஒரு மனிதன் எப்படி வெற்றிகொள்ள முடியும்? ஆகவே, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்கிற உன்னத இலட்சியத்தை இதயத்திலே தாங்கி இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சாதனைகளை எல்லாம் செய்து இருக்கிறார்கள்.

அதைப்போல திட்டங்கள் தீட்டுகிறபோது நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்திலே தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். 2001-2002 ஆம் ஆண்டிலே 5,200 கோடி ரூபாயாக இருந்த நம்முடைய திட்ட மதிப்பீடுகள் இன்றைக்கு 11 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாயாக உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது இந்த ஆட்சியினுடைய மிகப் பெரிய சாதனை. இங்கே நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இருந்த ஆட்சியில் வணிக வரித் துறையில் வசூல் என்பது 34 ஆயிரம் கோடி ரூபாய், இன்றைக்கு அதை 56 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது திறமை இல்லையா? அது ஆற்றல் இல்லையா? அது நல்ல சாதனை இல்லையா? அதைப்போல நம்முடைய அயல்நாட்டு மது விற்கிற கடைகளிலே ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தை அதிகமாக ஈட்டி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது திறமை இல்லையா? அது ஆற்றல் இல்லையா? அது சாதனை இல்லையா? அதைப்போல மணல் குவாரியிலே வெறும் 20 கோடி வந்திருந்த நிலையில் 10 மடங்கு அதிகமாக 200 கோடி ரூபாயை இந்த அரசு வருமானத்தைப் பெருக்கி இருக்கிறதே அது ஆற்றல் இல்லையா? அது

சாதனை இல்லையா? அது திறமை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி அரசினுடைய வரி வருவாயை கஜானாவுக்குக் கொண்டு வந்து, ஏற்கெனவே எல்லாம் வசூலாகாமல் இல்லை. வசூல் ஆகியது. அது வேறு எங்கோ போயிற்று. எங்கே போயிற்று என்பது இங்கே இருக்கின்ற அனைவருக்கும் தெரியும்; தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், அந்த நிதிகளை எல்லாம் அரசாங்க கஜானாவுக்குக் கொண்டு வந்து தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளியவர்களுக்காக, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்காக, தமிழகத்திலே இருக்கின்ற பாட்டாளி, தொழிலாளி வர்க்கத்திற்காக அந்த நிதிகளைப் பயன்படுத்துகிறது இந்த அரசு என்பதை இந்தநேரத்திலே நான் தெளிவுபடச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோரிக்கைகள் இல்லாமல் உரையை முடித்தால் அவ்வளவு நன்றாக இருக்காது. ஒன்றிரண்டு கோரிக்கைகளை நான் சொல்ல விரும்புகின்றேன். என்னுடைய அறந்தாங்கியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டுவதற்கு மூன்று, நான்கு ஆண்டுகளாக நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மேல் குறை இல்லை. எனக்குத் தெரியும். அவர்கள் திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் அதற்குரிய நிதியைக் கொடுக்கவில்லை. தந்தால் தருகிறேன் என்று சொன்னார்கள். அதிலே ஏதாவது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் உதவி செய்ய முடியும் என்று சொன்னால், இந்த எளிய சட்டமன்ற உறுப்பினருக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நிதி நெருக்கடி இருந்த சூழ்நிலையிலும்கூட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய திறமையால், அறிவால், நிர்வாக ஆற்றலினால் திறம்பட நிதி நிலைமையைச் சரிசெய்து இன்றைக்கு வாக்களித்த மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காட்டிலும் அதிகமான அளவுக்குச் சலுகைகளை அள்ளி வழங்கிய ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீதித் துறைக்குக்கூட கடந்த எந்தக் காலத்திலும் இந்த அளவுக்கு நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை. 2001–2002 ஆம் ஆண்டைப் பொறுத்த அளவிலே



141 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், 2006–2007ஆம் ஆண்டு 205 கோடியே 37 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–05

கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் நூறு கோடிக்கும் அதிகமான செலவில் நீதிமன்றங்களுக்கு புதிதாக கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய அம்மா உத்தரவிட்டு, பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய மதுரைக் கிளை 65 கோடி, விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 9 கோடியே 62 இலட்சம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 9 கோடியே 82 இலட்சம். அதேபோன்று வேலூர், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 4 கோடியே 97 இலட்சம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 3 கோடியே 90 இலட்சம், Judicial Academy, 4 கோடியே 50 இலட்சம். தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றக் கட்டடங்களினுடைய பராமரிப்புச் செலவிற்கு மொத்தம் 7 கோடியே 58 இலட்சம். எனவே, மாநில அரசு தன்னுடைய நிதி ஆதாரத்திலிருந்து, மத்திய அரசாங்கத்திற்கு பல்வேறு கருத்துருக்கள் அனுப்பிய சூழ்நிலையிலும்கூட, அவர்கள் கொடுக்காத பட்சத்தில், அம்மா அவர்கள் நீதித் துறைக்கு இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து, இன்றைக்குப் பணிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்ன? கூட்டாட்சி முறையிலே இருக்கின்ற மத்திய அரசாங்கம், தன்னுடைய கடமையை அவர்கள் சரிவரச் செய்யவில்லை. கிட்டத்தட்ட 206 கோடி ரூபாய்க்கு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்து, கிட்டத்தட்ட மொத்தம் 61 திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி அனுப்பப்பட்டிருக்கின்றது, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும், மற்றும் நீதித் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்று. ஆனால், இதுவரையிலே அவர்கள் ஒரு ரூபாய்கூட கொடுக்கவில்லை என்கின்றதுதான் ஒரு பெரிய வருத்தமாக இருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், 267/77–D2 என்கின்ற Registrar General–னுடைய கடிதப்படி construction of buildings for the District Munsiff Courts and Jail, construction of combined court buildings at Aranthangi, Pudukkottai District and Quarters for the Judicial Magistrate, 2 கோடியே 98 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே, 206 கோடி ரூபாய்க்கு

இங்கிருந்து கருத்துரு அனுப்பப்படும்பொழுது, அதிலே 50 per cent matching grant–ஆக அவர்கள் கொடுத்தால், நிச்சயமாக ஓர் ஆண்டு காலத்திலே இந்த 61 திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறப்பெறும். அதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. எனவே, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக்கூட பாதி வாங்கிக் கொடுத்தால், மீதிப் பாதியை நாங்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. ப. அரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இதுபோல இரண்டு மூன்று...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கோரிக்கைகளை வலியுறுத்துகின்ற பொழுது, எளிய சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னார்கள். அவர் பெயரிலேயே அரசனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(சிரிப்பு)*

**திரு. ப. அரசன்:** நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோல இரண்டு, மூன்று தடவைகள் சொல்லி, நானும் நிறைய செலவழித்து டெல்லியிலே போய் போராடிப் பார்த்தேன். நான் ஏற்கெனவே சொன்னது போன்று, கொடுக்க மனம் இருந்தால்தானே கிடைக்கும். அங்கே கொடுப்பதற்கே மனம் இல்லை. நீங்கள் ஏதாவது உதவி செய்ய முடியும் என்றால், உதவி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, பல்வேறு துறைகள் நம்முடைய தமிழக அரசிலே இருக்கின்றன. எல்லாத் துறைகளிலேயும் மிக நல்ல சாதனைகள் நடைபெற்றிருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 30 நிமிடம் பேசினால் எல்லாத் துறைகளிலே இருக்கின்ற சாதனைகளையும் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலேயும் மின் துறையில் எங்கள் மாவட்டத்திலே செய்யப்பட்டிருக்கிற சாதனை என்பது, (குறுக்கீடு) சாதனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்திலே ஒரு மிக முக்கியமான கோரிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், இன்னும் ஐந்து பேர் பேசவேண்டும்.

**திரு. ப. அரசன்:** ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒரு மிக



முக்கியமான கோரிக்கை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், இதைக் கவனத்திலேகொண்டு செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, கொள்ளிடத்திலே, நீர் அளவை எடுத்துப் பார்க்கிறபொழுது, 80 சதவிகிதம் அந்தக் கொள்ளிடம் ஆற்றிலே உபரி நீர் சென்றிருக்கிறது. பொதுப் பணித் துறையிலே கணக்கிருக்கிறது. ஆக, அந்தக் கொள்ளிடம் உபரி நீரை எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் திருப்பிவிட வேண்டும், ஒரு கால்வாய் மூலமாகத் திருப்பிவிட வேண்டும் என்கிற கோரிக்கை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேயிருந்து, இருந்து கொண்டிருக்கிறது. எனக்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்கு முன்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் எல்லாம் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கொள்ளிடம் உபரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற நிலங்களுக்கு, ஏரிகளுக்கு திருப்பிவிடுவதற்கான ஒரு திட்டம் பொதுப் பணித் துறையிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே...

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், எஞ்சிய கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** அதுபோல, என்னுடைய தொகுதியிலே ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களிலே எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தாலும் அந்த ஆழ்குழாய்க் கிணறுகளிலே தண்ணீர் உப்பு நீராகப் போய்விடுகிறது. அதற்காக ஒரு மாற்றுத் திட்டம் குடிநீர் வழங்கல் துறையிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் இருந்தால் சொல்ல வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாடல் ஒன்றை எழுதி வைத்திருந்தேன்; அவர்கள் இல்லை. இருந்தாலும் நான் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடினார். 'தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும்' என்று பாடினார். மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் செய்கிற, செய்திருக்கிற தர்மம் உங்கள் தலையைக் காக்கும், தக்க சமயத்திலே வெற்றியைத் தேடித் தரும் என்று

சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

***திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதினி போற்றும் மாதரசி, பார் போற்றும் பேரரசி, மண் ஆளும் மாதர்குல விளக்கு, திராவிடத்தின் திருவிளக்கு, இந்தியாவிலுள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலுக்குப் போர்வை தந்து மனம் குளிர்ந்தான் பேகன்., முல்லைக்குத் தேர் தந்து முகம் மலர்ந்தான் பாரி மன்னன். பிள்ளைக்குச் சோறு தந்து பெருமை பெற்றார் புரட்சித் தலைவர். பெண்களுக்கே தொட்டில் தந்து மகிழ்ந்திட்டார் பெண் இனக் காவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசத்தை மட்டுமே ஆளுகிறவர்களுக்கு மத்தியில் தேசத்தோடு மனித நேசத்தை வாழ்த்துகிற தலைவியாம் அம்மா அவர்களின் ஆட்சியில் மகத்துவம் எண்ணில் அடங்காதவை, ஏட்டில் முடங்காதவை. அவற்றில் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் அம்மாவின் அரசு சூரியனைக்கூட சுட்டெரிக்கும் சுடரொளியாக, பேரொளியாக, சர்வதேச அளவிலேயேகூட ஆற்றல்மிக்க அமைப்பையும், நிர்வாகத்தையும், செயல் திறனையும் கொண்டதாக விளங்குகின்றது. 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று புரட்சித் தலைவர் பாடியது போல, சட்டத்தின்முன் அனைவரும் சமம், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும். அது சாமானியனாக இருந்தாலும், சக்தி வாய்ந்த சாமியாராக இருந்தாலும், மாமியார் வீட்டுக்குப் போவது நிச்சயம் என்று உலகிற்கு எடுத்துக்காட்டியவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் 1996–2001 ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தில் வன்முறை, மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள், சமூகவிரோத சக்திகள் மற்றும் தமிழகத்தில் சந்தன கடத்தல் வீரப்பன் தனி ஆட்சி செய்து கொண்டிருந்தான். இப்போது இருக்கிற அதே காவல் துறைதான் அப்போதும் பணியாற்றிக்கொண்டிருந்தது. ஆனால், அவர்களால் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்ற முடியவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு, ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைத்து தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றியிருக்கின்றார்கள் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். சந்தன கடத்தல் வீரப்பனை ஒழித்த ஆட்சி புரட்சித் தலைவி அம்மாவினுடைய சட்ட ஆட்சி என்பதை இங்கே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறை, நீதிக்கும், நேர்மைக்கும், கட்டுப்பாட்டிற்கும் பெயர்போன இதய தெய்வம் அம்மாவின் கட்டுப்பாட்டில் இருப்பதால்தான் தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தாய் வேலுநாச்சியாரின் வாரிசுகளாக, ஜான்சி இராணியின் சரித்திர சகாப்தத்தைத் தொடர்ந்திடும் வகையில், பெண் வீராங்கனைகளை கமான்டோ படையில் அமைத்து, தீயணைப்புத் துறையில்கூட வாய்ப்புத் தந்தவர் பெண் இனக் காவலர், இங்கே பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்த நம்முடைய பெண் இனக் காவலர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 1575.98 கோடி ரூபாயை காவல் துறைக்காக ஒதுக்கியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் மகளிருக்கு சம நீதி, சமூக நீதி விரைந்து கிடைத்திட மகளிர் நீதிமன்றங்களை அமைத்து பெண் புரட்சியாளராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மதுரையில் உயர் நீதிமன்றம்

அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒரு கனவாக இருந்ததை நனவாக மாற்றிய பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கிழக்கு ஆசியா மற்றும் தொலைகிழக்கு நாடுகளுக்கு இந்தியாவின் நுழைவாயிலாக சென்னை விளங்க வேண்டுமென்று தொலைநோக்குப் பார்வையோடு 583 எக்டேர் நிலத்தை இந்திய விமான நிலையக் குழுமத்திற்கு இலவசமாக அளிக்க உத்தரவிட்ட தலைவி, தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு டீசல் விலையை உயர்த்தினாலும் என்னுடைய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மிகக் குறைந்த பேருந்துக் கட்டணத்தை விதித்த அரசு மக்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றிலேயே விளையாட்டுக் கல்விக்கென ஒரு தனி பல்கலைக்கழகத்தை எந்த ஒரு மாநிலமும் அமைத்தது இல்லை. விளையாட்டுத் துறையில் முதலிடம் பெறவேண்டும் என்று சபதம் எடுத்து இன்று விளையாட்டுப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சீரிய முறையில் இருக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி சம்பந்தமாக ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*"வீடு தோறும் கலையின் விளக்கம்,*
*வீதி தோறும் இரண்டொரு பள்ளி"*

உருவாக வேண்டும் என கனவு கண்டார் எட்டயபுரத்து எரிமலைக் கவிஞர் பாரதி. இக்கனவு நனவாகும் வகையில் பல்வேறு கல்விப் பணிகளும், மாணவர்களுக்கு நிறைவான கல்வி எளிமையாகக் கிடைத்திடும் வகையிலும் ஏராளமான சலுகைகள் மேன்மையான முறையில் கிடைத்திருக்கின்றன என்று சொன்னால் அது கல்வித் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஏழையெளிய மாணவர்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு சுமையாகவும், மன உளைச்சலையும் ஏற்படுத்துவதாக இருந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து அவர்களின் வாய்ப்பைத் தட்டிப் பறித்த அந்த நுழைவுத் தேர்வை, தடைக் கல்லாகவும் இருந்த அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து கிராமப்புற ஏழையெளிய மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்து அவர்களின் வயிற்றில் பால் வார்த்த பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்கால மாணவர்களின் ஒளிவிளக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தாயினும் சாலப் பரிந்து, தாய் வீட்டுச் சீதனம் போல இலவச சைக்கிள் வழங்கி ஒரு மாணவர் குடும்பத்திற்கு ஒரு சைக்கிள் என்று தந்து சமுதாயப் புரட்சியை உருவாக்கி, சத்துணவு தந்த புரட்சித் தலைவரைப் போல சைக்கிள் வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர் சமுதாயம் ஒருபோதும் மறக்காது என உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டணம் இன்றி இலவசக் கல்வி, இலவச சீருடை, சத்துணவு என்ற வரிசையிலே பள்ளிக்குச் சென்றால் பாடப் புத்தகங்கள் வாங்க வேண்டுமென்று பல பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தயக்கம் காட்டினர். அத்தகைய பெற்றோர்களுக்கு பாடப் புத்தகங்களை உங்களுக்கு இலவசமாக நான் தருகிறேன், கல்வி என்ற சொத்து உங்களுக்குக் கிடைக்க வள்ளல் நான் இருக்கிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லி, பாரி வள்ளலாகத் திகழ்ந்து இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கிய தலைவி, கல்வித் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று பைந்தமிழ் புலவன் பாரதி கூறியதுபோல்,

*"வானை யளப்போம்கடல் மீனையளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்."*
*"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"*
*"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்*
*தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்"*

என்று எட்டயபுரத்துக் கவிஞர் பாரதி பாடியதுபோல, அறிவியல் தமிழ் எனும் அற்புதத்தை L.K.G. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிமுகப்படுத்தி

அனைத்து மாணவச் செல்வங்களும் சீரிய முறையில் தமிழ் கற்க வேண்டுமென்று தமிழ் காத்த தமிழகத்தின் உன்னதத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் துயரைத் துடைத்திட பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் தோளிலே கைத்தறித் துணிகளை சுமந்து விற்றார்கள். அண்ணாவின் திருநாமத்தின் பெயரில் இயக்கம் நடத்திவரும் அம்மா அவர்கள் நெசவுத் தொழிலாளர்கள் வாழ்வில் நேர்த்திபெற பல நல்வாழ்வுத் திட்டங்களைத் தந்துள்ளார்கள். நெசவுத் தொழிலாளர்களுக்கு நேசமுடன் உதவிடும் வகையிலும், ஏழை பாமர மக்களுக்கு உதவிடும் வகையிலும், மீண்டும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையிலும் ஆள் பாதி, ஆடை பாதி என்பதற்கு இணங்க 3 கோடியே 28 இலட்சம் ஏழையெளிய மக்களுக்கு இலவசமாக வேட்டி சேலை வழங்கிய காருண்யம் மிக்க ஆட்சி என்று சொன்னால் அது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

**(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே உள்ள ஒரு வியாபாரி என்னிடத்திலே ஒன்று சொன்னார். நான் வங்கியில் கடன் பெறச் சென்றேன். அங்கே வங்கியிலுள்ள மேலாளர், நீங்கள் ஜாமீன்தாரராக ஒருவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள், அப்போது கடன் தருகிறேன் என்று சொன்னார். அப்போது இந்த வியாபாரி இன்னொரு வியாபாரியை அந்த வங்கிக்கு அழைத்துச் சென்று கடனைத் தாருங்கள் என்று கேட்டார். அப்போது அந்த வியாபாரியிடம் அந்த வங்கியிலுள்ள மேலாளர் சொன்னது என்ன தெரியுமா, நீங்கள் இந்த வங்கியில் கணக்கு வைத்துக் கொண்டிருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழு அங்கத்தினரை அழைத்து அவர்களை ஜாமீன் போடச் சொல்லுங்கள், உங்களுக்கு நான் கடன் தருகின்றேன் என்று அப்போது அந்த வங்கி மேலாளர் தெரிவித்தார். இவ்வாறு கிராமப்புறத்தில் வறுமையில் வாடிக் கொண்டிருந்த பெண்கள் இன்று வங்கிகளில் ஜாமீன் கொடுக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமை நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதால், இங்கே பெண்ணினக் காவலர்



அம்மா அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

*"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்*
*பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்*
*எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி"*

என்னும் பைந்தமிழ்ப் புலவன் பாரதியின் வாக்கினை, வரிகளை வனப்புடன் நனவாக்கிடும் வகையில் மாண்புமிகு அம்மாவின் செயல்பாடுகள் சீரிய வகையில் அமைந்துள்ளன.

மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்ய வேண்டும் அம்மா என்று பெரியோர்கள் சொன்னதைப் போல, மங்கையரின் வாழ்வில் புதிய விடியலைப் படைத்திட்ட மாதர்குல மாணிக்கம், மகத்தான சாதனைகள் படைத்திடும் மாதரசி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சக்தியின் அம்சமாக, சத்தியத்தின் அம்சமாக, அகிம்சையின் அம்சமாகத் திகழும் பெண்மையின் நலம் பேணப்பட வேண்டுமென்றால், மக்கள் மகத்தான பொருளாதார வளர்ச்சிப் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் உண்மையை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி அசைக்க முடியாத அரிய அடிப்படையை, அஸ்திவாரத்தை மகளிருக்கு அமைத்துக் கொடுத்தார். இன்றோ இந்த அமைப்புகள் ஆல விருட்சமாக, ஆயிரம்கால் மண்டபமாக, கற்பக விருட்சமாக, காரிருள் அகற்றும் பேரொளியாக வளர்ந்து ஓங்குகின்றன. இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று சொல்லத்தக்க அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வெல்லும் சக்தியாக, வீறுடனும், சீருடனும் வளர்ந்தோங்கிவிட்டது. எனவேதான், மாற்றாரும் இந்த அமைப்புக்களைக் கைவசப்படுத்த முனைகின்றனர். அது நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு, 3 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் பாங்குடன் பரிணமித்து வருகின்றன. 50 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

கடந்த காலத்தில் கால தேவனின் கரங்களில் கந்துவட்டியின் கொடுமையால் நொந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த ஏழை மகளிர், இன்று சுய உதவிக் குழுக்கள் மூலம் வங்கிகளில் 755 கோடி ரூபாய் சேமிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வியாபாரம் மற்றும் சிறுதொழில் செய்திட 1,296 கோடி ரூபாய் கடன் உதவி பெற்றுள்ளார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் முயன்றால், அம்மாவின் ஆட்சியில் எந்தத் தொழிலையும் செய்ய முடியும் என்று வளர்ந்தோங்கிய வளமான வாழ்வு மகளிருக்கு இன்று. வங்கியாளர்களைக் கூட்டி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மேலும் ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி கிடைக்க ஆவன செய்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புனர்காலை விடியலாக, புதுவாழ்வுத் திட்டத்தைத் தந்த பெருமை பெண்ணினக் காவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உன்னதமான திட்டமான பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் ஆகியவற்றைப் பற்றி சில கருத்துகளைத் தெரிவிக்க விழைகின்றேன்.

சேலம் மாவட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொட்டில் குழந்தைத் திட்டத்தைச் செயல்படுத்தும் இல்லத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்போது, அனாதைகளாக பெற்றோரால் கைவிடப்பட்ட பெண் சிசுக்களை அங்கே பார்த்தேன். (குறுக்கீடு) பரிதாபத்திற்குரிய . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்கள் சுதந்திரமாக, சுயமாகத் தொழில் செய்யவேண்டுமென்கின்ற வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு ஆல்போல்



தழைத்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குழுக்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். இப்பொழுது தமிழகத்தில், மொத்தம் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 751 குழுக்கள் இருக்கின்றன. அதில், மொத்த மகளிர் குழு பெண்கள் 53 இலட்சத்து 50 ஆயிரத்து 767 பேர் இன்றைக்குக் குழு உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் மொத்த சேமிப்புத் தொகை 889.16 கோடி ரூபாயினை சேமித்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு சுயமாகத் தொழில் செய்வதற்காக, வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்ட தொகை 1,597 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரிதாபத்திற்குரிய, பெற்றோரால் கைவிடப்பட்ட அந்த அனாதைக் குழந்தைகளை பார்க்கக் கூடிய அந்த வாய்ப்பு ஏற்பட்டபோது, அங்கே எவ்வளவு சிறந்த முறையில், புரட்சித் தலைவி அம்மாவினுடைய தொட்டில் குழந்தைத் திட்டம் நடைபெற்று, செயல்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை பார்த்தேன். பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ள குழந்தைகளைக் கருணை உள்ளத்தோடு 2006-2007 ஆம் ஆண்டில் 75 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த அனாதைக் குழந்தைகளைப் பாதுகாக்கும் உங்களை, புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் மக்கள் அவர்களை அரசியல் அனாதைகளாக ஆக்குவார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீரடிகளாம் தம் ஈரடிகளால் உலகளந்த வள்ளுவப் பேராசான், "உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி" என்று உலகிற்கு உணர்த்தியதைப்போல இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள்

"கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி
முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழுமூச்சாய் அதற்காக தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர்வாழ
வழங்கும் குணம் உடையவன் விவசாயி"

என்று பாடினார்.

அதற்கிணங்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், இன்றையதினம் உழவர் பாதுகாப்புத் திட்டம் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு, அநேகமாக அனைத்து மாவட்டங்களிலும் அதிகமான விவசாயத் தொழிலாளர்கள் புரட்சித் தலைவி அம்மாவினுடைய முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நல்ல பயனைப் பெற்றிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள 1.37 கோடி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, மிகப் பெரிய வரப்பிரசாதமாக இத்திட்டத்தை கொடுத்திருக்கின்றார்கள். இத்திட்டத்தின் மூலமாக அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான திருமண உதவிகள், மகப்பேறுக்கு உதவி, தரமான கல்வி கிடைத்திட உதவி, ஓய்வூதியம், உயிரிழப்பு, எதிர்பாராத செயலிழப்பு போன்றவற்றிற்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

இன்று இந்த உழவர் பாதுகாப்புத் திட்டப் பயனாளிகள் அம்மாவை இங்கே உளமாரப் பாராட்டுகின்றார்கள். உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்பார்கள். அந்த அவல நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக விவசாயக் கடன்களுக்கு வட்டித் தள்ளுபடி வழங்கிய கருணைமிக்க ஆட்சிதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அகில உலகத்திற்கு எடுத்துக்காட்டி இதய தெய்வம் அம்மா அவர்கள், கூட்டுறவு நிதி நிறுவனங்களுக்கு சேதாரம் ஏற்படாமல் அவற்றின் நிதி ஆதாரம் காக்கப்பட வேண்டும் என்பதற்காக தள்ளுபடி செய்யப்பட்ட ரூபாய் 64.5 கோடியை அரசு கூட்டுறவு நிதி நிறுவனங்களுக்கு வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். விவசாயிகளின் காவலர் அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காலமும் ஞாலமும் போற்றும் சீலமிகு நம் தலைவி தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க 45 ஆண்டுகள் செய்ய முடியாத சாதனைகளை இந்த 5 ஆண்டுகளில் செய்து, மகத்தான சாதனை படைத்திருக்கின்றார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அகில உலகமே பாராட்டும் வகையில் ஆலயங்களிலும், சர்ச்சுகளிலும், தர்காக்களிலும், திருக்கோயில் திருப்பணித் திட்டங்கள்,



ஆன்மீகம் தழைத்தோங்கிட, ஆன்மீக வகுப்புகள், குருக்களுக்கும், ஓதுவார்களுக்கும் மாத ஊதியம் மற்றும் இலவச வீடுகளைத் தந்த, எம்மதத்திற்கும் சம்மதம் என்ற அளவில் நல்ல திட்டங்களைத் தந்தவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து கசப்பான மருந்துகளைத் தருவதுண்டு. பின்பு அந்தக் குழந்தைகளின் ஆரோக்கியம் அதிகரிக்கும். அதன் பின்பு அவர்கள் மகிழும் வண்ணம் பின்பு நல்ல இனிப்புகளை வழங்குவாள். அப்படித்தான் இன்று புரட்சித் தலைவி அம்மாவின் பிள்ளைகளான அரசு ஊழியர்களுக்கு 50 சதவிகித அகவிலைப் படியை அவர்களுடைய அடிப்படை சம்பளத்துடன் இணைக்க உத்தரவிட்டு, அரசு ஊழியர்களுக்கு ரூபாய் 1,200 கோடி சலுகைகளை அள்ளித் தந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்காகவே வாழ்கின்ற தலைவி, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று ஓடு, கல்நார் மற்றும் தகரத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று வரியில்லா பட்ஜெட்டைத் தந்தவர் தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதிகமான வரியை வசூலித்த ஆட்சி — இங்கே மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைமூலமாக 20,361.39 கோடி ரூபாய், அதேபோன்று வணிக வரி மூலமாக 56 ஆயிரம் கோடி, 92 இலட்சம் ரூபாயை வசூலாகப் பெற்றிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலர் மக்களை தயார் படுத்தும் இயக்கம் என்று கூட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், மக்கள் அம்மாதான் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்த வேண்டும் என்று தயாராகி காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டியில் வெற்றிக் கனியைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதிர்க்கட்சி கூட்டணியினர் மறந்துவிட்டார்கள். நீங்கள் மக்களை தயார்படுத்தத் தேவையில்லை. ஏனென்றால், மக்கள்

தேர்தலுக்குக் காத்திருக்கின்றார்கள், வாக்களிக்கத் தயாராகி விட்டார்கள். அம்மாவை முதலமைச்சராக ஆக்கத் தயாராகி விட்டார்கள். இன்று சட்டமன்றத்தில் காலியாக உள்ள இருக்கைகளிலும் வரும் 2006 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மாவின் போர்ப்படைத் தளபதிகளை அமர வைக்க மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தாலி நாட்டில் ஒரு நீதி மொழி உண்டு. "The right man comes at the right time" என்று சொல்வார்கள். இன்று 2006 ஆம் ஆண்டில் மக்களுக்கு மக்கள் ஆட்சி வேண்டும், சட்ட ஆட்சி வேண்டும். நன்மை பயக்கும் ஆட்சி வேண்டும். அரசு ஊழியர்களுக்கு 1200 கோடி சலுகைகள் தந்த ஆட்சி வேண்டும். மாணவர்களுக்கு சலுகைகள் தந்த ஆட்சி வேண்டும். இலவச மின்சாரம் தந்த ஆட்சி வேண்டும். முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் வேண்டும். இலவச வேட்டி சேலை தந்த ஆட்சி வேண்டும். அனைத்தும் வேண்டும், அன்னதானம் வேண்டும் என்று இவற்றையெல்லாம் ஒருங்கே தரக்கூடிய ஒரே தலைவி, புரட்சித் தலைவி அம்மா என்பதை இங்கே தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்த மாமன்றத்தில் அளித்திருக்கிற இடைக்கால நிதிநிலை அறிக்கையின் பேரில் எங்கள் இயக்கத்தின் சார்பில் இங்கே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மக்கள்மீது திணிக்கப்படுகிற, ஏழையெளிய மக்களைச் சுரண்டுகிற, அவர்களை வாட்டி வதைக்கிற வரிகள் இல்லை. ஆனால் ஒவ்வொரு நாளும், இந்த நாடு வளமான பாதையிலே போய்க்கொண்டிருக்கிறது என்கிற உணர்வை கடைசி கோடியில், கடைசி மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழையெளிய, நலிந்த, தொழிலாளியும்கூட எண்ணியெண்ணி பூரிக்கிற வகையிலே அப்படிப்பட்ட வரிகள் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது.



அந்த வரிகளும் வார்த்தைகளும்தான் இருக்கிறது என்கிற வகையிலே, சுரண்டாத, வரி இல்லாத இந்த நிதிநிலை அறிக்கையை நான் முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்னாலே இது புத்தாண்டின் கூட்டத் தொடர் என்பதாலே மாண்புமிகு தமிழக முதல்வர் நம்முடைய போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 6-1/2 கோடி தமிழ் மக்களின் கலங்கரைவிளக்கமாய், நாளைய இந்திய துணைக் கண்டத்தின் ஒளிவிளக்காய், நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கிக் கொண்டிருக்கிற அவர்கள் பல்லாண்டு இந்த பொது வாழ்வில் வெற்றிபெற்று ஓங்கி வளர எங்கள் வாழ்த்துக்களை முதலிலே நான் உரித்தாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாழ்த்துக்களை பதிவுபடுத்துவதற்கு முன்னாலே நான் நன்றி சொல்லியாகவேண்டும். ஏறக்குறைய 35 ஆண்டு காலமாய் அடித்தளத்து மக்களுக்கு, அடித்தளத்து மக்களின் பிரதிநிதியாய் உழைக்க முன்வந்திருக்கிற என்னைப்போன்ற ஓர் எளியவனுக்கு ஏறக்குறைய 22 ஆண்டு காலமாய் இந்த சட்டமன்றத்திலே பல வாய்ப்புகளிலே பணியாற்றி வந்திருக்கிற எனக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசின் ஓர் உயரிய விருதான பாபாசாகிப் அம்பேத்கர் பெயரிலே அமைந்த அம்பேத்கர் விருதை எனக்கு வழங்கி சிறப்பித்தமைக்கு நான் உண்மையிலேயே என்னுடைய நன்றியை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

36 ஆயிரம் கோடி கடன், ஒரு நாளைக்கு 11 கோடி வட்டி என்கிற நிலையிலே 2001 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒவ்வொரு நாளும் கோடி, கோடியாய், கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு வாரி, வழங்கிக் கொண்டிருக்கிற வள்ளல் ஆட்சியாக இந்த ஆட்சியை உருவாக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த மாபெரும் அதிசயத்திற்கு தன்னை முழுக்க, முழுக்க அர்ப்பணித்துக்கொண்ட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அந்தப் பேராற்றலை நான் வியந்து, வியந்து இங்கே வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை, இதன்,

கடந்த கால, 4½ ஆண்டுக் கால ஆட்சிச் சிறப்பை, இங்கே நான் சொல்ல ஆரம்பித்தால், சொன்னால் மணிக்கணக்கிலே, நாள்கணக்கிலே, சொல்ல வேண்டிய அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகும். 4½ ஆண்டுக் காலத்திலே தமிழகத்திலே அரை நூற்றாண்டு கால, சுதந்திர, ஜனநாயக, சட்டமன்ற வரலாற்றில் மற்றவர்கள் சாதிக்க முடியாத மாபெரும் சாதனைகளையெல்லாம் இன்றைக்கு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த 4½ ஆண்டுக் காலத்திலேயே இந்த தமிழ்நாட்டிலே, இந்தச் சட்டமன்றத்திலே சாதித்திருக்கிறார்கள். ஆகவே அந்த சாதனைப் பட்டியலைத் தொடர்ந்தால், அது மணிக்கணக்கிலே, நாள்கணக்கிலே போகும்.

அதற்கு முன்னாலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற உழவர் பாதுகாப்புத் திட்டம் இருக்கிறதே, அந்தப் பாதுகாப்புத் திட்டம் இன்று, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆண்ட கேரளாவில் இல்லாத, கடந்த கால் நூற்றாண்டு காலமாக மேற்கு வங்காளத்திலே கம்யூனிஸ்ட்டுகள் ஆண்டு கொண்டிக்கிற அந்த மேற்கு வங்காளத்திலே இல்லாத, விவசாயிகளினுடைய உற்றத் தோழன் என்று சொல்லிக்கொண்ட தேவிலால் ஆண்ட ஹரியானா மாநிலத்திலே இல்லாத, விவசாயிகளே தன்னுடைய பிரதிநிதிகள், அவர்களுடைய பிரதிநிதி நான் என்று சொல்லிக்கொண்ட சரண்சிங் ஆண்ட உத்தரப்பிரதேச மாநிலத்திலே இல்லாத, இந்திய துணைக் கண்டத்திலே இல்லாத, ஓர் ஒப்புயர்வற்ற திட்டத்தை தமிழக மக்களுக்காக, தமிழ்நாட்டிலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால், நான் முதலிலே என்னுடைய பாராட்டுதல்களை இதிலே தெரிவித்தாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

எண்பதுகளின் துவக்கத்திலே இதே மன்றத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர்கள் இன்றைக்கு வரலாறு போற்றுகிற சாதனைத் திட்டமான சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, இந்தப் பெயரையே அதற்குச் சூட்டினார். முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று அதற்குப் பெயர் வைத்தார். இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த உழவர் பாதுகாப்புத்



திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே உழவர்களுக்கு, அவர்கள் கருவிலேயிருந்து எருவாகிப் போகிறவரை, 33 நலத் திட்டங்கள், நேற்று 3 இணைந்து 36 நலத் திட்டங்கள்; நேற்று 3 இணைந்திருக்கின்றன; மேலும் 3 இணைக்கப்பட்டிருக்கின்றன, நேற்று முதல்வருடைய உரையிலே. 36 நலத் திட்டங்கள், கருவிலேயிருந்து அவர்கள் எருவாகிப் போகிற வரை. கருவே கலைந்து போனால்கூட, அதற்குக்கூட அவர்களுக்கு ஊக்கத் தொகை. இந்த வகையிலே அந்த நலத் திட்டங்கள். அதிலே பல நலத் திட்டங்கள். ஒரு தாய்கூட தன்னுடைய மகள், தலைப் பிரசவத்திற்கு வந்தால் அது தலைப் பிரசவத்திற்கு மட்டுந்தான். ஆனால், நம்முடைய தமிழக முதல்வர் இன்று தமிழகத்தின் தாயாக இருந்து, உழவர் பெண்களுக்கு இரண்டு பிரசவத்திற்கு வைத்தியம் பார்க்கிற அப்படிப்பட்ட ஓர் ஊக்கத் தொகையை உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே தந்தார். இந்த ஓர் ஒப்புயர்வற்ற திட்டத்திற்கு நான் இங்கே ஒரு வேண்டுகோளை எங்கள் கோரிக்கையாக முன்வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயர் மாற்றத்தை இங்கே உருவாக்க வேண்டும் என்கிற அந்த முன்மொழிவை இங்கே நான் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது என்ன முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம்? இந்த ஒப்புயர்வற்றத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி. ஆகவே, புரட்சித் தலைவி உழவர் பாதுகாப்பு நலத் திட்டம் என்ற பெயரிலே அது அழைக்கப்பட வேண்டும், அப்படிப்பட்ட அந்தப் பெயர் மாற்றம் வர வேண்டும் என்பதை நான் இங்கே முன்மொழிய விரும்புகிறேன். புரட்சித் தலைவர் கொண்டுவந்தபோது இப்படித்தான். ஆனால், காலப்போக்கிலே அது இன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்றுதான் வழங்கப்படுகிறது. ஆகவே, ஒருவேளை இந்தக் கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், ஏற்றுக்கொள்ள மறுத்தாலும்கூட, நீங்கள் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், நாளைய வரலாறு நிச்சயம் இதற்கு புரட்சித் தலைவி உழவர் பாதுகாப்பு நலத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற பெயரை வழங்கும். காலம் அதைக் கொண்டு வரும் என்பதை நான் இங்கே சொல்லவிரும்புகிறேன். இந்த உழவர் நலப் பாதுகாப்புத் திட்டத்திலேகூட இதுவரையிலே வேறு எந்த முதலமைச்சரும் செய்ய முடியாத ஒரு மாபெரும் சாதனையை நம்முடைய முதல்வர் அவர்கள் செய்தார்கள்.

பிற்பகல் 12–40

ஓர் ஆண்டுக்கு 7,000 ஆதி திராவிடர் பெண்களுக்கு அவர்கள் 2 ஏக்கர் நிலம் வாங்குவதற்கோ அல்லது 1 ஏக்கர் நிலம் வாங்குவதற்கோ 1 இலட்சம் மானியத்துடன் 2 இலட்சம் வரையிலே கடன் தருகிற அந்தத் திட்டம் இருக்கிறதே அந்தத் திட்டம் இதுவரையிலே தமிழ்நாட்டிலே ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு யாராலும் நடைமுறைக்கு கொண்டுவர முடியாத ஒரு திட்டம். ஓர் ஆண்டுக்கு 7,000 ஆதி திராவிடர் பெண்கள் 7,000 ஏக்கரையோ அல்லது 14,000 ஏக்கர் நிலத்தையோ பெற முடிந்து, இந்த மண்ணின் மைந்தர்கள் அந்தப் பட்டியல் நீண்டு தொடருமானால் இந்த மண்ணின் மைந்தர்கள் மீண்டும் இந்த மண்ணை ஆளுகிற அப்படிப்பட்ட ஒரு சமூகப் புரட்சி தமிழ்நாட்டிலே உருவாகும். ஓர் ஆண்டுக்கு 7,000 என்று திட்டமிட்டு ஓர் இலக்கை வைத்து அதை நடைமுறைபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் இருப்பதினாலே இந்த 7,000 இலக்கு முழுமையாகிறதா என்பதை அன்புகூர்ந்து அதிலே தீவிரம் காட்டி கண்காணிக்க வேண்டும். அதிலே வேறு ஏதாவது, அதைப் பெறுவதற்கான சிக்கல்கள், சிறிய சிக்கல்கள் இருந்தாலும் அந்தச் சிக்கல்களை, நடைமுறைகளை இலகுவாக்கி அதை விரைவுபடுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே ஏழையெளிய, நலிந்த மக்கள் தொழிற் கல்வியைப் பெறுவதற்கு கிராமப்புறத்து மாணவர்கள் இங்கே மருத்துவப் படிப்பு படிக்க, பொறியியல் படிப்பு படிக்க, வேறு பல தொழிற் படிப்புகளைப் படிக்க, அவர்களுக்கு இடையூறாக இருந்த நுழைவுத் தேர்வை—கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அவர்களுக்கு ஒரு கேள்விக் குறியாய், சிக்கலாய், ஒரு தொல்லையாய் துயரமாய் இருந்த அந்த நுழைவுத் தேர்வை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துணிந்து இரத்து செய்து கல்விப் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறார்கள் என்றால் எளிய மக்களின், நலிந்த மக்களின் சார்பிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையைப் போல, கோவையைப் போல பெரிய பெரிய நகரங்களிலேதான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் இருந்தன. கிராமத்து மாணவர்கள், நகரத்து மாணவர்களோடு போட்டி போட முடியாத, அப்படிப்பட்ட ஒரு சூழல் இன்றைக்கு இருந்தது. அந்தச் சூழலை நல்ல சூழலாக உருவாக்கி மாற்றியமைத்து இன்றைக்கு



அந்த நலிந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, கிராமப்புற மாணவர்களுக்கு, அவர்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தருகிற வகையிலே அவர்கள்கூட திறம்பட படித்தால், அவர்கள் முயன்று படித்தால் தொழிற் கல்வி பெறலாம் என்கின்ற அந்த உணர்வை, நம்பிக்கையை உருவாக்குகிற வகையிலே, துணிந்து இதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் அரசு மிகச் சிறப்பான அரசாக, பாராட்டத்தக்க அரசாக இருக்கிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு அந்த மாநிலத்திலே அமைந்திருக்கிற சட்டம் ஒழுங்கு சூழ்நிலை. சட்டமும் ஒழுங்கும் எப்படி காப்பாற்றப்பட்டிருக்கிறது? நலிந்த மக்களின் பிரதிநிதியாக இங்கே நான் மனந்திறந்து சொல்கிறேன். கடந்த 4½ ஆண்டு காலமாக தமிழகத்திலே இருக்கிற 2 கோடிக்கும் மேற்பட்ட நலிந்த மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தலித் மக்கள் பாதுகாப்பு உணர்வோடு இருந்திருக்கிறார்கள் என்கின்ற அந்த நம்பிக்கை. அப்படிப்பட்ட சூழல், அப்படிப்பட்ட சட்டமும் ஒழுங்கும் தமிழ்நாட்டிலே காப்பாற்றப்பட்டிருக்கிறது என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒரு நடவடிக்கைக்காகவே இந்த அரசை நாங்கள் வாயார, மனமார, நெஞ்சார வாழ்த்திக் கொண்டேயிருக்க வேண்டும், வாழ்த்த வேண்டும். நடுநிலையாளர்கள் வாழ்த்த வேண்டும். உண்மையாக, நிருவாகத்தைத் தெரிந்தவர்கள் வாழ்த்த வேண்டும்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 5 ஆண்டு காலத்திலே தமிழ்நாட்டின் வட மாவட்டங்களிலே, ஆயிரக்கணக்கான தலித் குடிசைகள் கொளுத்தப்பட்டன. தென் மாவட்டங்களிலே ஆயிரக்கணக்கான தலித் குடியிருப்புகள் தாக்கப்பட்டன. எப்போதும் ஒவ்வொரு நாளும் ஒரு பதற்ற நிலை வட மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களிலும் இருந்தது. வீட்டிற்கு வெளியே போனவன் மீண்டும் ஒழுங்காக வர முடியுமா? சந்தைக்குப் போனவன், கடைக்குப் போனவன், பள்ளிக்குப் போனவன், பணிக்குப் போனவன், வியாபாரத்திற்குப் போனவன் வீடு திரும்ப முடியுமா என்ற நிலைமை இருந்தது. அதெல்லாம் மாறி இன்றைக்கு தமிழ்நாட்டிலே 2 கோடி நலிந்த மக்கள், பாதுகாப்போடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதுகாப்பு அரணுக்குள், வளையத்திற்குள் நிம்மதியாய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் சட்டத்தின் ஆட்சி. சட்டம் ஒழுங்கினைக் காப்பாற்றுகிற ஆட்சி, ஒரு வலிமையான ஆட்சி; தவறு என்று தெரிந்தால் மிகத் துணிவாக நடவடிக்கை எடுக்கிற ஆட்சி. அப்படிப்பட்ட ஓர் ஆட்சியாக

நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சி இருப்பதனால்தான் இது உருவாக முடிந்தது என்பதை நாங்கள் நெஞ்சம் நிறைந்து மனம் திறந்து வாழ்த்தியாக வேண்டும். ஏனென்றால் கட்சியை, ஆட்சியை, நிர்வாகத்தை, இந்த மூன்றையும் சுட்டு விரலிலே நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி வைத்திருப்பதனாலே அது சாத்தியமானது. சிலருக்கு குடும்பத்தைக்கூட கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. ஆனால், கட்சி, ஆட்சி, நிர்வாகம் இந்த மூன்றையும் தன்னுடைய சுட்டு விரலுக்குக் கட்டுப்பட்டு நம்முடைய தமிழக முதல்வர் வைத்திருப்பதனாலே இந்த சட்டத்தின் ஆட்சியை தமிழகத்திலே கடந்த 4–1/2 ஆண்டு காலமாக மிகத் திறம்பட நிர்வகிக்க முடிந்தது. தாமிரபரணி இரத்தமாகியதே, தாமிரபரணி இரத்த ஆறாக ஓடியதே, அந்தச் சூழல் இன்றைக்கு இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் குடியிருப்புகள் பற்றி எரிந்ததே, அந்தச் சூழ்நிலை இன்றைக்கு இல்லை. கொத்து கொத்தாய் 12 பேர் மேலவளைவிலே, பல பகுதிகளிலே, நூற்றுக்கணக்கானவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்களே, அப்படிப்பட்ட சூழல் இன்றைக்கு இல்லையென்று சொன்னால், நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நெஞ்சம் நிறைந்து பாராட்டுவதை யாரும் குறை சொல்ல முடியாது. அதற்கு வேறு பார்வையை வேறு எவரும் கற்பிக்க முடியாது. அந்த வகையிலேதான் நாங்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–45

கல்வி, தொழில், சுகாதாரம், உணவு, வேளாண்மை, நலிந்தோர் நலன், இவையெல்லாம் ஓர் ஆட்சியிலே, இந்த நாட்டிலே அரசியல் சட்டத்தை உருவாக்குகிறபோது 14 வயதுவரை ஒவ்வொருவருக்கும் இந்தியாவிலே கட்டாயக் கல்வி தந்தாகவேண்டும் என்று அரசியல் சட்டத்திலே Directive Principles என்று சொல்லப்படுகிற வழிநடத்தும் கோட்பாடுகளிலே குறிப்பிட்டார்கள். 14 வயது வரையிலே கட்டாயக் கல்வி இருக்கவேண்டும். அதுதான் இந்த அரசியல் சட்டத்தினுடைய தலையாயக் கடமை. அதை நோக்கித்தான் நம்முடைய இந்தியக் குடியரசு போகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், நடைமுறையிலே இதிலே 30 சதவீதத்தைகூட நாம் வெற்றி பெறமுடியவில்லை. தமிழ்நாட்டிலே இன்றைக்கு அந்த நிலைமை இருக்கக்கூடாது என்கிற வகையிலே, படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகம் இலவசம், அவர்களுக்கு மிதிவண்டி, அவர்களுக்கு விடுதிகள்,



அவர்களுக்கு வேண்டிய உணவு, இப்படிப் படிக்கிற மாணவர்களுக்கு ஏழை எளிய நலிந்த மாணவர்களுக்கு, கோடிக்கணக்கான மாணவர்களுக்கு இன்றைக்கு ஒரு தாயாக, அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், சூழல் என்ற அனைத்தையும் கல்விக்காக உருவாக்கி, கல்வியை இன்று வழங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவியை, கல்விப் புரட்சிக்கு வித்திடுகிற இந்த மாபெரும் சாதனையை நாம் நிச்சயம் இந்த மாமன்றத்திலே பாராட்டிப் பதிவு செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) புத்தகம் இலவசம். மிதிவண்டி இலவசம். அதற்கு மேலே அவர்களுக்கு உணவு, விடுதிகள், உறைவிடங்கள், ஆதிதிராவிட மாணவர்களுக்கு தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 900–க்கும் மேற்பட்ட மாணவர் விடுதிகள் இருக்கின்றன; முழுக்க, முழுக்க கட்டடங்களாக உருவாகி, அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு கல்விச் சூழல் உருவாகியிருக்கிறது என்றால், 900–க்கும் மேற்பட்ட விடுதிகள், இன்றைக்கு நல்ல, அழகான, எழிலான கட்டடங்கள் அமைந்து உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஒவ்வொரு ஆண்டும் அவர்களுடைய, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதியைக் கொண்டு வரவேண்டும் என்று கட்டாயம் ஆக்கியதனுடைய, இந்த ஆட்சியினுடைய அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைதானே காரணம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசின், நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு போக விரும்புகிறேன். ஆதிதிராவிட மாணவர்களுடைய விடுதியிலே 300 ரூபாய் ஒரு மாதத்திற்கு அவர்களுக்கு உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது. ஏறக்குறைய 900 விடுதிகளிலே இந்த உணவுக் கட்டணம் 300 ரூபாய் என்று வழங்கப்பட்டு, ஏறக்குறைய 68,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள், மாணவிகள் இதிலே பயனடைந்து வருகிறார்கள். 43 விடுதிகளுக்கு . . .

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**முனைவர் செ.கு. தமிழரசன்:** கொஞ்சம், (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். 43 விடுதிகள் மட்டும், தனியார் விடுதிகள் அரசு உதவி பெறுகிற விடுதிகளாக இருக்கின்றன. இந்த 43 விடுதிகளிலே ஏறக்குறைய 4,500 ஆதிதிராவிட மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிர்வாகச் செலவையும் அந்தத் தனியார் நிறுவனங்களே

ஏற்றுக்கொள்கின்றன. அந்த விடுதிகளுக்கு அரசாங்கத்திலே வழங்குவதைப் போல, நீங்கள் 200 ரூபாய் தருகிறீர்கள். அரசு விடுதிகளிலே 300 ரூபாய் என்றும், தனியார் ஆதிதிராவிடர் விடுதிகளுக்கு 200 ரூபாய் என்றும், 100 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. அவர்களுக்கு நிர்வாகச் செலவும் இருக்கிறது. அரசாங்கத்திற்கு நிர்வாகச் செலவு இல்லை. எனவே, இதை ஒரே நிதியாக, ஏறக்குறைய 300 ரூபாய் என்றால், 300 ரூபாயாகவே வழங்குவதற்கு அருள்கூர்ந்து நீங்கள் முன்வரவேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்தக் கோரிக்கையை ஏன் இங்கே வைக்கிறோம் என்று சொன்னால், கோரிக்கைகளை இங்கே வைக்கிறபோது, இந்தக் கோரிக்கைகளிலே நியாயம் இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைபடுத்துவதிலே, நாங்கள் கோரிக்கை வைக்கிற வேகத்தைவிட, அவ்வளவு வேகமாகச் செயல்படுகிற அரசு நம்முடைய புரட்சித் தலைவி அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில அரசு நிர்வகிக்கிற சிறுபான்மை ஆணையம் இருக்கிறதே, இந்த சிறுபான்மை ஆணையத்திலே அம்பேத்கருடைய பற்றாளர்கள் எல்லாம், அவரைப் பின்பற்றுபவர்கள் எல்லாம் தமிழகத்திலே பெருமளவிற்கு பௌத்தர்களாக இருக்கிறார்கள். ஒரு காலத்திலே மணிமேகலையை, வளையாபதியை, குண்டலகேசியை முப்பெருங்காப்பியங்களைத் தமிழ்நாட்டிற்குத் தந்த பௌத்தம் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே சீரழிந்துபோய்விட்டது. இப்போது அம்பேத்கருடைய பற்றாளர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, சிறுபான்மையினர் நல ஆணையத்திலே ஒரு பௌத்தர் இடம் பெறவேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நாங்கள் நீண்ட காலமாக வலியுறுத்திக் கொண்டிருந்தோம். சில தினங்களுக்கு முன்னாலே அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அலுவலகத்திற்கு அனுப்பியபோது, பத்தாவது நாளிலே பதில் கிடைத்தது. அரை நூற்றாண்டு காலத்திற்குப் பிறகு, இன்றைக்குச் சிறுபான்மையினர் நல ஆணையத்திலே பௌத்த மதத்தின் சார்பிலே, எங்களுடைய போற்றுதலுக்குரிய பிக்கு ஒருவர் அசோ வோஷ் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

அதுதான், இந்த அரசிடம் கோரிக்கை வைக்கிறபோது, அது நியாயமான கோரிக்கையாக இருந்தால், அது மக்கள் பிரச்சினையாக இருந்தால், அதை யார் சொல்கிறார்கள், எப்படிச் சொல்கிறார்கள்,



எங்கே சொல்கிறார்கள் என்கிற கேள்விக்கே இடம் இல்லாமல், அதை நிறைவேற்றித் தருகிற, வேகமாகச் செயல்படுகிற எளிய மக்களின் அரசாக இருப்பதனாலேதான் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

நேற்றைக்கு தமிழக அரசு, தமிழக அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு நிகராக 1,200 கோடி ரூபாயை வாரி வழங்கி, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற பல இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் அகமகிழ்கிற அளவிற்கு அவர்களுடைய அகவிலைப் படி உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நேற்றைக்குக்கூட 360 கோடி ரூபாய்க்கு மேலே நலத் திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே, 34 இலட்சம் குடும்பங்களுக்கு, 10 நாளிலே, 1,000 ரூபாயிலிருந்து, 5,000 ரூபாய் வரை உதவித் தொகை, அரிசி, அவர்களுக்கு உடை, வேண்டிய மண்ணெண்ணெய் அத்தனையும், 34 இலட்சம் குடும்பங்களுக்கு தமிழ்நாட்டிலே வழங்கப்பட்டு, பத்தே நாளிலே 22 மாவட்ட மக்களை சகஜ நிலைக்குக் கொண்டு வந்திருக்கிற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதனாலே, வெள்ள நிவாரணப் பணிகளிலே நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை, இன்றைக்குத் தாராளமயத்தோடு, தாயுள்ளத்தோடு, எந்தக் கெடுபிடியும் இல்லாமல், பாதிக்கப்பட்ட ஏழையெளிய நலிந்த மக்கள் எல்லாம், ஆயிரக்கணக்கிலே வாங்கிப் பெற்று, அவர்கள் வாழ்க்கையிலே நிவாரணம் பெறுவதற்கு வழிவகுத்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாங்கள் எங்களுடைய பாராட்டுகளை இங்கே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

கூட்ட நெரிசலிலே 42 பேர், — சென்னையில் மக்கள் நெரிசல் மிகுந்த பகுதியிலே ஏற்பட்ட ஒரு வதந்தியினாலே, ஏற்பட்ட ஒரு விபத்திலே, வியாசர்பாடியிலே 6 பேர், சென்னை, எம்.ஜி.ஆர். நகரிலே 42 பேர் இறக்க நேரிட்டது. அந்தப் பிணம் அங்கேயிருந்து வீட்டிற்குக்கூட வரவில்லை. எதிர்க்கட்சி, தோழமைக் கட்சிக் கூட்டம் என்று அவருடைய தலைமை அலுவலகத்திலே — அந்தப் பிணம் கூட வீட்டிற்கு வரவில்லை — இவர்கள் கூட்டம் போட்டுக் கேட்டார்கள்,

பணி நியமனத் தடை இருக்கிறதே! இது எப்படி முடியும்? எப்படி முடியும்? இது முடியாதே? இதைச் சொன்னால்கூட நடக்காதே? அரசாங்கத்திலே வழியில்லையே'' என்று நான் சொல்லிக் கொண்டிருந்தபோது, அந்த 70 வயது முதியவர், ஒரு துப்புரவுத் தொழிலாளி சொன்னார். ''நீங்கள் சொல்லுங்கள், நீங்கள் பேசுங்கள். (மணியடிக்கப்பெற்றது) அம்மா 110–வது விதியிலே இதைச் செய்வார்கள்" என்று எனக்கு அவர் சொன்னார்.' (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 110–வது விதியை, தமிழ்நாட்டிலே இருக்கிற, ** ஒரு துப்புரவுத் தொழிலாளி, 70 வயது முதியவர் பேசுகிறார் என்று சொன்னால், சட்டமன்றத்தின் 110–வது விதிக்கே ஓர் இலக்கணம் வகுத்தவர் இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த ஒரு முதலமைச்சரும் அரை நூற்றாண்டுகால வரலாற்றிலே இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளிலே 110–வது விதியிலே நலத் திட்டங்களை, இவ்வளவு நலத் திட்டங்களை வாரி வழங்கியதாக வரலாறு இருக்கமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்று சொன்னதை மட்டும்..

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இல்லை, இல்லை, நான் ** சொல்லவில்லை. அப்படிச் சொன்ன அந்த சாமானியனைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** எழுதப் படிக்கத் தெரியாதவர், அதனால் நான் சொன்னேன். எழுதப் படிக்கத் தெரியாதவர்; அவருக்குப் பத்திரிகை படிக்கும் பக்குவம் இல்லை. அவர் என்னிடம் சொல்கிறபோது இதைச் சொன்னார். ''நீங்கள் சொல்லுங்கள், அம்மா 110–வது விதியிலே செய்வார்கள். நீங்கள் சொல்லுங்கள், இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது என்று". ஆக, அந்த நம்பிக்கை இன்றைக்கு எளிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், அந்த நம்பிக்கைக்கு இலக்கணமாக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களின் தலைமையிலான ஆட்சியை நான் மனம் திறந்து பாராட்டி ஆகவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிக்கிரம் முடித்துவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** சில கோரிக்கைகளை நான் வேக வேகமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆறு மாதத்திற்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது, கேபிள் டி.வி–க்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்ன கோரிக்கைகள் எல்லாவற்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆமாம், ஆமாம். அதைத்தான் சொல்கிறேன். ஆறு மாதம் என்று சொல்கிறேன். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது, நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு நினைவு இருக்கும். கேபிள் டி.வி.–க்களை ஒழுங்குபடுத்த வேண்டும், அது தனியார் சம்பாதித்துக் கொண்டிருக்கிற நிறுவனமாகப் போய் கொண்டிருக்கிறது. அதன்மூலம் படித்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு எவ்வளவோ வாய்ப்பை ஏற்படுத்தலாம். அந்தப் பட்டதாரிகளுக்கெல்லாம் ஒவ்வொரு பகுதியிலேயும் அவர்களை இதன் முகவர்களாக நியமித்தால், அவர்கள் வாழ்வதற்கான வழி கிடைக்கும் என்று போன ஆண்டு சொன்னதற்கு இப்போது விடிவு கிடைத்திருக்கிறது. அதைத்தான் சொல்கிறேன். இங்கே பேசுகிற போது நம்முடைய முதல்வர் அவர்களுக்கு — ஆண்டவனுக்கு ஆயிரம் கண்கள் உள்ளது என்று சொல்வார்கள். அம்பேத்கர்வாதிகளான எங்களைப் போன்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்று சொன்னாலும், இன்றைக்கு நம்மை ஆண்டு கொண்டிருக்கிற முதல்வர் அவர்களுக்குப் பல்லாயிரம் கண்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆகவேதான் இங்கே சொல்கிறோம். இங்கே பேசுகிற. அவர்கள் முன்னாலே வைக்கிற இந்தக் கோரிக்கைகள் அவர் பரிசீலனைக்குப் போகும், விடிவு கிடைக்கும் என்பதினாலேதான், அவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

மதம் மாறிய தலித் கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீட்டை ஏதோ ஒரு வகையிலே வழங்கலாம் என்ற கோரிக்கை நீண்டகாலமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இட ஒதுக்கிடு கிடைக்கவில்லையென்றாலும் பரவாயில்லை. அது அரசியல் சட்டத்திலே பல சிக்கல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது இருந்தாலும் பரவாயில்லை. நம்முடைய மாநில அரசு அவர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லாமல், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், B.C என்ற பட்டியலிலே வைக்காமல், M.B.C

என்ற பட்டியலிலே வைக்கலாம். அது மாநில அரசினுடைய அதிகாரத்திலே இருக்கிறது. ஆகவே, தலித் கிறித்துவர்களை M.B.C என்கிற மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு ஆவன செய்வதற்கு ஏதேனும் வழிவகுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–00

அதைப்போலவே, விவசாயிகளுக்கு வாரி வழங்கியிருக்கிறீர்கள். நெசவாளர்களுக்கு வாரி வழங்கியிருக்கிறீர்கள், தொழிலாளர்களுக்கு வாரி வழங்கியிருக்கிறீர்கள், அரசு ஊழியர்களுக்கு வாரி வழங்கியிருக்கிறீர்கள். இந்த நலிந்த மக்களுக்கு என்னுடைய ஒரு சிறிய யோசனையை இந்த அரசுக்கு முன்வைக்க விரும்புகிறேன். சுயநிதிக் கல்லூரிகளில் எல்லாம் நம்முடைய மாநில அரசு தொழிற்கல்விகளையோ . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருத்துவ சமுதாயத்தினுடைய தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மொத்தமாகவே அரசினுடைய முழு மக்கள்தொகையினுடைய தொகுப்பினுடைய கணக்கெடுப்புக்குப் பின்னர்தான் இதைப் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தமிழரசன், இத்துடன் முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே புதிய தொழிற்கல்விகள், புதிய கல்லூரிகள், பல பகுதிகளில் இன்றைக்குத் தொடங்கப்படுவதில்லை என்பதை நாம் ஒரு கொள்கை முடிவாக வைத்திருக்கிறோம். பெருமளவுக்கு சுயநிதிக் கல்லூரிகள் வந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் தமிழரசன், பேசி முடியுங்கள்.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** நான் முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். சுயநிதிக் கல்லூரிகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த சுயநிதிக் கல்லூரிகளிலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சு பேச வேண்டிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்துவிடுகிறேன். இந்த கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். சுயநிதிக் கல்லூரிகளிலே அரசு ஒதுக்கீடு என்று இருக்கிறது. அந்த அரசு ஒதுக்கீட்டிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவீர்களேயானால் அரசு ஒதுக்கீட்டிலே அவர்களுக்கு உரிய அந்தக் கட்டணத் தொகையை அரசே செலுத்துகிற ஒரு வழிநிலையை கொண்டுவந்தால் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயம் மிக மிக நன்றிக் கடப்பாடு உடைய சமூகமாக இருக்கும். ஏனென்றால் இப்போது புதிய தொழில் கல்விகளோ, தொழிற்கல்வி நிலையங்களோ, சுயநிதிக் கல்லூரிகளோ அரசு கொண்டு வருவது இல்லை. ஆகவே, அந்த கல்லூரிகள்தான் பெருமளவிலே வந்து கொண்டிருக்கின்றன. அந்த சுயநிதிக் கல்லூரிகளிலே Government quota என்று சொல்லப்படுகின்ற இந்த அரசு ஒதுக்கீடுகளிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நியமிக்கப்படுவார்களேயானால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்குப் பிறகு, இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய amendment–க்குப் பிறகு, மாநிலங்களில் இருக்கின்ற சுயநிதி அடிப்படையில் நடைபெறுகின்ற பொறியியல் கல்லூரிகளிலே அரசு ஒதுக்கீடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழரசன், முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலேயும் நம்முடைய முதல்வர் அவர்கள் மிகப் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறார். இன்றைக்கு இந்தியாவிலேயே அரசியல் சட்டத்தையே மாற்றி திருத்தி எழுதுவதற்கு உச்சநீதிமன்றத்திலே அப்படிப்பட்ட ஒரு சூழலை உருவாக்கி,

உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்த பெருமை, நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சாரும். அவர்கள் இல்லாவிட்டால், சுயநிதிக் கல்லூரிகளிலே இந்த இட ஒதுக்கீடு முறையே இரத்து செய்யபபட்டிருக்கும். இன்றைக்கு அந்தப் பாதுகாப்புக் கிடைத்திருக்கிறது. சுயநிதிக் கல்லூரிகளிலே அவர்களுடைய ஒதுக்கீட்டிலே இட ஒதுக்கீடு இல்லை. ஆனால், நாம் அனுப்புகிறவர்களிலே இட ஒதுக்கீடு இருக்கிறது. நாம் அனுப்புகின்ற மாணவர்களிலே இட ஒதுக்கீடு இருக்கிறது. அரசு Government quota அதிலே அவர்களுடைய அந்தக் கட்டணத் தொகையை ஒரு 35,000, 75,000 ரூபாய் என்று நிர்ணயிக்கின்றபோது அதைச் செலுத்துவதற்கு இவர்களுக்கு தயக்கமோ, அவர்களுக்கு ஒரு பற்றாக்குறையோ இருக்கிறது. அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களோ, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களோ முதல்வர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டுப்போய் அந்தக் கட்டணத்தை அரசே செலுத்துகின்ற முறை, அப்படிப்பட்ட ஒரு புதிய திட்டம், அந்தப் புதிய திட்டம் கொண்டுவரப்படுமேயானால், ஒரு சாதாரண ஏழையெளிய நலிந்தவன்கூட சுயநிதிக் கல்லூரிகளிலேபோய் அவர்களுடைய குழந்தைகளை M.B.B.S. படிக்க வைப்பதற்கோ, B.E. படிக்க வைப்பதற்கோ வாய்ப்பு உருவாகும். ஆகவே, அந்த ஒரு புதிய திட்டத்தை நான் இங்கே என்னுடைய கோரிக்கையாக முன் வைக்க விரும்புகிறேன்.

இன்னொரு கோரிக்கை, தலித் மக்களிடையே அண்ணா அவர்கள் சொன்னதைப்போல— 'சாலையோரத்திலே வேலையற்றவர்கள், வேலையற்றவர்களின் நெஞ்சத்திலே விபரீத எண்ணங்கள்' என்று ஒரு முறை அண்ணா சொன்னதைப்போல இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பெருமளவிற்குப் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு நீண்ட காலம் ஆகிறது. அப்படிப்பட்ட ஒரு காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுடைய மத்தியிலே விபரீத எண்ணங்கள் எல்லாம் வருவதற்கான வித்துக்கள் உருவாகிவிடுகிறது. அவர்கள், வேலைக்கு போவோம் என்றால், இன்றைக்கு ஒரு சாதாரண பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டுமென்று சொன்னால்கூட அவர்களுக்கு வசதி வாய்ப்பு கிடையாது. பல கம்பெனிகளுக்கு எழுதுவதற்குக்கூட வசதி வாய்ப்பு கிடையாது. ஆகவே, வேலையற்ற தலித் பட்டதாரிகளுக்கு ஒரு B.A. படித்து, B.Sc., படித்து, ஏதோ படித்து, வேலையில்லாது இருக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கின்றவரை ஒரு ஊக்கத் தொகையாக ஒரு 500 ரூபாயோ, ஒரு 300 ரூபாயோ, மாதா மாதம் வழங்குவதற்கான, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நீங்கள் அன்புகூர்ந்து பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.



என்னுடைய தொகுதி கோரிக்கை, ஒரே ஒரு கோரிக்கை. நீண்ட நாளாக அது திருவாரூர் நாகப்பட்டினம் என்று மாற்றியமைக்கப்பட்டபோது, அந்த எல்லைகள் பிரிக்கப்பட்டபோது ஒரு பகுதியிலே இருந்து சாதாரணமாக காவல் நிலையத்திற்குப் போக வேண்டுமென்றால் 60, 70, 80 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமை இன்றைக்கு நாகப்பட்டினம், திருமருகல் ஒன்றியத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. திருவாரூரிலே இருக்கிறவன் போக வேண்டுமானாலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, திருக்கண்ணபுரத்தை மையமாக வைத்து ஒரு காவல் நிலையத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதை நான் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–05*

திருக்கண்ணபுரத்திலே மேல்நிலைப் பள்ளி ஒன்றை உருவாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

நன்னிலம் பகுதியிலே, நல்ல நிலம், அந்தப் பகுதியிலே விவசாயத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, இடைக்கால நிதிநிலை அறிக்கை என்றாலும்கூட, இந்த ஆண்டின் முழு நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் இந்த மாமன்றத்திலே வழங்கப் போகிறார். இந்த முழு நிதிநிலை அறிக்கையை வழங்குவதற்கான வாய்ப்பை தமிழ்நாட்டு மக்கள் அவர்களுக்குத்தான் வழங்குவார்கள். அந்த நிதிநிலை அறிக்கை இந்த சமூக மாற்றத்திற்கான முழு நிதிநிலை அறிக்கையாக அமையும் என்கிற வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தி. மைதிலி, தன்னுடைய கன்னிப் பேச்சைப் பேசுவார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

***திருமதி தி. மைதிலி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பில், அறிவில், ஆற்றலில், ஆன்மீகத்தில், தியாகத்தில்,



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227005
சென்னை-600 008

செயலில், பண்பில், பரிவில், பாசத்தில், கனிவில், துணிவில், கண் தூங்கா உழைப்பில், சிந்தனையில், பேச்சில், எழுத்தில், ஈடற்ற ஈகை குணத்தில் என அத்தனை குணங்களும் இணைந்து, தமிழகம் சிறந்து விளங்கிடவும், மக்களின் வாழ்வு மலரவும், ஓயாமல் உழைக்கின்ற உத்தமத் தாயே, அமைதிப் பூமியின் சத்தியத் தாயே, சிங்க நிகர்த் தலைவியே, எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் தமிழகத்தின் முன்னேற்றப் படி என்று, நாளும் 20 மணி நேரம் உழைக்கும் எங்கள் உயிர் மூச்சே, கங்கை வற்றினாலும், கருணை வற்றாத பேருள்ளம் கொண்ட எங்கள் அன்னையே, தங்களுக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில், என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்னர், வராது வந்த மாமணிபோல்" என்ற பாட்டுக்கொரு புலவர் பாரதியார் குறிப்பிட்டதைப்போல், தமிழ்நாடு பெற்ற ஒப்பற்றத் தலைவியாக, இதயதெய்வம் அம்மா அவர்கள் சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறமையில்லாத காரணத்தினால், தமிழகத்தின் பொருளாதாரம் பாழ்பட்டு, மக்கள் வாழ்வு சீர்கெட்ட வேளையில், தமிழகத்தின் தேக்க நிலையைப் போக்கப் பாடுபடும் முதலமைச்சராக, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் அறிவாற்றலால், நிர்வாகத் திறமையால், தமிழ்நாடு நாட்டிற்கே எடுத்துக்காட்டான மாநிலமாகத் திகழ்கின்றது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

"எடுத்த காரியம் யாவிலும் வெற்றி, எட்டுத் திக்கிலும் வெற்றி" என்று போற்றும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள், உலகின் உன்னதத் தலைவியாக, உறுதிமிக்க முதல்வராகத் திகழ்கின்றார்கள். 2006 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆற்றியுள்ள சாதனைகள் பல உள்ளன. அதுபோல, புதிய திட்டங்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டு தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைப் பட்டியலில் கல்வித் துறைக்குத் தனியிடம் உண்டு.



*"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்."*

கல்லாதவர்கள், விளையாத நிலத்திற்குச் சமமானவர்கள் ஆவார்கள் என்ற வள்ளுவரின் வாய்மொழியை மனதில் கொண்டு, எல்லோருக்கும் கல்வி எளிதாகக் கிடைக்க வேண்டும், படிக்காதவர்கள் யாருமில்லை என்ற நிலையை ஏற்படுத்த, தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 1,274 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் படிக்கும் மாணவர்களுக்கு நல்ல தரமான கல்வியைக் கொடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தால், 58,282 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியிருக்கிறார்கள். இதிலே ஊசிமுனை அளவுகூட தவறுகள் நடக்காமல், அவர்களின் தகுதியின் அடிப்படையில் நியமனம் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை மக்கள் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை, இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பிளஸ்-1, பிளஸ்-2 படிக்கும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் இலவச மிதிவண்டி வழங்கி, வரலாற்றுத் தலைவியாக மாண்புமிகு அம்மா அவர்கள், இமயத்தைவிட உயர்ந்து, மக்களின் மனதில் இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-10

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவிகளுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்கியிருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு அரசு செய்து இருக்கின்ற பல்வேறு திட்டங்களுக்கு சிகரம் வைத்தாற்போல் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் துரதிருஷ்டவசமாக விபத்துகள் காரணமாக உயிரிழக்க அல்லது நிரந்தர செயலிழப்புக்குள்ளாக நேரிடின் அத்தகைய மாணவர்களுக்கு ரூ.50 ஆயிரம் உதவித் தொகை வழங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் இந்தத் திட்டம் மக்கள் மனதில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதும்,
"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்" என்பதும்,
"தானத்திலே சிறந்தது அன்னதானம்" என்பதும்,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்பதும் பழமொழிகள். அந்தப் பழமொழிகளுக்கு சுவை கொடுத்த தலைவி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மட்டுமே. தமிழ்நாட்டில் 360 திருக்கோயில்களில், அன்னதான திட்டத்தை நடத்தும் அன்னலட்சுமி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இஸ்லாமிய மக்கள் வந்து போகும் தர்காக்களிலும், கிறிஸ்துவ தேவாலயங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி எல்லா மதமும் சம மதமாக கருதுபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகர மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க புதிய வீராணம் திட்டம். இந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் அறிவித்தபோது இங்கே இருக்கின்ற சிலர் அந்தக் குழாயில் தண்ணீர் வராது, விவசாயிகளின் கண்ணீர்தான் வரும் என்றார்கள். ஆனால், "எடுத்த காரியம் யாவும் வெற்றி" என்ற நோக்கில் இன்றையதினம் அந்தப் பகுதி விவசாயிகள் அன்பும், பாசமும் வீராணம் தண்ணீரோடு சேர்ந்து சென்னை மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கியுள்ளது.

அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறம் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழகத்தின் விடிவெள்ளி எங்கள் அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள்.

காட்டில் வாழ்ந்துகொண்டு கொடிய கொலை குற்றங்களையும், சந்தன மரக்கட்டைகளையும் கடத்தி, அனைவரையும் அச்சுறுத்தியும், யாரும் நெருங்க முடியாத அளவிற்கு காட்டாட்சி செய்துகொண்டு இருந்த கடத்தல்காரன் வீரப்பனை சுட்டு வீழ்த்தி, உலக மக்களிடையே தமிழர்களைத் தலைநிமிர வைத்து, வீரப்பன் சரித்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த வீர மங்கையாக திகழ்பவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்கு முன்னுரிமை அளிக்கும்வகையில் தமிழக முதல்வர், வாழ்நாள் சாதனையாளர் அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.



விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் வண்ணம் திட்டங்களைச் செயல்படுத்தி, விவசாய கூட்டுறவுக் கடன்களைச் சீரமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். விவசாயிகள் வாங்கிய கடனுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி, இலவச மின்சாரம்; அவர்கள் விவசாயத் தொழில் செய்வதற்கு மானிய விலையில் உரங்கள், விதைகள் போன்றவற்றை வழங்கியவர். விவசாயிகள் நலன் கருதி அவர்களது வேளாண்மை வருவாய் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகின்றது. கரும்பு பயிரிடுவோருக்கு 9 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான பிழிதிறன் கொண்ட கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு ரூ.1,014–ஐ வழங்கியது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் தொட்டது துலங்கும்; பார்வையில் பட்டது ஒளிபெறும்; தமிழகம் தங்களது பொற்கால ஆட்சியில், முதன்மை மாநிலமாக மாறிவரும் இவ்வேளையில் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மிகப் பெரிய அளப்பரிய திட்டம், விவசாய மக்கள் போற்றிப் பாராட்டுகின்ற திட்டமான – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இந்தத் திட்டத்தில் எவ்வளவு நன்மைகள்! கரு முதல் கல்லறை செல்லுகின்றவரை விவசாய மக்களுக்கு எண்ணற்ற அம்சங்கள், நலத் திட்டங்கள். மகளுக்கு திருமணம் என்றால் ரூ.5 ஆயிரம், மகனுக்கு திருமணம் என்றால் ரூ.3 ஆயிரம், 60 வயது முதிர்ந்த விவசாயிகளுக்கு மாதம் ஓய்வூதியம் ரூ.200, இயற்கை மரணம் எய்தினால் ரூ.10 ஆயிரம், விபத்தில் உயிர் இழந்தால் ரூ.1 இலட்சம், கல்வி உதவித் தொகை ரூ.1,500–லிருந்து ரூ.6,500 வரை, குழந்தை பெற்றுக்கொண்டால் ரூ.2 ஆயிரம், இப்படி பல உதவித் தொகைகளை விவசாயிகளுக்கு வாரி வழங்கியிருக்கின்ற வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நெசவாளர்கள் மகிழ்ச்சி பெற்றுள்ளார்கள். இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது, 1.64 கோடி சேலைகளையும், 1.64 கோடி வேட்டிகளையும், 3.28 கோடி மக்களுக்கு ரூ.256 கோடி செலவில் இலவச வேட்டி–சேலைகளை வழங்க உத்தரவிட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றியவர் எங்கள் அன்னை.

*பிற்பகல் 1–15*

மேலும், 2 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் புதிய சுகாதார ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய ஆண்டு காப்பீட்டுத் தொகையான ரூபாய் 200/–ஐ மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கட்டுவதற்கு ரூபாய் 4 கோடி ஒதுக்கீடு செய்து நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்தவர் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அற்புதமான திட்டத்தினால் என்னுடைய தொகுதியில் உள்ள பெரும்பாலான நெசவாளர்கள் பயனடைகின்றனர். எனது தொகுதி நெசவாளர் மக்களின் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற மாநிலங்களின் சட்டம் ஒழுங்கை ஒப்பிடும்போது, இந்தியாவிலேயே தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது என்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மிகச் சிறப்பான நிர்வாகத் திறமைதான் காரணம் என்பது உலகறிந்த உண்மையாகும். இதனால் பன்னாட்டு நிறுவனங்கள் பல இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாமல் தமிழகத்தில் தங்கள் தொழில் முதலீடுகளைச் செய்வதற்கு மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களில் முத்தான திட்டம் மகளிர் சுய உதவிக் குழு. ஆண்களுக்கு இணையாக பெண்களை உருவாக்குவதே எனது இலட்சியம் என்று முடிவெடுத்து, ஆண்களையும் மிஞ்சக்கூடியவர்கள் பெண்கள் என்ற நிலைக்கு மகளிர் சுய உதவிக் குழுவை உருவாக்கியவர் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 3 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் சுமார் 50 இலட்சம் மகளிர் உள்ளனர். இவர்கள் சுயமாக தொழில் செய்து சொந்தக் காலில் நிற்கின்றனர். இவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி பெண்கள் சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய நிலையை உருவாக்கியது, உழைக்கும் பெண்களுக்கு உறுதுணையாக இருப்பவர் நம் அம்மா அவர்கள். மகளிரைப் பாதுகாக்க ஆண்கள் போதாதென பெண்களைக் காவலர்களாக்கி, காவல் நிலையங்களை நூற்றுக்கும் மேலாக்கி, பெண்களின் காவல் தெய்வமாய் காட்சி தருபவர் நம் அம்மா அவர்கள்.

உலகமே போற்றிய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சுனாமி நிவாரண நடவடிக்கைகள், யானைகளுக்கு முகாம் ஏற்படுத்தி அவற்றிற்கு ஓய்வையும், மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் கொடுத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். பெண்களுக்கு



ஆட்டோ வழங்கியது மாண்புமிகு அம்மா. ஸ்ரீபெரும்புதூரில் நோக்கியா செல்ஃபோன் நிறுவன தொழிற்சாலையை அமைத்தவர் நம் அம்மா அவர்கள். மழை நீர் சேமிப்புத் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியது மாண்புமிகு அம்மா அவர்கள். இப்படிப்பட்ட இன்னும் பல சாதனைகளையும் செய்திருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனால்தான் இதய தெய்வம் அம்மா அவர்களை நாட்டு மக்கள் பாராட்டுகின்றனர். அடுத்த முதல்வரும் அம்மாதான் என்று மக்கள் முடிவெடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நல்ல நேரத்தில் சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வத்தின் முன்பாக பேசுகின்ற வாய்ப்பு யாருக்குக் கிடைத்திருக்கின்றதோ, இல்லையோ, எனக்குக் கிடைத்திருக்கின்றது. நான் இப்போது பேசிக் கொண்டிருப்பது தெய்வத்தின் சன்னதியில். புரட்சித் தலைவி அம்மா என்கிற தெய்வத்தின் சன்னதியில். (மேசையைத் தட்டும் ஒலி) தாயாய், தந்தையாய், ஆசானாய், அருள்புரியும் தெய்வமாய், எனக்கும் எனது குடும்பத்திற்கும் விளங்குகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதத் தாமரைகளில் எனது வணக்க மலர்களைப் பணிவன்புடன் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சை இந்தப் பேரவையில் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்பேர்ப்பட்ட சட்டப் பேரவை, எப்பேர்ப்பட்ட பெருமக்கள் வீற்றிருந்த திருச்சபை இது என்பதை நினைத்துப் பார்க்கின்றபோது, என் நெஞ்சிலே ஒரு படபடப்பும், எனது நாடித் துடிப்புகளில் ஒரு துடி துடிப்பும் ஏற்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த இடமல்லவா இது? சத்துணவு தந்த சரித்திர நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த இடமல்லவா இது? (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றின் ஒப்பற்றத் தலைவியாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீற்றிருந்து, 6–1/2 கோடி தமிழர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வரலாற்றுப் புகழ் பெற்ற பேரவை அல்லவா இது? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் கே.எஸ். விஜயகுமார் என்கிற 35 வயது இளைஞன் முகம்காட்டக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்புக்கு யாருக்கு நான்

நன்றி சொல்வது? அருஞ்சுவை உணவு ஊட்டிய தாய்க்கா? அறிவு தந்த தந்தைக்கா? என்னையும் ஒரு பொருளாக நினைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அற்புதமான இயக்கத்தின் சார்பில் என்னை வேட்பாளராக்கி, வெற்றிக் கனியைப் பெற்றுத் தந்த வீரத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கா? (மேசையைத் தட்டும் ஒலி) என்னை பெற்றது தாய் என்றாலும், என்னை வளர்த்தது தந்தை என்றாலும், எனது அரசியல் பிரவேசத்திற்கும், எனது சட்டமன்ற உறுப்பினர் அங்கீகாரத்திற்கும் காரணம் யார்? இன்று எனக்கு தாயாகவும், தந்தையாகவும் திகழும், தர்மத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–20*

என் தந்தை திரு. கே. சுதர்சனம் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட பிறகு, திக்குத் தெரியாத காட்டில் இருப்பதைப்போன்ற திகைப்பே எனக்கும், என் குடும்பத்திற்கும் ஏற்பட்டது. அப்போது ஆறுதல் சொல்ல ஓர் அன்பு தெய்வம் எங்கள் வீட்டிற்கு வந்தது. எங்கள் கண்களையே நாங்கள் நம்ப முடியவில்லை. எந்தத் திருமுகத்தை நேரில் பார்த்தால் தனது பிறவியே கடைத்தேறியதாக கழகத் தொண்டன் கருதுகிறானோ, அந்த அன்பு முகத்தினை எங்கள் இல்லத்தில் கண்டபோது, நாங்கள் வியந்தோம், (மேசையைத் தட்டும் ஒலி) விம்மிதம் அடைந்தோம், விழிகளிலே ஆனந்தக் கண்ணீர் சொரிந்தோம். அந்த அன்பு தெய்வம் ஆறுதல் மட்டுமா தந்தது? கூடவே, கும்மிடிப்பூண்டி கழக வேட்பாளர் என்ற தகுதியைத் தந்தது. கையோடு கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையைத் தந்தது. இன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசுகின்ற பெரும் வாய்ப்பைத் தந்தது. இப்படி யாரும் தர முடியாததையெல்லாம் எனக்கு தானாகவே தந்திருக்கும், தங்கத் தலைவிக்கு அல்லவா எனது ஒட்டுமொத்த நன்றியும் உரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்பின் சிகரமே, ஆற்றலின் உறைவிடமே, பண்பின் இருப்பிடமே, பாசத்தின் பிறப்பிடமே, ஏழைகளின் இதயங்களில் என்றைக்கும் சிம்மாசனம் கொண்டிருக்கும் இதய தெய்வமே, சாதனை சகாப்தமே, நடமாடும் சரித்திரமே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களே, உங்கள் பொற்பாதங்களை வழிபடுவதே எனக்குக் கடவுள் வழிபாடு. வாழ்விக்க வந்த வள்ளலே, தங்களை வணங்குவதே நான் பெற்ற பேறு. தாயே, தங்களுக்கு என் முதல் வணக்கம்.



கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலில் கிடைத்த வெற்றி, தெய்வத்திற்குக் கிடைத்த வெற்றி. அந்தத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்கு ஆண்டு கால சாதனைகளுக்குக் கிடைத்த வெற்றி அல்லவா இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வாழுகின்ற சமுதாயத்து மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதுடன், அடுத்த தலைமுறையினரையும் பற்றி சிந்தித்து தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதுதான் அறிவார்ந்த அரசியல் தலைவர்களின் செயல். இதில் முதலிடம் வகிப்பவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலம் ஆக்குவேன் என்று முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்தார். கல்வியில் முதல் இடத்தை வகிக்க, குறிப்பாக பெண் பிள்ளைகள் படிப்பில் அதிக கவனம் செலுத்த, இலவச சைக்கிள்களை பிளஸ் 1, பிளஸ் 2 மாணவிகளுக்கும், இப்போது பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கிற அனைவருக்கும் இலவச சைக்கிளை வழங்கி சாதனை படைத்து வருகிறார்.

பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்குவதில் பெற்றோர்களுக்கு அவ்வப்போது சிக்கல் ஏற்படுவது உண்டு. புத்தகம் வாங்க வேண்டுமென்றால் கடையில் புத்தகம் இருக்காது. கடையில் புத்தகம் ஸ்டாக் இருக்கும்போது, அதை வாங்குவதற்கு கையில் பணம் இருக்காது. இவ்வித நிலையால் அந்த மாணவர்களின் பாடம் படிக்கும் நிலையில் தடுமாற்றம் ஏற்படும். இப்படிப்பட்ட நிலையில் முதலாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள். இந்த இலவச பாடப் புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் காலத்தே அச்சடித்து, ஆண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்பே மாணவர்களை எதிர்நோக்கி புத்தகங்கள் காத்திருக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டு வந்த ஒரே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகம் மட்டுமல்ல, அரசு மற்றும் அரசு மானியம் பெறும் அனைத்துப் பள்ளி

[திரு. கே.எஸ். விஜயகுமார்] [2006 ஜனவரி 21

மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் கல்வி கற்கும் பள்ளிகளுக்குச் சென்றுவர, இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டமும் தர்மத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தயாள சிந்தனையில் தோன்றிய அபூர்வத் திட்டம்தான்.

முந்தைய ஆட்சியாளர்களால் சின்னாபின்னப்படுத்தப்பட்டு, சீரழிவில் இருந்த போக்குவரத்துக் கழகத்தை மீட்டு, இலாபத்தில் இயங்கச் செய்து, அந்தப் பேருந்துகளில் மாணவ–மாணவிகளை பயணிக்கச் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றபோது, நாட்டில் கடுமையான வறட்சி, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அனைத்தும் நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல், பாளம் பாளமாகப் பிளந்து கிடந்தன. தண்ணீர், தண்ணீர் என்று மக்கள் அவதிக்குள்ளாகும் வறண்ட சூழ்நிலையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் லாரிகள் மூலமும், இரயில்கள் மூலமாகவும் நெய்வேலி, வீராணம் போன்ற பகுதிகளில் இருந்து தண்ணீரைக் கொண்டுவரச் செய்து சென்னை நகர மக்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வழங்கி, மாநகரையே காலிசெய்து விட்டு, வேறு இடங்களில் சென்று குடியேற இருந்த மக்களின் அவல நிலையில் இருந்து மக்களைக் காப்பாற்றிய தீர்க்க நெஞ்சம் படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–25

இந்த நடவடிக்கைகளுக்கிடையே சென்னை மாநகரின் மக்களுக்குத் தேவைப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்காக உலக வங்கி நிதி உதவியுடன் புதிய வீராணம் திட்டத்திற்கு நடவடிக்கை எடுத்தார்.

வீராணம் திட்டம் வீணான திட்டம் என்று ஆரூடம் கூறினார்களே, அவரோடு கூட்டணி சேர்ந்துள்ள கட்சியினர் அவரைத் தொடர்ந்து கோரஸ் பாடினார்கள். இந்த வீராணம் திட்டத்திற்குக் கடன் கொடுக்கும் உலக வங்கியின் நிபுணர்கள் இத்திட்டம் சாத்தியமாகுமா, சாத்தியப்படாதா என்று ஆராயாமலா கடன் கொடுப்பார்கள் என்ற குறைந்தபட்ச சிந்தனைகூட இல்லாமல், விமர்சனம் செய்தனர். வீராணத்தில் இருந்து 220 கிலோமீட்டர் தூரம் குழாய்மூலம் சென்னைக்குக் கொண்டுவந்து, சென்னை நகரில் அவர்கள்



2006 ஜனவரி 21] [திரு. கே.எஸ். விஜயகுமார்]

வீடுகளிலேயே தண்ணீர் கிடைக்கச் செய்த தீர்க்கதரிசி தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நகர மக்களின் நெஞ்சங்கள் எல்லாம் வாழ்த்தின. ஆனால், சட்டசபைக்கே வராமல் விமர்சனம் செய்துகொண்டே முதல்வர் அம்மா அவர்களை வசைபாடிக் கொண்டே கோபாலபுர குடும்பத்தினரும் வீராணம் நீரை உபயோகிக்கின்றனர். ஆனால், சொன்னதைச் செய்து முடிப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் புரட்சித் தலைவி அம்மா அவர்களேதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதம் வந்தாலே வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாக வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த ஆண்டு மழையே கிடையாது. நான்கைந்து ஆண்டுகளாகப் பெய்யாத மழை இந்த அக்டோபர் மாதமே தொடங்கி, டிசம்பர் மாதம் வரை தொடர்ந்து 5 முறை பெய்தது.

மழை பெய்யத் தொடங்கிய உடனேயே சென்னை நகரில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்களை மேடான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று தங்கவைத்ததுடன், அவர்களுக்கு உணவுப் பொட்டலம், குடிநீர், தேவைப்பட்ட இடங்களில் மருத்துவ வசதி ஆகியவற்றை வழங்கியது முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட சிந்தனைக்கு முன்னுதாரணம்.

மும்பை நகரில் இரண்டே நாள் இடைவிடாத மழை. அதனால்தான் அந்த நகரில் வெள்ளம் சூழ்ந்தது. அங்கு நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால் வெள்ளத்தில் சிக்கி, 886 பேர் மரணமடைந்ததைப் பத்திரிகைகளில் படிக்க முடிந்தது.

சென்னை நகரில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகபட்சமாக ரூ.2,000 ரொக்கம், 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்கினார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு என்பது மக்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்து, அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதுதான் ஒரு நல்ல அரசின் கடமை என்பார்கள். இதை

முற்றிலும் அறிந்திருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பத்தினருக்கும் வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

வெள்ளம் பாதித்த பகுதியில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், குடும்ப அட்டையின் அடிப்படையில் ஆயிரம் ரூபாய் ரொக்கம், 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று அறிவிப்பை வெளியிட்டார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதைப் பொறுக்க முடியாத எதிர்க்கட்சியினர், தேர்தலுக்காக வேட்டி, சேலை, ரொக்கம் கொடுக்கிறார்கள் என்று ஒரு பக்கம் ஓலமிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சக்தி வாய்ந்த பொய்ப் பிரச்சாரம் செய்தாலும், வரும் தேர்தலில் அதிகார மமதையின் முதுகெலும்பை முறியடிக்க மக்கள் எப்போதோ தயாராகி விட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரண்டு மாத காலமாகப் பெய்த மழையின் காரணமாக 22 மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சேத விவரங்களைக் கண்டறியவும், மதிப்பீடு செய்யவும் மத்திய நிபுணர் குழுவினர் வந்து பார்வையிட்டனர். 29-11-2005 அன்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் சென்னைக்கு வந்து நாகப்பட்டினத்திற்குச் சென்று சேத நிலவரங்களையும், நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டார். மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், 'நிவாரணப் பணிகள் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன' என்று கூறியிருக்கிறார். அது ஒன்றே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த பிரயாசையுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு முதல் பாராட்டு. அவருக்கு அடுத்தபடியாக மத்திய உள் துறை அமைச்சர் மாண்புமிகு சிவராஜ் பட்டீல் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் அழிந்து விட்டன; அடித்துச் செல்லப்பட்டன; எங்களுக்கு வேறு பாடப் புத்தகங்கள் வழங்குங்கள் என்று எந்தப் பெற்றோரும் கேட்கவில்லை; எந்த மாணவரும், மாணவியரும் எங்களுக்குப் பாடப் புத்தகங்களை



வழங்குங்கள் என்று கேட்கவில்லை. இருந்தாலும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் சேதமடைந்து விட்டதால் மன இறுக்கம் ஏற்பட்டு விடக்கூடாது, படிப்பு கெட்டுவிடக்கூடாது என்று அந்த மாணவ, மாணவிகளுக்கு.....

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. நீங்கள் பேசுங்கள். உற்சாகமாகப் பேசுங்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மீண்டும் இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்கச் செய்தவர் தீர்க்கதரிசனமான முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் ரூ.1,70,000 கோடிக்கு மேல் வரவு செலவுத் திட்டத்தை தீட்டுபவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிதியமைச்சர். அவருடைய நிருவாகம் சீராக இருந்தால், தமிழ்நாட்டின்பால் அக்கறை கொண்டிருந்தால், மத்திய உள் துறை அமைச்சகம் பரிந்துரை செய்த சுனாமி நிவாரண நிதியை தமிழ்நாட்டிற்கு கொடுத்திருக்க வேண்டியதுதானே? ஏன் இன்னும் கொடுக்கவில்லை என்று மக்கள் உங்களை கேட்கிறார்கள். ஒரு கோடியே 64 இலட்சம் புடவைகளையும் ஒரு கோடியே 64 இலட்சம் வேட்டிகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நாடித் துடிப்பை உணராமல் விலைகளை உயர்த்தி, நாடித் துடிப்பை உயர்த்திக் கொண்டேயிருக்கிறது மத்திய அரசு. மக்களின் நாடித் துடிப்பை உணர்ந்து அவர்களுக்கு நாடித் துடிப்பு உயராமல் தணித்து உதவிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதனால்தான் ஆறரைக் கோடி தமிழர்களின் இதயத்துடிப்பாக விளங்கிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு என்னென்ன வகையில் இன்னும் நன்மைகளைச் செய்யலாம் என்ற வேட்கையில் உழன்றுகொண்டிருக்கிறார் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாநில அரசு ஊழியர்களுக்கு அவர்கள் தங்களது சம்பளத்துடன் பெறும் அகவிலைப்படியில் 50 விழுக்காட்டை, அடிப்படை

சம்பளத்துடன் சேர்த்ததை அரசு ஊழியர்கள் அனைவரும் வரவேற்றுள்ளனர். தங்கள் சங்கங்களின்மூலம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இவை எல்லாவற்றையும்விட ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயத்தின் மனங்களையும் கவரும் விதத்தில் அரசுப் பணி நியமன தடைச் சட்டத்தை இரத்து செய்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த நடவடிக்கை இளைஞர்களின் வரவேற்பைப் பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்தின்போது சேதமடைந்த பயிர்களுக்கு, இழப்பீட்டுத் தொகைகளை வழங்க தேசிய பேரிடர் நிவாரணத்திற்கென்று இன்னின்ன பயிர்களுக்கு இவ்வளவு தொகை வழங்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால், மத்திய அரசிடமிருந்து நமக்கு நிவாரண முன்பணமாக ரூ.1,000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநில அரசின் சார்பில் ரூ.1,114 கோடி ஒதுக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொழுது மாநில அரசின் நிதியிலிருந்து நெற்பயிர்கள், மானாவாரி பயிர்கள், ஆகியவற்றுக்கு தேசிய பேரிடர் நிவாரண உதவியாக வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை மூன்று மடங்காக உயர்த்தி, சங்கடத்தில் மூழ்கி, மூலையில் முடங்கிப் போன விவசாயிகளைத் திக்குமுக்காடச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 சதுர அடிக்குக் குறைவான கல்நார் வேய்ந்த, தகரம் வேய்ந்த வீடுகள் ஆகியவற்றுக்கும் இலவச மின்சாரம் வழங்க ஆணையிட்டு 3 இலட்சம் குடும்பங்களின் வாழ்வில் விளக்கேற்றிய குலவிளக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கோயில்கள், தேவாலயங்கள், பள்ளி வாசல்கள், சமண ஆலயங்கள் ஆகியவற்றுக்கும் மின் கட்டணங்களை குறைத்து அறிவித்த தாங்கள் சர்வமத சக்தியே! எங்கள் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் அகராதியில் முடியாது என்பதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) நடக்கும் என்பார், நடக்காது. இது சென்ற ஆட்சியில். நடக்காது என்பார், அது நடந்துவிடும். இது எங்கள் அம்மாவின் ஆட்சியில். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமயத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம்



ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். 2005–2006 ஆம் நிதியாண்டில் தடை செய்யப்படாத புறம்போக்கு நிலங்களை மேம்படுத்தி பட்டா வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதை மக்களும் முழு மனதோடு வரவேற்றனர். இப்பொழுது நான் முன்வைக்க விரும்பும் கோரிக்கை, வீட்டுமனைப் பட்டா வழங்க தடை செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்கள். அரசாணை எண் 168–ன்படியுள்ள புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் மக்களுக்காக தடை ஆணையை தளர்த்தி, அங்கு குடியிருக்கும் ஏழை கூலித் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு பட்டா வழ்ங்க நடவடிக்கை எடுத்தால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ வழிவகுத்தவர் ஆவீர் நீங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–3.5

மண்ணின் மைந்தனாய் என் மண்ணில் உலா வர,

மறையாத முகவரி தந்த மாணிக்கமே!

எண்ணில் அடங்காத எழிலார்ந்த நன்றியை

எளியோன் தருகிறேன், ஏற்றிடுவீர்!

சொல்லின் வலிமை, செயலின் வலிமையென

விளங்கும் சொற்சித்திரமே!

தங்கள் பொற்பாதங்களில் என் நன்றியையும்

என் தொகுதி மக்களின் நன்றியையும்

தொகுத்துத் தருகிறேன்! பகுக்காமல் ஏற்றிடுவீர்!

பண்பான தலைவியே! என் பணிவான வணக்கம்!

தங்கள் பொற்பாதங்களை வணங்கி,

எனது கன்னி உரையை முடித்துக்கொள்கிறேன்!

நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 23–1–2006, திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–3.5 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

31. (i) யாதொரு வணிகர், அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் சென்னை திருவாளர்கள் ப்ளூ க்ராஸ் ஆஃப் இந்தியா நிறுவனம் சான்றளித்த, உறுதிமொழி ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு உட்பட்டு, அவர், திருவாளர்கள் ப்ளூ க்ராஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்திற்கு விற்பனை செய்த கால்நடைகளுக்கான அவசர ஊர்திகளைப் பராமரிப்பதற்குரிய உதிரி பாகங்கள், கால்நடை தீவனம் மற்றும் கால்நடை மருத்துவமனையைப் பராமரிப்பதற்குத் தேவையான அனைத்துப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனை மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தும்; (ii) சென்னை, திருவாளர்கள் ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட TN 07 AB 3902 ஆம் பதிவு எண் கொண்ட கால்நடைகளுக்கான அவசர ஊர்தியின் விற்பனை மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தும் வணிக வரிகள் துறையின் 23-6-2005 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. (i) 4-5-1994 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு-1 ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் சமய அறநிலையத் துறையின் 31-3-1994 ஆம் நாளிட்ட II(1)/வணிக வரி, சமய அறநிலையத் துறை/41/1994 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தும்; (ii) 17-12-1997 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம்-IIல் பிரிவு-1ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் சமய அறநிலையத் துறையின் 21-11-1997 ஆம் நாளிட்ட பின்னர் திருத்தப்பட்டவாறான II(1) வணிக வரி, சமய அறநிலையத் துறை/100/1997 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தும்; (iii) சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கி, இயக்கி, பராமரிக்க யாதொரு வணிகரால் விற்பனை செய்யப்படும் பொருட்களின்மீது செலுத்தத்தக்க விற்பனை வரி, தண்டக் கட்டணம், மறுவிற்பனை வரி, கூடுதல் வரி







ஆகியவற்றிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 28-6-2005 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக திருமலை சாரிட்டி ட்ரஸ்ட், சென்னை என்ற அமைப்பிற்கு மூன்று நீர்சுத்திகரிப்பு சாதனங்களை நன்கொடையாக வழங்கியுள்ள திருவாளர்கள் சிவ்சு வாடெக் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் விற்பனை செய்ததின் மீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் விலக்களித்து, வணிக வரிகள் துறையின் 6-7-2005 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. (i) 7-2-2005 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின், 7-2-2005 ஆம் நாளிட்ட II(1)/CT/7(b)/2005 ஆம் எண்ணிடப்பட்ட அறிவிக்கையை ரத்து செய்தும், (ii) திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 13 மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளுக்காக விற்பனை செய்கிற சிமெண்ட், தட்டையான அல்லது மேடுபள்ளங்களுள்ள கல்நார் சிமெண்ட் தகடுகள், சிமெண்ட் பொருட்கள், கல்நாரிலான பொருட்கள், கல்நார் சிமெண்ட் பொருட்கள் மற்றும் மட்குழாய்கள் ஆகியவற்றின் மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில், உறுதிமொழி ஒன்று தாக்கல் செய்வதற்கு உட்பட்டு விலக்களித்தும் வணிக வரிகள் துறையின் 22-7-2005 ஆம் நாளிட்ட 85 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2006 ஜனவரி 21

35. தமிழ்நாட்டில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2,500 வீடுகளைக் கட்டுவதற்காக, சென்னை, திருவாளர்கள் மாதா அமிர்தானந்தமாயி மடத்திற்கு அறிவிக்கையின் பின்னிணைப்பு IIல் பட்டியலிடப்பட்டுள்ள கட்டுமானப் பொருள்களை விற்பனை செய்யும் யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் அறிவிக்கையின் பின்னிணைப்பு Iல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் மேற்சொன்ன மடத்திலிருந்து சான்றிதழைப் பெறுவதற்கு உட்பட்டு விலக்களித்து வணிக வரிகள் துறையின் 29-7-2005 ஆம் நாளிட்ட 87 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள தொழில் பிரிவான திருவாளர்கள் நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள முதன்மைத்துணை ஒப்பந்ததாரர்கள் ஆயத்த அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவதில் பயன்படுத்துவதற்காக பொருட்களை விற்பனை செய்யும் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க விற்பனை வரி, கொள்முதல் வரி, மேல் வரி, மறுவிற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றிற்கு விலக்களித்து வணிக வரிகள் துறையின் 27-9-2005 ஆம் நாளிட்ட 101 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

39. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு



2006 ஜனவரி 21]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

29. 2004-2005 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை.

30. 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவு திட்ட வெளியீடுகள். (55 புத்தகங்கள்) (வரவு-செலவுத் திட்ட வெளியீடு எண் 51 தவிர)

31. 2006-2007 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

32. 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

33. 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு. (பகுதி-I)

34. 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

35. 2006-2007 ஆம் ஆண்டில் 'உடனடிச் செலவுக்கான' மானிய அனுமதி.

36. 2006-2007 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

37. 2006-2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

38. 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

39. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2003-2006)

[2006 ஜனவரி 21

40. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2003–2006)

41. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2003–2006)

42. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2006)

43. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2003–2006)

---

D
V214,31P06
P06.89.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227005
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.